வசந்தம்

292
N42Vm
N43.2.1
199784

194

P. A. ராஜா செட்டியார் & பிரதர்

தந்தி: "ராஜா"　　　　டெலிபோன் நெ. 218. A.

புன்னகையிலும் சிறந்த

பொன் நகைகள்!

நம்பிக்கைக்குப் பாத்திரமான எங்கள் நவரத்ன மிழைத்த பொன்னாபரணங்களும், தங்கம்—வெள்ளி இன்னும் வேலைப்பாடமைந்த பாத்திரங்களும் தென்னாட்டுக் குடும்பம் ஒவ்வொன்றையும் அலங்கரிக்க வேண்டியது அவசியம். கியாதிபெற்ற எங்கள் நகைகளைப் போற்றாதவர்களே கிடையாது.



அழகு மிக்க ஆபரண மாளிகை!

பெரியகடைவீதி　　:　:　　கோயமுத்தூர்.

தந்திவிலாசம் : FLOWER. டெலிபோன் நெ. 175.

சௌத் இந்தியா கார்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்.

இரும்பு, எலக்ட்ரிக், மில் ஸ்டோர்ஸ் வியாபாரிகள்,

அவனாசி ரோடு, கோயமுத்தூர்.

சேர்மன் போர்டு ஆப் டைரக்டர்ஸ்

டாக்டர். ராஜா. சர் அண்ணாமலை செட்டியார், KT. LL. D.

ஆப் செட்டிநாடு.

தலைமை ஆபீஸ் செட்டிநாடு.

எங்களிடம், எல்லாவிதமான டாட்டா இரும்புச் சாமான்களும், கலாய் குழாய்களும், நீலகிரி மார்க் சிமிண்டும், குட்லஸ் வால்வர்ணம் வகையறுக்களும், சானிபட்டரிச் சாமான் களும், எலக்ட்ரிக் பல்புகள், வயர்கள், பங்காக்கள், மோட்டார், சுவிட்சுகள், முதலியவைகளும், மில் ஸ்டோர்ஸ், பாபின்ஸ், தோல் பெல்ட்டுகள், கிராப்ட் பேப்பர், ஊப் தகடுகள், கித்தான்கள் கிடைக்கும்.

பிராடியூஸ் டிபார்ட்மெண்டு,

21/138, 139, ரெங்கய்ய கவுடர் தெரு

நெல், அரிசி, கோதுமை, ரவை, மாவு தினுசுகள், சர்க்கரை, நவதானியங்கள், மற்றுமுள்ள மளிகை சாமான்கள் எங்களிடம் மொத்தமாகக் கிடைக்கும்.

பீஸ் கூட்ஸ் டிபார்ட்மெண்டு ("கமர்ஷியல் எம்போரியம்")

21/138, 139 ரெங்கய்ய கவுடர் தெரு

பல மில்களில் தயாராகும் ஷர்ட்டிங், கோட்டிங், மல், லாங்க்ளாத், வாயில்ஸ், சீட்டி தினுசுகள், டிரில், டுவில், வேஷ்டிகள், துண்டுகள், இன்னும் பலவிதமான மில் ஜவுளி தினுசுகளும், எங்களிடம், மொத்தமாகவும், சில்லரையாகவும், சகாயமாகவும் கிடைக்கும்.

PSG பம்புகள்



தேவைகளுக்குத் தகுந்தபடி எல்லா அளவுகளிலும் செய்யப் படுகின்றன. இவைகள் அதிர்ச்சியில்லாமல் தொடர்ந்து வேலை செய்யக் கூடியவை.

நாங்கள் விற்பனை செய்துள்ள ஒவ்வொரு பம்பும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்த தென்பதையும், அபிவிருத்தி செய்யப்பட்ட தென்பதையும், நீடித்து உழைக்கக்கூடிய தென்பதையும் நிரூபித் திருக்கிறது.

எல்லாவித வேலைகளுக்கும் தகுந்த பம்புகள் எங்களிடம் கிடைக்கும்.

விவரங்களுக்கு எழுதவும்:-

P. S. G. & சன்ஸ்

தர்மஸ்தாபன இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிடியூட்

பீளமேடு. கோயமுத்தூர். தென்னிந்தியா.

மலர் 2

வசந்தம்

இதழ் 1

பொருளடக்கம்

வசந்தம்
சர். ஆர். கே. எஸ்
வாழ்த்து...கவி நே. வி
பண்பாடும் தமிழ் நாடும்
டி. கே. சி. 7
விசுவ ரூபதரிசனம்
ராஜாஜி 12
கடைசி வெற்றி
ஆர். ஷண்முக சுந்தரம் 16
வாழும் வகை
டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி 23
கலைக் கோயில்
சுவாமி சுத்தானந்த பாரதியார் 25
சிலப்பதிகாரம்
ஆர். கே. சண்முகம் செட்டியார் 32
அழியாத அழகு...பெ. தூரன் 38
பாவைப் பாட்டு
மு. அருணாசலம் எம். ஏ. 44
ஒரு ஆசை ....சரத்சந்திரர் 48
புத்தக ஆராய்ச்சி...ஆர். கே. எஸ் 52
ஹரிஜனப் பெண்
பி. கோதண்டராமன் எம்.ஏ,பி.எல்.54
தமிழ் மணி.. ...டி. கே. சி 60
தங்கம்மா
திருஞானம் 66

விலை 12 அணா

ரோடுகள்:- யுத்தத்திற்குப் பின் கவனிக்கப் பட வேண்டிய முக்கிய காரியங்களில் ஒன்று



C.M.I.
DISTRIBUTORS OF
A.C.C. & DALMIA CEMENTS

நீங்கள் இந்தியன் காங்கிரீட் ஜர்னல் ரோட்ஸ் மலரை வாங்கிவிட்டீர்களா? இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் ரோடுகள் அபிவிருத்தியில் தேர்ந்த நிபுணர்களது 20 வியாசங்கள். (60 பக்கங்கள்) விலை அணு 10. (தபால் சார்ஜ் இலவசம்.)

விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

தி காங்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா, ஏஷியாடிக் பில்டிங்ஸ்,
கெம்ப கௌடா ரோட், பெங்களூர் சிடி.

நீண்டதமி ழால் உலகை
நேமியன் அளந்தான்

—கம்பர்

வசந்தம்

சித்திரை மாதம். வசந்த காலம். இயற்கை அழகு புத்துயிர் பெற்று புன்னகை புரியும் காலம். மல்லிகை, முல்லை மலர்கள் அழகிய மாதர்களின் பற்களைப் போல் வெண்ணிறமாய் மலர்ந்து மக்களின் மனதைக் களிப்பிக்கும் காலம். இளந் தென்றல் நறு மணத்துடன் உலவும் காலம். காதலர் விரும்புவதும் வசந்த காலமே.

தமிழுக்கும் இப்போது வசந்த காலம்தான். தமிழ்க் கலை புத்துயிர் பெற்றிருக்கிறது. தமிழ் நாட்டு மக்கள் மனதில் தமிழ் அபிமானம் மலருகிறது. தமிழ்க் கலை மணம் எங்கும் வீசுகிறது. இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் தமிழ் மக்களுக்கு ஊக்கம் உண்டாயிருக்கிறது.

வசந்தம் இந்த ஊக்கத்தை வளர்க்கும் ஒரு கருவியாக இருக்க வேண்டு மென்பது நம்முடைய ஆசை. சாதி, மதம், கட்சி வித்தியாசமில்லாமல் எல்லாத் தமிழ் வீடுகளிலும் வசந்தம் உலவ வேண்டு மென்னும் எண்ணத்துடன் வேற்றுமையை வளர்க்கும் அரசியல் விவாதங்களுக்கு வசந்தத்தில் இடம் அளிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்.

தமிழ் மொழியிலுள்ள கலைச் செல்வத்தின் அருமை பெருமைகளை வெளிப்படுத்துவதும், பொதுவாகக் கலை சம்பந்தமான கட்டுரைகளைப் பிரசுரிப்பதுமே வசந்தத்தின் முக்கிய நோக்கமாகும். இதில் கையாளப்படும் நடை எளிதானதாயும், சரளமானதாயும், இலக்கிய அழகு பொருந்தியதுமான வசன நடையாயிருக்க வேண்டு மென்பது எங்கள் நோக்கம்.

வசந்தம் தொடங்கும் இந்த முயற்சிக்கு தமிழ் நண்பர்கள் எல்லோரும் ஆதரவு அளிப்பார்கள் என்று நம்புகிறோம்.

... ஆவணக் காப்பக நூலகம்
199784
... 60 / 6.87

வாழ்த்து

[கவி தேசிக விநாயகம் பிள்ளை]

பாடா இளங்கிளியும்
பாடுமே பாட்டினிசைக்
காடா இளமயிலும்
ஆடுமே — வாடாது
செய்ய தமிழ் போற்றும்
திருமா வசந்த மிவ்
வைய மெலாம்
வாழ்த்த வரின்

தேடாத கண்ணெல்லாம்
தேடுமே செந்தமிழைப்
பாடாத வாயெல்லாம்
பாடுமே — நாடோறும்
ஏழை எளியர்
எவரு முள மகிழ்ந்து
வாழ
வசந்தம் வரின்

நாடும் நகரும்
நகர்ப்புறமு மப்புறத்து
வீடும் தமிழ் மணம்
வீசுமே — நீடுபுகழ்
ஈச னருளால்
இனிய வசந்த மிரு
வாசம்
கமழ வரின்

பண்பாடும் தமிழ்நாடும்

[டி. கே. சிதம்பரநாத முதலியார்]

அதிசயம் நிறைந்த நாடு

"வட நாட்டிலுள்ள சரித்திர நிபுணர்கள் தமிழ் நாட்டின் பண்பாட்டைக் குறித்துச் சொல்லும்போது, தமிழ்நாடு அதிசயம் நிறைந்த நாடு என்று சொல்லுவார்கள். ஆனால் அதிசயத்திலும் அதிசயம் என்னவென்றால்,-- இதுவரை யாருமே அதை ஆராயவில்லை, ஆராய்ந்ததின் பயனைப் பிறருக்கு உதவவில்லை என்பதுதான்."*

இது சொன்னது யார்: வடமொழி ஆராய்ச்சியிலும், இந்திய சரித்திர ஆராய்ச்சியிலும் உலகப் பிரசித்திபெற்ற டாக்டர் **பந்தர்கர்**. அவர் கல்கத்தா யூனிவர்சிட்டியில் சரித்திர ஆராய்ச்சித் தலைவர். அவரது தந்தையார் வடமொழியில் மிகத் தேர்ந்து உலகப் பிரசித்தி பெற்ற டாக்டர் **பந்தர்கர்**தான். தந்தையாரின் கல்வி அவ்வளவையும் தனக்கு உரிமையாக்கிக் கொண்டவர் குமாரர். குமாரருக்கு இப்பொழுது வயசு எழுபதுக்கு மேல். இந்தக் குமாரர் அல்லவா பேசுகிறார் தமிழ் நாட்டைப்பற்றி!

பண்பாடு என்றால் என்ன:

ஆங்கிலத்தில் கல்ச்சர் என்று சொல்லுகிறதுதான் அது.

பண் பட்ட நிலம்

பண்பட்ட நிலம் என்று சொல்லும் விஷயம் நமக்கு நன்றாய் விளங்குகிறது. ஏதோ பல ஆண்டுகளாக, ஏன் பல நூற்றாண்டுகளாக உரம்ஏற்றி உழுது பயிரிட்ட நிலம் என்று அறிந்து கொள்ளுகிறோம். அப்பேர்ப்பட்ட நிலத்தில் மேனி அதிகமாய் இருக்கும் என்பது மாத்திரம் அல்ல; அதில் விளைகிற உணவுப் பொருள்களுக்குத் தனியான சுவை உண்டு; சத்தும் உண்டு.

நிலத்தை விட்டுவிட்டு, மக்களைப் பற்றிப் பேசும்போதும் பண்பட்ட உள்ளம் என்றும், பண்பட்ட வாழ்க்கை என்றும் சொல்லுகிறோம்.

பண்பட்ட உள்ளம் என்னும் போது பண்பட்ட என்கிற வார்த்தை, நிலத்தை பண்படுத்தியது போல என்று குறிக்கிறது. நிலத்தோடு ஒட்டிவருகிற வார்த்தை தான் அது. விசித்திரம் என்னவென்றால் ஆங்கில வார்த்தையாகிய கல்ச்சரும் நிலத்தை ஒட்டிவருகிற வார்த்தையாகத்தான் இருக்கிறது.

நிலத்தைப் பற்றிப் பேசும் போது வார்த்தையின் பொருள் விளங்கி விடுகிறது. நிலத்தைக் கண் கூடாகப் பார்த்துக் கொள்ளுகிறோம்.

---

* டாக்டர் பந்தர்கர், சென்னை யூனிவர்சிட்டியில் செய்த மில்லர் உபன்னியாசம். ஹிந்து பத்திரிகை 1—3—39.

பண்பட்ட உள்ளம் வாழ்க்கை

ஆனால் உள்ளத்தைப் பற்றிப்பேசுவோமானால் கஷ்டமாய்ப் போய்விடுகிறது. உள்ளமும் வாழ்க்கையும் அவ்வளவு எளிதாகக் கண்முன் வருவதில்லை.

ஆகையினால்தான், பண்பாடு என்பதற்கு இலக்கணம் வகுக்கிற காரியம் முடியாத காரியம் என்று சொல்லி விடுகிறார்கள்.

ஆனாலும் பண்பாட்டைப் பற்றி சில குறிப்புகள் சொல்லலாம்.

புஸ்தகமும் பண்பாடும்

புஸ்தகத்தைப் படித்து ஒருவருக்கு பண்பாடு கைவரும் என்பது கிடையாது. அகராதிகளை எல்லாம் படிக்கலாம், சையன்ஸ்களை எல்லாம் படித்து விடலாம். பெரிய புஸ்தகசாலை ஒன்றிலுள்ள புஸ்தகங்களை எல்லாம் பரீக்ஷைக்குப் படிக்கிற மாதிரி கரைத்துக் குடித்து விடலாம். ஆனாலும் பண்பாடு கை வந்துவிட்டது என்று சொல்ல முடியாது.

அறிவியல் கலைகள்

தற்காலத்தில் எந்திரத்தின் மர்மங்கள்தான் என்ன! பகுத்தும் நுணுகியும் தேடித் தேடிக் காணுகிற விஷயங்கள் தான் என்ன! ஒவ்வொரு துறையும் ஒரு உலகமாகவே இருக்கிறது. அம்சம் ஒவ்வொன்றுமே அதிசயிக்க வேண்டிய அற்புதமாக இருக்கிறது.

இவ்வளவெல்லாம் இருந்தும், அடடா பண்பாடு என்பது குறைந்து போய்விட்டதே என்றுதான் அறிஞர்கள் சொல்லுகிறார்கள். மேல் நாட்டைப் பற்றியே அங்குள்ள அறிஞர்கள் சொல்லுகிறார்கள். நம்முடைய நாட்டைப்பற்றி எடுத்துச்சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

உண்மையில் பண்பாடு சிறு விஷயத்தை ஒட்டியதாகவே இருக்கலாம். பெரிய விஷயத்தையும் பற்றி இருக்கலாம். விருந்துண்ணல் என்கிறது சாமானிய விஷயந்தான்.

மேல் நாட்டு விருந்து

மேல் நாட்டார் அதைப் பிரமாதப் படுத்தி எழுதுகிறார்கள். அவர்கள் அதை மிகவாக அனுபவிக்கிறார்கள். பல நூற்றாண்டுகளாக அனுபவித்து வந்த காரியந்தான். அதெல்லாம் நமக்கு விளங்குவதில்லை.

பீங்கான் தட்டுகள் கண்ணுக்குத் தெரிகின்றன. குழைகளையும் புஷ்பங்களையும் கலசங்களில் சொருகி வைத்திருக்கிறார்கள். வண்ணான் வெளுத்த துப்பட்டியை மேஜை மேல் விரித்திருக்கிறார்கள். கத்தியும் முள்ளும் பள பள என்று கிடக்கின்றன. மேல் நாட்டாருக்கு இதையெல்லாம் பார்க்கும் போதே ஒரு தனியான மன எழுச்சி உண்டாகிறது.

மகேசுர பூஜை

நம்முடைய காரியம் வேறு. தளத்தைச் சுத்தமாய் மெழுகிக் கோலமிட்டு தலை வாழை இலைகளை ஒழுங்காய்த் திருத்தி, ஒழுங்குபடப் போட்டு ஒவ்வொரு இலைக்குப் பக்கத்திலும் பச்சை இலைத் தொன்னையும் வைத்து விட்டால், நமக்கு உண்டாகிற மன எழுச்சியை இன்னதென்று சொல்ல முடியாது.

எத்தனை ஆயிரக் கணக்கான வருஷங்களாக இந்த எற்பாடும் அனுபவமும் நம்மவரிடத்தில் இருந்து வந்திருக்கிறது என்பதை யோசிக்க வேண்டும். இலை போட்ட இடத்தில் தனியான அழகு வந்து குதித்து விடுகிறது. தெய்விகமே வந்து பரவுகிறது. மகேசுர பூஜை என்று நம்முடைய விருந்துக்குப் பேரிட்டார்கள் நம்மவர். கற்பூர தீபம், தூபம் புஷ்பார்ச்சனை எல்லாம் சமர்ப்பிக்கிறார்கள். சாஷ்டாங்கமாகப் பெரியோர்கள் நமஸ்கரிக்கிறார்கள்.

கப்பலை விட்டு இறங்கி வந்த மேல் நாட்டார் ஒருவர் இதையெல்லாம் பார்க்கிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். அவருக்கு ஏதாவது விளங்குமா? 'என்னடா இது! ஏதோ அகலமான இலையை விரித்திருக்கிறது! கரண்டி, முள்ளு, கத்தி ஒன்றையும் காணோம். கோப்பை பீங்கான் ஒன்றும் இல்லை. மேஜை நாற்காலியோ கிடையவே கிடையாது; விருந்தாவது ஒன்றுவது. எல்லாம் சித்திர வதைதான், பட்டினிதான், வழிபாடு வேறு இதற்கு!' என்றுதான் சொல்லத் தோன்றும். அப்படித் தோன்றுவது இயல்புதான்.

இயற்கை அன்னையின் கை

மகேசுர பூஜையிலுள்ள அழகோ தெய்விகமோ அவருக்குத் தென்படாதுதான். கொஞ்சம் யோசனை பண்ணுவாரானால் நம்முடைய விருந்து எவ்வளவு எளிமையாய் அமைந்து விடுகிறது! இயற்கை அன்னையின் பச்சைப் பசுங்கை அல்லவா அங்கே வந்து நீளுகிறது என்று கொஞ்சம் வியக்க நேரிடும் அவருக்கு. குழையையும் வாசனையற்ற புஷ்பங்களையும் பிய்த்து வைத்துக் கொள்ளுகிற காரியம் அல்ல அது, என்றும் தோன்றலாம்.

தமிழனாய்ப் பிறக்க வேண்டும்

அதிலுள்ள உணர்ச்சியையும் மன எழுச்சியையும் அதாவது பண் பாட்டை அறியவே முடியாது. அறிவதற்குத் தமிழனாய்ப் பிறந்திருக்க வேண்டும். வேறு வழியில்லை.

வாழையைப் பற்றி ஒருவர் எவ்வளவோ ஆராய்ச்சி செய்திருக்கலாம். லத்தீன் பாஷையில் அதற்கு எப்படி நாமகரணம் செய்திருக்கிறார்கள், மற்றப் பூண்டுகளோடும் மரங்களோடும் இன்ன உறவில் நிற்கிறது என்றெல்லாம் ஆராய்ச்சி செய்திருக்கலாம். வாழை இலையின் அமைப்பைப் பற்றியும் எத்தனையோ உண்மைகளைக் கண்டிருக்கலாம். ஆனாலும் மகேசுவர பூஜையிலுள்ள பண்பாட்டைக் கண்டிருக்க வேண்டியது அவசியமில்லை.

ஒரு நல்ல குழாத்தோடு நீண்ட காலமாக அனுபவித்து வருகிற நயம்தான் பண்பாடு. இனி:

சமய அடையாளங்கள்

பெரிய விஷயம் ஒன்றை எடுத்துக் கொள்ளுவோம். சிலுவை என்பதாக ஒன்று. அது ஒரு அடையாளம். அதை எத்தனையோ துறையில் வைத்து கிறிஸ்தவர்கள் அனுபவித்திருக்கிறார்கள். சிலுவை சம்பந்தமாக கவிகள் எத்தனை, கதைகள் எத்தனை எல்லாவற்றையும்விட இதயத்தைப் பண்படுத்தி யிருப்பதைப் பார்த்தால் அது ஒரு நெடுஞ் சரித்திரம்.

அப்படியே பிறைச் சந்திரன் ஒரு அடையாளம். அதிலிருந்து எவ்வளவோ உணர்ச்சிகள் இதயப் பண்பாடுகள் உண்டாய் முஸ்லிம் மதத்தை வளம் செய்திருக்கிறது.

சிலுவையிலிருந்து புறப்பட்டு வந்த பண்பாட்டு வளம் இத்தன்மையது என்று அயலாருக்குத் தெரியாது. அப்படியேதான் பிறையிலிருந்து பிறந்து வந்த பண்பாட்டு வளத்தை மற்றவர்கள் அறிய முடியாது. ஏன்? பிரான்ஸ் இத்தாலி முதலிய தேசங்களிலுள்ள சமயப் பண்பாட்டை இந்தியாவிலுள்ள கிறிஸ்தவர்கள் கண்டு அனுபவிப்பதே கஷ்டம். அரேபியா, பெர்ஷியா ஆகிய தேசங்களிலுள்ள சமயப் பண்பாடு தனியான பண்பாடுதான்.

தமிழ் நாட்டில் இரண்டு சமயங்கள் பூர்வமாக ஏற்பட்டுள்ளன. அதாவது சைவம், வைஷ்ணவம். ஒவ்வொன்றும் பல

அடையாளங்களை வைத்துச் சமயப் பண்பாட்டை வளர்த்திருக்கின்றன. கிருஷ்ண பரமாத்மா, ராம மூர்த்தி, விஷ்ணு மூர்த்தி, இந்த மூர்த்திகளை வைத்து எத்தனையோ அனுபவங்களும் கலைகளும் வளர்ந்திருக்கின்றன.

தமிழ் நாட்டில் இரண்டு சமயங்கள்

சைவத்தின் கிளைகளை இத்தனை என்று எண்ணிச் சொல்ல முடியாது. முருகன், விநாயகர், சக்தி தேவதைகள் -இவைகளைப் பார்த்தால் முடிவில்லை. எல்லாம் சிவலிங்கம் என்ற மூர்த்தியிலிருந்து விளைந்தன. ஒவ்வொரு கிளையிலிருந்தும் உண்டான பண்பாட்டை இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. நவநாகரிகம் வந்து புகுந்து, மறந்து விட்டோம், புறக்கணித்து விட்டோம் என்ற காரணமாக பண்பாடு இல்லை யென்று, சாதித்து விடமுடியாது. எத்தனை அற்புதமான கோவில்கள் சமயக்குறி யீடுகளிலிருந்து பிறந்திருக்கின்றன, வளர்ந்திருக்கின்றன. சிவன் கோவில்கள் எத்தனை, முருகன் கோவில்கள் எத்தனை, பிள்ளையார் கோவில்கள் எத்தனை, வழிப்பாதை,ஆற்றங்கரை குளக்கரை, குன்றின் சிகரம், அலையொலி முழங்கும் கடற்கரை எங்குமே சைவமணங் கமழவில்லையா?

சைவம்

கோவில் என்றால் வெறும் கல்லா, தூணா?

நந்தவனமும் பூவும் வந்து கோயிலுக்குள் புகுந்து அலங்கரிப்பதைப் பார்க்கவேணும்; தூபம் கமழ்ந்து பிரகாரம் பிரகாரமாக உலவுவதை அனுபவிக்கவேணும்; சங்கீத வாத்தியங்களில் எல்லாம் சிறந்ததாக எண்ணுகிற மேளத்திலிருந்து புறப்படுகிற இசை வெள்ளம் பெருக்கெடுத்து நாலா பக்கமும் தெருவழியாக ஓடி வீடு வீடாகப் புகுந்து சமையல்க்கட்டு வரைபோய் இன்பம் ஊட்டுவதைப் பார்க்க வேணும்; ஏதோ ஐயாயிரம் பதினாயிரம் என்று கணக்கிட்டுச் சொல்ல வேண்டிய பூர்வ காலத்திலிருந்தே பிறந்து வந்த பண்களையும் (ராகங்களையும்) பாடல்களையும் இரண்டும் சேர்ந்து ஆட்டுவிக்கிற நடனங்களையும் அனுபவிக்க வேணும்; ஊர் ஊராய் அல்லவா இவ்வளவும் அமைந்திருக்கின்றன. இவ்வளவோடு ஒட்டிப் பழகாத மக்களுக்கு இந்தப் பண்பாடு எவ்வளவு அற்புதமானது என்று தெரியாதுதான். அயலாரைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. பண்பாட்டுக் குரிய தமிழர்களையே கண்ணும் பொத்தி வைத்து விளையாடி விட்டது அது. கோயிலும் கோயிலுள் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியும் எத்தனை அற்புதங்களை மேலே சொன்ன முறையில் சாதித்திருக்கின்றன பாருங்கள்.

இதயம் விளைத்த அற்புதங்கள்

தமிழ் மக்கள் இந்த விதமாக ஒவ்வொரு விஷயத்தையும் இதயங் கொண்டு நீண்ட காலமாகத் தேய்த்துத் தேய்த்து அற்புதமான உணர்ச்சிகளையும் நயங்களையும் பிறக்கச் செய்திருக்கிறார்கள். 'சிற்பம், சித்திரம் ஓவியம் ஆகிய இவைகள்தமிழ் நாட்டில் விளக்கம் பெற்றிருப்பது போல் வேறு எங்கேயும் கிடையாது.'* நடனம் கவிதை, சங்கீதம் ஆகியகலைகளும் உலகத்தார் கண்டு அதிசயிக்க கூடியனவாய் அமைந்திருக்கின்றன. இதை நம்மவர்கள்

* பிரிட்டிஷ் மியூஸியத்துக் கலை அரங்குக்குத் தலைவர் ரோதன்ஸ்டீன் சொல்லுவது.

கூட இப்போது உணர்ந்து வருகிறார்கள்.

திருக்குற்றாலத்துக் கோயிலுக்குள் ஒரு சன்னதி: ஸ்தல விருக்ஷமாகிய பலா மரந்தான் அது. அந்தப் பலா மரத்துக்குத் தினந்தோறும் மூன்று வேளையும் சகலவித வழிபாடுகளும் நடக்கின்றன.

தலை முறை தலைமுறையாகத் தமிழ் மக்களது இதயம் அந்தப் பலா மரத்தின் வேரோடும் தூரோடும் அதன் இலையோடும் நரம்புகளோடும் ஒட்டி வந்திருக்கிறது. பலாப்பழத்துக்குள் பொதிந்தே வந்திருக்கிறது. எத்தனை எத்தனையோ தத்துவங்களோடு திளைத்து அனுபவித்திருக்கிறது. இந்த உயர்ந்த பண்பாடு எவ்வளவு உயர்ந்த பதவிக்கு மக்களைக் கொண்டு போகிறது பார்க்கலாம்.

வேதம் விதைத்த வித்து

ஞானிகள் உலகம் எங்குமே இருந்திருக்கிறார்கள். அந்த ஞானிகளுக்குத் தாங்கள் அனுபவித்த அனுபவங்களைப் பாடல்களாகப் பாடவேண்டுமென்று ஆவேசம். அப்படியே பாடியுமிருக்கிறார்கள். அந்தப் பாடல்களில்(வேதங்களில்) கடவுள் தத்துவம் அத்தனையும் காணலாம் தான்.

ஆனாலும் வேதங்களுக்கு அவ்வளவு தெளிவு இல்லையாம். அது காரணமாக அந்த வேதங்கள் ஒரு யுக்தி பண்ணின. ஒரு பலாக் கொட்டையை எடுத்துக் குற்றாலத்து மண்ணில் ஊன்றி விட்டன. பக்தர்களைப் பார்த்து கடவுள் தத்துவமும் சொரூபமும் இதிலிருக்கிறது, இதோ பாருங்கள் என்று சொல்லி விட்டனவாம்.

“ வேதம் ஊன்றும்
பலாவுள்ள நாடு ”

என்று பலாவோடு ஒன்றாய்க் கலந்து சொல்லுகிறார் பக்தர். (குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர்.)

மரக்கிளையே சதுர் வேதம்

கிளை யொன்றை ஆராய்ந்து பார்த்தால் அதனுடைய தத்துவங்களை யெல்லாம் எந்த சயன்ஸ் நிபுணர்தான் அளவிட முடியும்? கோடானு கோடி வருஷங்களாக அல்லவா எண்ணிறந்த அற்புதங்கள் விளைந்து வந்திருக்கின்றன. அதில் கிளைக்குள் அல்லவா இருக்கிறது சானித்தியம். இறைவனது சொரூபமே அதனிடமிருந்து கொழுந்து விட்டு வருகிறது.

குறவஞ்சி ஆசிரியர் எப்படித் தமிழனது உள்ளப் பண்பாட்டை எடுத்துக் காட்டுகிறார் பாருங்கள்.

கிளைகளாய்க் கிளைத்த பல
கொப்பெலாம் சதுர் வேதம்,
கிளைகள் ஈன் ற
கலையெலாம் சிவலிங்கம்
கனியெலாம் சிவலிங்கம்,
கனிகள் ஈன் ற
சுளையெலாம் சிவலிங்கம்,
வித்தெலாம் சிவலிங்க
சொரூபமா க
விளையும், ஒரு குறும்பலவில்
முளைத்தெழுந்த சிவக்
கொழுந்தை
வேண்டுவோ மே.

இந்த விதமாகத் தமிழ் நாடெங்கும் கலையும் பண்பாடும் பரவிக் கிடக்கின்றன. ஒரு அம்சத்தைக் கண்ணிட்டுப் பார்த்தால்ப்போதும். கருத்தை அது கவர்ந்து விடும். அப்படியானால் தமிழ் நாட்டின் பண்பாட்டையும் தமிழ் பாஷையின் பண்பாட்டையும் அளந்து சொல்ல முடியுமா?

வானம் அளந்த (து)
அனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே.

[பாரதியார்.]

டாக்டர் பந்தர்கர் சொன்னபடி அதிசயம் நிறைந்த நாடுதானே தமிழ் நாடு!

விசுவரூபதரிசனம்

[சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்]

முதல் நாள்

சேஷாசாஸ்திரிகள் பி.ஏ;எல்.டி. வாருங்கள் தீக்ஷிதர்வாள். இன்று கொஞ்சம் வேதாந்தம் பேசலாம். நீங்கள்தான் வேதாந்தத்தில் நிபுணராச்சே. விசுபரூபதரிசனம் என்கிறார்களே, அதைக் கொஞ்சம் விளக்கிச் சொல்லுங்கள்.

தீக்ஷிதர்: உலக மெல்லாம் பரமேசுவரனுடைய சொரூபம் அல்லவா? அதை அருச்சுனனுக்கு உணர்த்தும் பொருட்டு பகவான், ஆயிரம் சூரியன்கள் ஒரே சமயத்தில் உதயமானாற்போல் கண் கூசும்படியான ஜோதிப் பிரகாசத்தோடு விளங்கினான். இது கீதையில் பதினோராவது அத்தியாயத்தில் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைத்தான் விசுவரூபதரிசனம் என்று சொல்வது. வேறு ஒன்றுமில்லை.

சே: சுலபமாகத்தான் சொல்லி விட்டீர்கள். என்னுடைய அபிப்பிராயம், தற்காலத்தில் விசுவரூபதரிசனத்தை உண்மையில் கண்டு வேதாந்த உணர்ச்சியைப் பெற்றவர்கள் யார் என்றால் பௌதிக ஆராய்ச்சிப் பண்டிதர்கள்தான். தொலைநோக்கிகளும், நுண்நோக்கிகளும், நிறச்சேதிகளும் வைத்து நட்சத்திர ஆராய்ச்சியிலும், பரமாணுக்கள் சோதனையிலும், சத்திய பராயணர்களாக ஈடுபட்டிருக்கும் பௌதிக ஆராய்ச்சியாளர்களே விசுவரூபதரிசனம் கண்டவர்கள்.

தீ: தாங்கள் எப்போதுமே என்னைக் கேட்கிறாப் போல் முதலில் காட்டி பிறகு உங்களுடைய புது சாஸ்திரப் புகழ்ச்சியே நடத்தி விடுகிறீர்கள். முந்தியும் ஒரு நாள் இதே பொருள்பட தற்காலப் படிப்பை ரொம்ப புகழ்ந்து பேசினீர்கள். புது சாஸ்திரங்களில் ஆராய்ச்சி செய்கிறவர்கள் எல்லோரும் ரிஷிகளுக்குச் சமானம் என்று கூடச் சொன்னீர்கள். இது கொஞ்சம் அதிசயோக்தியாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. பரம் பொருளைப் பற்றிய தியானத்திலும் தபசிலும் ஈடு பட்ட மகரிஷிகளுக்குச் சமானம் என்று யாரையாவது, அதிலும் கேவலம் பௌதிக ஆராய்ச்சிக்காரர்களை எப்படிச் சொல்லலாம்?

சே: பரம்பொருளின் சொரூபமேயல்லவோ பூதப் பொருளும்? பூதப் பொருளின் அடி ரகசியத்திற்குப் போனோமானால் எல்லாம் பரம் பொருளாகவே முடிகிறது. ஒன்றை ஆராய்ந்தால் மற்றொன்றையும் ஆராய்ந்தவாறே ஆகிறது.

தீ: தாங்கள் வாதத்தில் நிபுணர். ஆனாலும் இது வேறு அது வேறு. சகலப் பொருள்களிலும் நான் இருக்கிறேன் என்று பகவான் சொன்னதினாலேயே கேவலம் பௌதிகப் பொருளாராய்ச்சியும் சுத்த பிரம்ம சொரூபத்தைப் பற்றிய வேதாந்தமும் ஒன்றாகிவிடுமா? இராக் காலத்தில் வெளியே உட்கார்ந்து ஆகாயத்தில் மின்னும் நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டு மௌன மகிழ்ச்சியில் மூழ்கிக் குளித்து உலகங்கள் அனைத்தையும் தாங்கும் பராசக்தியை மனம்

எட்டிய அளவு தியானித்தோமானால் நம்முடைய கவலைகளையும் துக்கங்களையும் ஓரளவு மறப்போம், என்று சொன்னால் நான் ஆட்சேபிக்கவில்லை. நம்முடைய கோபம், பொறாமை, துவேஷம் முதலிய அற்ப விகாரங்களும் கொஞ்சம் தணியலாம்; இது உண்மையே. ஆனால் அதுவே வேதாந்தமாகி விடுமா? சாஸ்திரம் படித்து பிரஸ்தானத் திரயங்களைக் குருமுகமாகக் கேட்டுக் கிரகித்தால்தான் வேதாந்தி ஆக முடியும்.

சே: ஆகாயத்தின் அழகைக் குடித்தே மனம் ஓரளவு சாந்தி அடையும். கணிதத்திலும் வான் நூலிலும் கண்ட உண்மைகளை அறிந்து தியானித் தோமானால் அதைவிட நிலையான சாந்தியைப்பெறலாம். இது அனுபவத்தில் கண்டறிந்த உண்மை. பக்தி செய்ய இதைவிட மேலான வழி கிடையாது. வேதாந்த நூல்களை படிப்பதினாலும் வெறும் ஸ்நான ஜபங்களினாலும் வேதாந்த உணர்ச்சியை உண்மையில் அடைவது கஷ்டம். அகங்காரத்திற்கு அது மருந்தாகாது என்பது என் அபிப்பிராயம்.

தீ: கணிதமும் ஜோதிஷமும் ஞானத்திற்கு உதவும் என்கிறீர்கள். கணிதமும் ஜோதிஷமும் நம்முடைய சாஸ்திரங்கள் தானே? சூரிய சந்திரக் கிரகணங்களையெல்லாம் நம்மவர்கள் கணக்குப்போட்டுச்சொல்லவில்லையா?

சே: வான்நூலும் கணிதமும் நம்முடைய முன்னோரின் அறிவால் தான் முதன் முதலில் தோன்றின என்பது உண்மை. ஆனால் அந்த அறிவுத் தொகையின் வெள்ளம், நமுடைய நாட்டில் ஓடாமல் மேற்கு முகமாகத் திரும்பி விட்டது. அங்கே அது பாகீரதிப் பிரவாகமாய் பெருகியும் பரவியும் தற்போது மிக அற்புதமான நிலை அடைந்து விளங்குகிறது. மேனாட்டு ஆராய்ச்சியாளரின் ஊக்கமும் தளரா முயற்சியும் இடை விடா சோதனைகளுமே இந்தப் பெருக்கத்திற்குக் காரணம்.

தீ: எப்போதும் மேல் நாட்டாரைப் புகழ்ந்து பேசுவது உங்கள் வழக்கம். இவர்கள் நட்சத்திரங்களை எண்ணி விட்டார்களா, சொல்லுங்கள்.

சே: எண்ணப்படாத எண்ணிக்கைக்கு சாதாரணமாகச் சொல்லும் உதாரணம் விண்ணில் மின்னும் நட்சத்திரங்கள். ஆயினும் ஆகாயத்தில் கண்ணுக்குத் தென்படும் மீன்களை யெல்லாம் வான் நூலறிஞர்கள் எண்ணுவதல்லாமல் அட்டவணையும் போட்டிருக்கிறார்கள்.

தீ: எத்தனை நட்சத்திரங்கள் என்று எண்ணி யிருக்கிறார்கள்?

சே: கண்ணாலேயே காணக்கூடியது சுமார் 6,000. ஆனால் அதற்கும் மேல் கண்ணுக்குத் தென்படாத புதியப் புதிய நட்சத்திரங்களை தொலை நோக்கி வைத்துப் பார்த்திருக்கிறார்கள். இவ்வாறு ஆராய்ந்து ஆராய்ந்து சுமார் ஐந்து லட்சம் நட்சத்திரங்களை படமாகக் குறித்து அட்டவணை செய்திருக்கிறார்கள்.

தீ: என்ன சொல்லுகிறீர்கள்?

சே: ஆமாம், தீக்ஷிதர்வாள், உண்மை. அப்படியே செய்திருக்கிறார்கள். எவ்வளவுக் கெவ்வளவு பலமான தொலை நோக்கிக் குழாய் அமைத்துக் கொண்டு பார்க்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு புதிய புதிய நட்சத்திரங்கள் திருஷ்டிக்குச் சிக்கிக் கொண்டே வருகின்றன. அவைகளைக் கண்ணால் பார்ப்பதோடு பதிவுப் படம் எடுத்து பதியவும் வைக்கலாம். இவ்வாறு கண்டும் ஆராய்ச்சி செய்தும் லட்சக்

கணக்கான ஜோதிகளைப் பதிவுப் படத்தில் பதித்தும் இருக்கிறார்கள். இப்போதுள்ள தொலை நோக்கிகளை விட பலமான ஆராய்ச்சி யந்திரங்களை அமைத்துக் கொண்டால் காட்சிக்குச்சிக்கக் கூடிய நட்சத்திரங்களின் எண்ணிக்கை பதினேரு சுழிகளிட்ட ஒரு எண்ணிக்கை யாகும்.

தீ: அப்படித்தானிருக்கும். ஜகத்து அநந்தமோ இல்லையோ?

சே: வேதாந்தத்தில் அனந்தன் அப்பிரமேயன் என்றெல்லாம் ஈசுவரனைப் பற்றிச் சொல்லுவதற்கு அடுத்தாப்போல் உள்ளது இந்த நட்சத்திர எண்ணிக்கையும் அவை கிடக்கும் பிரமாண்ட பாழுமே. புள்ளி வடிவங்களாக மின்னும்நட்சத்திரங்களைத்தவிர, புகைப் படங்களாக சில மண்டலங்கள் வெறுங் கண்ணுக்கும் தொலை நோக்கி மூலமாகவும் காணப்படுகின்றன. புகைப் படலங்களெல்லாம் பிரமாண்ட தொலையிலுள்ள நட்சத்திரக் கூட்டங்கள். ஒவ்வொரு புகைப் படலமும் லட்சக்கணக்கான நட்சத்திரங்களின் கூட்டம் என்பது ஆராய்ச்சிக் காரர்களின் அபிப்பிராயம். ஐந்துலட்சம் ரூபாயில் எத்தனை தம்பிடிகள் உண்டு, அத்தனை நட்சத்திரங்கள் ஒரு புகைப் படலத்தில் இருப்பதாக அபிப்பிராயப் படுகிறார்கள். இவ்வாறு ஒவ்வொரு புகைப் படலச் சோதியுமானல் பார்த்துக் கொள்ளுங்கள், ஒட்டு மொத்தம் என்ன வாகும்? தொலை நோக்கியில் கண்ட புகைப்படலங்களே இருபது லட்சம்.

தீ: கணக்குக்கு எல்லையே இல்லை. ஒன்றைப் போலவே மற்றொன்று. எத்தனை இருந்தாலென்ன? இத்தனை நட்சத்திரங்களுக்கு இடமெங்கே?

சே: நமக்கு நீலமாகவும் வட்டமாகவும் தென்படுகிறது ஆகாயம். ஆனல் அதற்கு இவ்வளவு நீட்டம் அகலம் ஆழம் என்பது கிடையாது. அதில் இத்தனை கோடானு கோடி ஜோதிக் கோளங்களும் ஒன்ருெடொன்று மோதிக் கொள்ளாமல் புகை வண்டி வேகத்திற்கு இரண்டாயிர மடங்கு வேகமாகச் சுழன்ருேடிக் கொண்டிருக்கின்றன — ஏன் திகைக்கிறீர்கள்?

தீ: சொல்லுங்கள். கேட்டுக் கொண்டு தானிருக்கிறேன். நம்ம பெரியவாள் கோடி, அற்புதம், நிற்புதம், கர்வம், பத்மம், சங்கம், சாகரம் என்றெல்லாம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாத கணக்கா?

சே: பெரிய எண்ணிக்கைகளுக்கு இவ்வாறு பெயர்களிட்டுச் சொல்வதற்குப் பதில் சுருக்கமான ஒரு முறை உண்டு.

தீ: அதெவ்வாறு சொல்லுங்கள் பார்ப்போம்.

சே: ஒன்றுக்குப்பின் இரண்டு சுழி வைத்தால் 100, மூன்று சுழி வைத்தால் 1000. இவ்வாறே பெரியஎண்ணிக்கைகளை எத்தனை சுழிகள் அடுக்க வேண்டும் என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டால்எண்ணிக்கை இன்னதென்பது, கிலுப்தமாகத் தெரிந்துவிடும்.'ஏழுடுக்கு' என்றால்ஏழுசுன்னங்கள் கொண்டகோடி. அற்புதம் என்பது 'பத்தடுக்கு' அதாவது பத்துச் சுழிகள் அடுக்கிய எண். பத்மம் என்பது 'பதினலடுக்கு.' இவ்வாறே எல்லா எண்ணிக்கையும். வெறும் சங்கேதமாக வைத்துக் கொண்ட பெயர்கள் அழகாகத் தானிருக்கின்றன. ஆனல் பெயரைக் கொண்டு பொருளையறிவது கடினம்.சில சமயம் சந்தேகமும் ஏற்படும். எழுதும் போது எல்லாச் சுழிகளையும் வரைந்து அடுக்குவது சவுகரியக் குறைவாகும். இத்தனை

அடுக்கு என்று குறிப்பது புது முறை. அதில் சந்தேக விபரீத அர்த்தங்களுக்கு இடமிராது, சுருக்கமாகவும் எழுதமுடியும். சிலேட்டில் எழுதிக் காட்டுகிறேன் பாருங்கள். 10^6 என்றால் பத்து லட்சம், 2×10^6 என்றால் 2 க்குப்பின் ஆறு சுழி அதாவது இருபது லட்சம். 3×10^{12} என்றால் மூன்றுக்குப்பின் 12 சுழிகள். ஒன்றை மற்றொன்றால் பெருக்க வேண்டுமானால் அடுக்கெண்களைக் கூட்டினால் தீர்ந்துவிடும். $10^6 \times 10^8$ என்றால் 10^{14} :

தீ: சரிதான், என்னை மறுபடி பள்ளிக்கூடத்திலேயே சேர்த்து விடுவீர்கள் போலிருக்கிறது.

சே: நீங்களே ஒருநாள் சொன்னீர்களே, படிப்புக்கு வயதின் வரம்பு கிடையாது. புது விஷயங்களைப் படிப்பதில் அவமானமுமில்லை, சங்கோசமும் கூடாது. இத்தனை ஜோதிகள் விசுவ வெளியில் ஜொலித்துக்கொண்டும் சுழன்று சுற்றிக்கொண்டுமிருக்கின்றன. அவைகளின் சொரூபம் என்ன வென்பதைக் கண்டறிய ஆராய்ச்சிக்காரர்கள் வெகு பாடு பட்டிருக்கிறார்கள்.

தீ: அதைச் சொல்லுங்கள், அது தான் தெரிய வேண்டும்.

சே: நட்சத்திரங்கள் சூரியனைப் போல் சுயஞ் சோதிகள்.

தீ: சூரியன் உஷ்ணமாயிருக்கிறான், நட்சத்திரங்கள் அவ்வாறில்லையே?

சே: சூரியன் நமக்கு ரொம்ப பக்கம். நட்சத்திரங்கள் வெகு தொலை. மலையில் எரியும் நெருப்பு நம்மைச் சுடுவதில்லை. தொலையின் காரணமாக உஷ்ணம் எட்டுவதில்லை. ஓரளவு பிரகாசம் மட்டும் நம்மை வந்து சேருகிறது. தொலையைப் பற்றிச்சொன்னால் நம்பமாட்டீர்கள்.

தீ: எல்லாவற்றிற்கும் சிரத்தை தான் ஆதாரம். ஒரு சமயம் **அப்பய்ய தீக்ஷிதர்** யாகம் செய்த போது யாகத்தில் நடந்த பசு வதையைப் பார்த்தார். பார்த்து நடு நடுங்கி, 'சாஸ்திரமே, உன்னை நம்பினேன். நீ விட்ட வழி!' என்றாராம். அவ்வாறே நீங்கள் சொல்லும் அற்புதப் பேச்சைக் கேட்டாலே மதி திணறுகிறது. ஆயினும் நம்பித் தான் தீரவேண்டும். சூரியன் பக்கத்திலிருக்கிறான் என்றும் நட்சத்திரங்கள் அதைவிட அதிக தொலை என்றும் சொன்னீர்களே, எல்லாம் ஒரு ஆகாசத்தில் அல்லவோ இருக்கின்றன ?

சே: அப்படித்தான் தோற்றம் கொடுக்கிறது. குழந்தைத் தொட்டிலின் மேல் கட்டியிருக்கும் கிளித்தட்டுப் போல் அழகாகத் தான் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் நமக்கு வெகு தூரத்திலிருக்கின்றன. அவையெல்லாம் ஒரு தொலையில் இல்லை. ஒன்றினுக்கொன்று தொலையில் வெகு பேதம். சூரியன் தொலை பத்துக்கோடி மைல் என்று வைத்துக்கொள்ளலாம். அதாவது எட்டு அடுக்கு எண். நட்சத்திரத்தின் தொலையோடு ஒப்பிட்டால், இந்தப் பெருந் தொலை பக்கத்து வீடு போலாகிவிடும். சூரியன் தொலையைப்பக்கத்து வீடுபோல வைத்துக் கொண்டால் நட்சத்திரத்தின் தொலை காசிக்கும் ராமேசுரத்திற்கு முள்ள தொலை யாகும். அவ்வாறே இன்னும் வேறு சில நட்சத்திரங்களோடு ஒப்பிட்டால் இந்தக் காசித் தொலையும் பக்கத்து வீடு போலாகி விடும்.

தீ: சாஸ்திரிகளே, இன்று இவ்வளவு போதும். இதை எல்லாம் எண்ணினால் கிறு கிறுப்பு வரும் போலிருக்கிறது. நமோ நம:

(இன்னும் வரும்)

கடைசி வெற்றி

[ஆர். ஷண்முகசுந்தரம்]

"இந்த நிலவுக்கு இன்று இத்தனை வேகம் எங்கிருந்து வந்தது? பொங்கிப் பொங்கி ஏன் அமுத வெள்ளத்தைக் கொட்டிக் கொண்டிருக்கிறது? 'இளந்தலை கண்டே நிலவு பிளந்தெறியும் காலம்' என்று சொல்வது ரொம்பவும் சரியாக இருக்கிறதே! பெண்ணுடன் இந் நிலாப் பிறந்ததில்லைப் போலிருக்கிறது? அப்படிப் பிறந்திருந்தால் என்னைக் கண்டு சற்று இரக்கம் காட்டாமல் இருக்குமா?"

இவ்விதம் ரஞ்சிதத்தின் உள்ளத்தில் எண்ணங்கள் எழுந்தன. அவள் மனக்கடலில் எத்தனை எத்தனையோ உணர்ச்சி அலைகள் பெருக்கெடுத்தது. "அடடா! சொன்ன சொல் தவறுகிறவர்களும் நம் நந்திவர்மன் நாட்டில் உண்டா?" என்று வாய்விட்டுச் சொன்னாள். அவள் வார்த்தை முடியுமுன்பே, "என்ன சொன்னாய்?" என்று சிரித்தபடிகேட்டுக் கொண்டு இளநந்தி அங்கு வந்து சேர்ந்தான்.

பால்போன்ற நிலவில் மேன் மாடியில் விரித்த சமுக்காளத்தின் மேல் ரஞ்சிதம் உட்கார்ந்திருந்தாள். இன்னிசை பொழியும் வீணை அவளருகே சாய்ந்தபடி கிடந்தது. என்றும்போல் அவள் அன்று அலங்கரித்துக் கொள்ளவில்லை. என்னவோ கனவுலகில் லயித்திருப்பவள் மாதிரி தன்னை மறந்திருந்தாள்.

இந்தக் கோலத்தில் ரஞ்சிதத்தை காண்போம் என்று இளநந்தி நினைக்கவே யில்லை. பதட்டத்துடன் "என்ன சங்கதி?" என்று கேட்டான்.

அவனுடைய குரலில் உள்ள இயற்கையான விளையாட்டும்



வேடிக்கையும் மாயமாய் மறைந்து விட்டது. தலை கவிழ்ந்தபடியே "சங்கதியா?" என்று மட்டும் சொல்லி மௌனமாகி விட்டாள். அவள் கண்களில் நீர் நிறைந்தது.

இளநந்திக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. திடீரென்று அவள் மனம் துயரக்கடலில் மூழ்கக் காரணம் என்ன? எதை உத்தேசித்து அவள் அவ்விதம் இருக்கிறாள் என்பதை அவனால் ஊகித்து உணரமுடியவில்லை. இனிய இரவிலே இளம் விரல்களிலிருந்து எழுந்து நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் கானத்தில் ஐக்கிய மாகிவிட அவன் வந்தான். ஆனால் அந்த இசைக் குயிலோ சோகச்சித்திர மாகக் காட்சி யளிக்கிறாள். இளநந்தி மௌனமாக வெளியே பார்த்தான். இயற்கை அன்று தெய்விக அழகுடன் விளங்கியது. 'வாழ்க்கை வாழ்வதற்கே, அழகு அனுபவிப்பதற்குத் தான்; வனப்பு எல்லோரையும் 'வா' வென்று அழைக்கிறது. இந்த நுட்ப மான எழிலோசைக்கு செவி சாய்ப்பவனே பாக்கிய சாலி' என்று யாரோ சொல்வது போலிருந்தது.

நிலவு சொரியும் மாவிளந்தளிர்களிடையே குயில்கள் 'குக்கூ' வென அங்கு மிங்கும் கூவிக் கொண்டிருந்தன. அந்தக் குரலிலே என்னவோ சோகம் கலந்திருப்பது போல் அவனுக்குப் பட்டது. குயிலின் குரலில் மட்டுமா? எங்குமே ஒரு தனிச்சோர்வு நிறைந்திருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது.

ரஞ்சிதமும் அதே நிலையில்தான் இருந்தாளா? மலர விழித்தபடி அவள் கரியகண்கள் திசைக்கோட்டுக் கப்புறம் எதைத் தேடுகின்றன?

"ரஞ்சிதம், நீ இப்படியே சிலை போல் உட்கார்ந்து கொண்டிருந்தால் நான் எழுந்து போய் விடுவேன்" என்று இளநந்தி சொன்னான். பிறகு என்னவோ யோசித்துக்கொண்டு, "இன்று ஒரு புதுக்கவி இயற்றி யிருக்கிறேன். உனக்குக் கவிதை என்றால் உயிர் ஆச்சே. பாடிக் காட்டுவோம் என்று வந்தேன். எத்தனையோ கஷ்டப்பட்டு ஒற்றர் கண்களில் மண்ணைத்தூவி விட்டு வந்தேன். இவைகள் உனக்குத் தெரியாதா? குறிப்பிட்ட நேரத்திலேயே வரமுடிகிறதா? நீ தான் பேசமாட்டேனென்கிறாயே. சரி, போகட்டுமா?" என்று சொல்லிக்கொண்டே இளநந்தி அங்கிருந்து எழுந்தான்.

"இல்லை, இல்லை, உட்காருங்கள்" என்றாள் ரஞ்சிதம். இளநந்தியின் முகத்தில் புன்னகை அரும்பியது. "எனக்கு உங்கள் மேல் வேறு என்ன கோபம்? பாட்டு பாட்டு என்று நித்தம் பாடிக்கொண்டிருந்தால் சாப்பாட்டிற்கு வந்து விடுமா? உங்கள் கவிதையும், காவியமும் யாருக்கு வேண்டும்? ஆனால் நாம் தான் எதற்காக வாழ்கிறோம்? நாம் விரும்புவது என்ன — அது? கவிதை அழகுடன் சொல்லுங்கள் பார்ப்போம்?" என்று சொல்லி நிறுத்தினாள் ரஞ்சிதம்.

இளநந்தி ஒரு கணம் யோசித்தான். பிறகு மெதுவாக, "உண்மைதான். வாழ்க்கை சும்மா உண்பதிலும் உறங்குவதிலும் கழிந்து போவதை விரும்புகிறவன் சாமான்ய மனிதன். ஆனால் நாமோ........."

"அதிருக்கட்டும்"

"சொல்வதற்குள் அவசரப் படுகிறாயே? நான் முன் பின்யோசியாமல் பாட்டுக்கட்டிக் கொண்டு திரிவதாக நீ எண்ணுகிறாய். நான் பாடுகிறேன். யாருக்காக? அவர் இன்னம் உணரவில்லையே? என் னேரமும் என் உள்ளம் பண்

இசைத்துக் கொண்டே இருக்கிறது. எதற்காகத் தெரியுமா? அதை உன்னால் கற்பனை கூடப் பண்ண முடியாது. அந்தப் பாடல்கள்தான் உன்னை ராணியாக, இந்த தேசத்தின் அரசியாக-ஆக்கப் போகிறது. அதைத் தவிர்த்து வேறு ஒரு சக்தியும் இக்காரியத்தைச் சாதிக்க முடியாது. ஆனால் இதெல்லாம் உனக்குப் புரியவா போகிறது!"

"என்ன, என்ன? விளக்கமாகச் சொல்லுங்கள். விடுகதைபோல் இருக்கிறதே உங்கள் பேச்சு" என்றாள் ரஞ்சிதம்.

"இப்போதைக்கு அப்படித்தான் இருக்கும்" என்றான் இளநந்தி. கொஞ்சம் பொறுத்து, "ரஞ்சிதம், என் அண்ணாவின் மனப்பக்குவத்தை உன்னால் உணரமுடியாது. நீ மட்டுமா? இந்த நாட்டிலுள்ள யாருமே நம் நந்திவர்மனின் மனதைத் தெரிந்து கொள்ள முடியாது. அவர் ஒரு கலைஞர், பரமரசிகர்"

"அப்படிச் சொல்லுங்கள்! கலைஞர்கள் மனதைத்தெரிந்து கொள்வது ரொம்பக் கஷ்டமான காரியம் என்பது எனக்கு வெகுநாளாகவே தெரியுமே. உங்களோடு இத்தனை நாள் பழகிய பின்பும் அதைத் தெரிந்து கொள்ளாதிருந்தால் என்னைப்போல் அப்பாவிப் பெண் இந்த உலகத்தில் யாருமே இருக்க முடியாதல்லவா?" என்றாள் ரஞ்சிதம்.

"விளையாட்டு இருக்கட்டும்" என்று சொல்லச் சொல்ல ரஞ்சிதம் இடையே தடுத்து, "எது எது? அருமையான சங்கதிகள் எல்லாம் இன்றைக்குத் தெரிந்து கொள்ளலாம் போலிருக்கிறதே! உங்கள் அண்ணா பாவம் வருகிற புலவர்களுக்கு பொன்னும் மணியுமாக அள்ளி அள்ளிக் கொடுப்பதோடு சும்மா இருந்து விடுகிறார் என்றல்லவா நினைத்தேன். அவர் கூட ஒரு கலைஞரா? எங்கே அவர் பாடியது ஒன்றைப்பாடிக் காட்டுங்கள் பார்ப்போம்" என்றாள் ரஞ்சிதம்.

இளநந்தி உற்சாகமாக ஆரம்பித்தான். "ரஞ்சிதம், கவி இசைக்கிறவன் மட்டும் கலைஞன் அல்ல. அனுபவிக்கிறவனும் கலைஞன் தான். ஆம், எல்லோராலும் அனுபவித்து விட முடிகிறதா? ஆனால் உனக்கு இவைகள் எல்லாம் விளங்காது. ஒன்று மட்டும் சொல்லி நிறுத்திக் கொள்கிறேன். என் தமையன் கலைஞர்களுக்கெல்லாம் பெரிய கலைஞன். மற்ற யாருக்குமே இதன் உண்மை தெரியாது. அவர் மனம் எனக்கு பளிங்கு போலத் தெரியும். நாட்டை அவர் ஆண்டு கொண்டிருந்தால் என்ன? அவர் மனம் எனக்குத் தெரியாமலா போய்விடும்?" என்றான்

அப்போது இளநந்தியின் முகத்தில் என்னென்னவோ உணர்ச்சிகள் பிரதிபலித்தன. ரஞ்சிதம் வேறு ஒன்றும் பேசாமல் வீணையை எடுத்து மீட்டத் தொடங்கினாள்.

அவ்வினிய இரவிலே கானலோகத்தில் எவ்வளவு நேரம் அவர்கள் மெய்மறந்து இருந்தார்கள் என்பதைச் சொல்ல முடியாது. நெடு நேரத்திற்குப் பிறகு 'நாளைக்கு அரண்மனைக்குப் போவதை மறந்து விடாதே ரஞ்சிதம்" என்றான் இளநந்தி.

"ஆமாம் பார்த்தீர்களா? அதற்குள் பதினைந்து நாள் ஆகிவிட்டதே! ஆம், அரசர் சொன்ன கெடுப்படி நாளை போகவேண்டும்" என்றாள்.

"எங்கே இன்னொரு தடவை என் அண்ணாவைச் சந்தித்த கதையைச் சொல்லு. சிரிக்காதே ரஞ்சிதம். எனக்கு அது ஒரு இனிய கதையைப் போலத்தான் இருக்கிறது. கும்மென்ற இருட்டு. அந்த இரு

ளிலே நகர் சோதனைக்கு அவர் வந்தார். அப்புறம்! உம், வந்தார். பாடிக்கொண்டிருந்தாய். என்ன பாட்டு? ஞாபகம் வருகிறது. 'செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச் சந்தனம் என்றுரோ தடவினர்' ஆகா! என் பாடலே எனக்கு எத்தனை ஆனந்தமாக இருக்கிறது. இதைக் கேட்டதும் என்ன சொன்னர்? "அப்படித் தடவியது யார்?" என்ருர். என்ன ரஞ்சிதம்! ....இனி நான் சொல்லமாட்டேன். நீ தான் மேலே நடந்த விவரத்தைச் சொல்ல வேண்டும்" என்று களிவெறியோடு சொல்லி நிறுத்தினன் இளநந்தி.

இவ்வளவு நேரம் சிரித்தபடி கேட்டுக் கொண்டிருந்த ரஞ்சிதம், 'நீங்கள் தான் மிச்சத்தைச் சொல்லி விடுங்களேன். இனிச் சொல்வதற்கு என்ன இருக்கிறது? எல்லாம்தான் சொல்லி விட்டீர்களே! அப்புறம் அரண்மனைக்கு வந்து இந்த அருமையான பாடல்களைப் பாடிக் காட்டவேண்டும் என்று சொன்னர். அவ்வளவுதான்' என்ருள் அவள்.

"சரி சரி, போ! நானகக் கேட்டால் இப்படித்தான் சொல்வாய். நீயாக ஆரம்பித்தால் விடிய விடியச் சொல்லிக் கொண்டே இருப்பாய். அதிருக்கட்டும் ரஞ்சிதம். இன்று பாடியதைப் போலவே நாளை அரச சபையிலும் அற்புதமாகப் பாடவேண்டும்" என்ருன்.

"அப்படியே ஆகட்டும்" என்ருள். அவளால் சிரிக்காமலிருக்க முடிய வில்லை.

* * *

அரண்மனை மண்டபத்தில் கம்பீரமாக நந்திவர்மன் வீற்றிருந்தான். என்று மில்லாதபடி அழகுடன் அன்று சபை அலங்கரிக்கப்பட்டிருந்தது எங்கே பார்த்தாலும் வித விதச் சித்திரங்களும், கைதேர்ந்த சிற்பிகளால் செய்த சிற்பங்களும் பார்ப்போர் மனசை அள்ளிக் கொண்டது.

மந்திரிகளும் புலவர்களும் ஒரு புறம் அமர்ந்திருந்தார்கள். அரசியும் மற்றப் பெண்களும் எதையோ ஆவலுடன் எதிர் நோக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பார்வை அடிக்கடி வாயிற்புறம் சுழன்று கொண்டே இருப்பதிலிருந்து அது நன்கு தெரிந்தது. பொதுவாக அங்கு கூடியிருந்த எல்லோருடைய உள்ளங்களிலும் விவரிக்க முடியாத ஒரு பரபரப்பு நிறைந்திருந்தது என்பதை அவர்களுடைய ஒவ்வொரு செய்கையும் எடுத்துக் காட்டியது.

அரசன் அமர்ந்திருந்த இடத்துக்கு நேர் எதிராக உள்ள பெரிய வாயில் வழியாக மெட்டிகளின் மெல்லொலி கேட்டது. அவ்வினிய நாதம் வந்த திக்கிலே எல்லோருடைய பார்வையும் சென்றது. அழகே உருவெடுத்தது போல் வந்து கொண்டிருந்தாள் ரஞ்சிதம்.

அதற்கு முன்பும் அந்தச் சபையிலுள்ளவர்கள் அவளைப் பார்த்திருக்கிருர்கள். ஆனல் இன்று அவளிடம் பிரகாசிக்கும் அழகைப் போல் இதற்குமுன் கண்டதே இல்லை. எங்கோ ஒரு கற்பனை உலகிலிருந்து தோன்றிய அலங்காரி போல் அவ்வளவு எழிலுடன் அவள் காட்சி அளித்தாள்.

அரசன் புன்னகையுடன் பாடும்படி உத்திரவிட்டான். அவ்வளவுதான். அடடா! ஊற்றிலிருந்து தன்னிச்சையாகப் பெருகும் வெள்ளம் போல் அவள் குரலிலிருந்து இன்னிசை எழுந்தது. தன்னை மறந்து அவள் பாடிக் கொண்டே இருந்தாள். மந்திரத்தால் கட்டுண்ட நாகம் போல் அங்கிருந்த அத்தனை பேரும் தங்களை மறந்து விட்டார்கள். கை தட்டலும்,

"ஆகா, அற்புதம்" என்னும் முழக்கமுமே அந்த மண்டபம் முழுதும் நிறைந்திருந்தது. ஆனல் இந்தக் கூட்டத்திலும் ஒரே ஒரு சீவன் மட்டும் சோகத்தால் வெந்து தவித்துக் கொண்டிருந்த தென்ருல் அது ஆச்சரியந்தான். அந்த ஆச் சரியத்திற்குக் காரணம் இல்லா மலும் இல்லை. பிரதம மந்திரி நுட் பமான புத்தி யுடையவர்தான். கவியை அனுபவிக்கும் உள்ளம் படைத்திருந்தும் அன்று அவ ருக்குக் கவிகள் வேப்பங்காயாக இருந்தது. அது மட்டுமல்ல. எப் படியாவது உடனே இவள் பாடு வதை நிறுத்திவிட வேண்டு மென்று துடித்துக் கொண்டிருந் தார். எல்லாம் அரசன் நன்மையின் பொருட்டுத்தான்!

நந்திவர்மன் களி மிகுதியால் அப்படியே சாய்வதும், பிறகு சுயநிலை வந்து மகிழ்ச்சியுடன் "இன்னம் பாடு, பாடிக் கொண் டேயிரு. பாடிக்கொண்டே இரு. ஆகா! தேவவாக்குத்தான்" என்று உற்சாகப் படுத்து வதுமாயிருந் தான். தான் அநுபவிப்பதில் மட்டும் வேந்தனுக்கு எப்போதும் திருப்தி ஏற்படுவதில்லை. தன்னைச் சேர்ந்த மற்றவர்களும் ஆனந்தப் படுவதில்தான் அவனுக்கு அள வற்ற திருப்தி.

ஆகையால் பாட்டைக் கேட்ட படியே சபையைக் கூர்ந்து கவ னித்துக் கொண்டு வந்தவன் பிரதம மந்திரியின் முகத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போய்விட்டான். சொல்லமுடியாத வேதனை மந்திரி முகத்தில் பரவி இருந்தது.

"மந்திரி! என்ன இது?" என்று அரசன் திகைப்புடன் கேட்டான்.

அப்போது ரஞ்சிதம் மாறி மாறி வரும் காலத்தைப் பற்றிய கருத் தமைந்த பாடல் ஒன்றைப் பாடிக் கொண்டிருந்தாள். "எங்கே பார்த் தாலும், இயற்கை தன் வனப்பை அள்ளிச் சொரிந்து கொண்டே இருக்கிறது. மரஞ், செடி, கொடி களெல்லாம் புது வாழ்வில் மூழ்கி, மலர்ந்து இருக்கிறதே. ஆனல், நான் மட்டும் நாயகன் வரவை எண்ணி எண்ணியே ஏங்கிக் கொண்டிருக்கிறேனே! ஐயோ! இந்தத் துயர இரவு இப்படியே நீண்டு கொண்டுதான் இருக்குமா! ஒரு வேளை இது விடியாமலேயே போய் விடுமோ?" என்ற அர்த்த முள்ள அந்தப் பாடலைக் கேட்ட சபையிலுள்ளவர்கள் அத்தனை பேரும் மயக்க மடைந்து விட்டார் கள் என்றுதான் சொல்ல வேண் டும். ஆனல் மந்திரி மட்டும் அசை வற்றிருந்தார். அரசன் கேள்வி அவர் செவியில் விழுந்ததோ என் னவோ?

திடீரென்று ஆவேசம் வந்தவர் போல் மந்திரி எழுந்தார். 'விறு விறு' என்று அரசன் அருகில் சென்ருர். கண் கொட்டாமல் அங் குள்ளவர்கள் மந்திரியின் செய்கை யைப் பார்த்துக் கொண்டிருந்தார் கள். என்ன நடக்குமோ என்று ரஞ்சிதம்கூட மௌனமாகி விட் டாள். "இவ்வளவோடு பாடுவதை நிறுத்திக்கொண்டு, இந்தப் பெண் ணை எழுந்து போகச் சொல்லுங் கள்" என்ருர் மந்திரி.

"என்ன சங்கதி?"

"பிறகு சொல்கிறேன்"

"இப்போதே சொல்லுங்கள். முழுவதும் கேட்காவிட்டால் என க்குத் திருப்தி ஏற்படாது."

"இது உங்கள் திருப்தியை மட் டும் பொறுத்த தல்ல."

"பின்னே, யாருக்கு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது? பார்த்தால் எல்லோரும் ஒரே பரவச நிலையில் தானே இருக்கிருர்கள்?"

"ஆமாம், அவர்களுக்கு இதிலு ள்ள மர்மம் தெரியாது."

அரசனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. "மர்மமா?" என்று கேட்டு விட்டு யோசனை செய்யத் தொடங்கினார்.

"இப்போது யோசிப்பதற்கு நேரமில்லை. இந்தப் பெண்ணை எழுந்து போகச் சொல்லட்டுமா?" என்றார் மந்திரி.

அரசனுக்குக் கொஞ்சம் ஆத்திரம் உண்டாயிற்று. "மந்திரி, உங்கள் போக்கு எனக்குப்புரியவில்லை. அரசை ஆள்கிற மந்திரி என்ற தோரணையில் இப்போது பேசாதீர்கள். கவியை அனுபவிக்கிற நிலையில் இருந்து சிந்தித்துப் பாருங்கள்" என்றார்.

இதைக் கேட்டு மந்திரி கொஞ்சமும் மாறுதல் அடையவில்லை.

"என்னை என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். ஆனால் பாட்டை மட்டும் இனிக் கேட்காதீர்கள். இது எனது பணிவான வேண்டுகோள்"

"கண்டிப்பாகக் காரணத்தைக் கூற வேண்டும்."

"அவள் அறம் பாடுகிறாள்" என்றார் பரிதாபகரமான குரலில் மந்திரி.

"அறம் பாடுகிறாள்" என்று கேட்டவுடன் அங்கிருந்த அனைவருடைய முகமும் சட்டென மாறிப் போய்விட்டது. அடுத்த கணமே என்னவோ ஒரு கொடிய மிருகத்தைப் பார்ப்பதைப் போல அனைவரும் ரஞ்சிதத்தையே பார்த்தார்கள். சபையில் உண்டான மாறுதலையும், மந்திரியின் பரிவையும் கண்டு அரசன் கோபம் கொள்ளவில்லை. அறம் பாடுவது என்றால் என்ன என்பது அரசனுக்குத் தெரியும். அந்தக்காலத்தில் வழங்கி வந்த கதைகளை அவன் பொருட்படுத்துவதில்லை. லோபிகளான பெரும் பணக்காரர்களை பயப்படுத்த புலவர்கள் கட்டி விட்ட கதை என்பதை அவன் அறிவான். ஆகையால் "மந்திரி, இந்த வேடிக்கைப் பேச்சைக் கேட்டு என்ன பண்ணுவது என்றே தெரியவில்லை. நீங்கள் இம்மாதிரி பேசுவது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. அறிவுக்குப் புறம்பான எந்த விஷயத்தையும் நான் ஒத்துக் கொள்ள மாட்டேன் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?" என்றார்.

"தெரியும்."

"அறம் பாடினால் என்ன கெடுதல் நேர்ந்து விடும்? எப்படி அது நேரிடும்?"

"கவிதைக் களி வெறியில் உங்கள் உள்ளத்து உணர்ச்சி கலந்து விடும்."

அரசன் கலகல வெனச் சிரித்தான். "எங்கே, நன்றாய் விளங்கும் படியாகச் சொல்லுங்கள்."

"மலரிலுள்ள தேனை அருந்த வண்டு பறந்து செல்கிறது. கொஞ்சம் கொஞ்சமாகப் பருகிக் கொண்டே இருக்கிறது. அளவுக்கு மீறி தேனைப் பருகிவிட்டு அந்தப் போதையில் புரளுகிறது. அப்புறம் முடிவைச் சொல்ல வேண்டுமா?"

"அடடா! அருமையான உதாரணம் அல்லவா சொல்கிறீர்கள்? ஆனால் அது வண்டைப் பொறுத்த வரையில் சரியாக இருக்கலாம்."

"இல்லை, எல்லோருக்கும் அது பொருந்தும். உயர்ந்த கவிரசத்தைப் பருகினாலும் அப்படித்தான் போதை கொள்ளச் செய்யும்."

இதைக் கேட்டு நந்திவர்மன் பலமாகச் சிரித்தான். "மந்திரி, பக்குவப் படாத மனத்தின் கோளாறு இது. ரஞ்சிதம் நீ பாடு"

என்று சொல்லிவிட்டு நீர் நிறைந்த கண்களுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மந்திரியால் இதைப் பொறுக்க முடியவில்லை. "அரசே, இன்னும் ஒரே ஒரு சங்கதி. அப்புறமும் உங்கள் மனம் மாறுவிட்டால் அது விதியின் செயல் என்று சும்மா இருந்து விடுகிறேன்" என்றார்.

"விதியின் மேல் பிறகு பழியைப் போடலாம். முதலில் சொல்வதைச் சொல்லுங்கள். அரசியல் காரியங்களில் ஈடுபட்டுக் கல்லாகி இருக்கும் உங்கள் இதயத்தில் சிறிது இனிமைக்கும் இடம் கொடுங்கள்"

மந்திரியின் முகத்தில் கோபமும் துக்கமும் மாறி மாறித் தோன்றியது. "அரசே" என்று கூறி நிறுத்தினார். அவர் குரல் அச்சபை முழுதும் எதிரொலித்தது. மீண்டும் அவர், "இந்தப் பாடலை இயற்றியது யார் தெரியுமா? அதை அந்தப் பெண்ணிடமே கேட்டுப் பாருங்கள். போரிட்டு அரசை அபகரிக்க முடியாமல் போகவே கடைசியாக இப்படியாவது செய்து பார்க்கலாமென்று தங்கள் சகோதரர் அல்லவா இந்தச்சூழ்ச்சி செய்திருக்கிறார்' என்று கூறி சபையை முறைத்துப் பார்த்தார். தன் சகோதரன் என்று கேட்டவுடன் அரசனுக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவேயில்லை. ஆசனத்திலிருந்து எழுந்து, "என்ன? என் தம்பியா? அவனா இந்த அருமையான பாடல்களை இயற்றியிருக்கிறான்? ஆகா! இப்பொழுது என் உள்ளம் கர்வத்தால் விம்முகிறது. இது வரையிலும் நான் எத்தனையோ புலவர்களுக்கு பொன்னும் வெள்ளியும் வாரி வாரிக் கொடுத்திருக்கிறேன். எவராவது ஒரு பாடலாவது இது மாதிரி பாடியதுண்டா? அவன் செய்ததை எல்லாம் மறந்து விடுகிறேன். அவன் கவியா? என் தம்பி கவியா? இன்று அவனை ஒரு கவியாகப் பாவித்து வணங்குகிறேன். அவன் கவிகளைப் போற்றுகிறேன். புகழ்கிறேன். ஆனந்தப் படுகிறேன். அனுபவிக்கிறேன். அறம் பாடுகிறானாம்! ச்சீ! யார் சொன்னது? இருக்கட்டுமே! இந்தப் பாடல்களைக் கேட்டுக் கொண்டே ஆவி பிரிவதானால் அதைப் போல இன்பம் வேறெங்காகிலும் உண்டா? ரஞ்சிதம், நீ பாடு!" என்றார் அரசர்.

சபையிலுள்ளவர்கள் அத்தனை பேரும் என்னவோ கனவு காண்பவர்கள் போல ஒன்றும் தோன்றாதவர்களாய் அரசனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

காணாத காட்சியைக் கண்டவன் போல் அரசன், "இந்தப் பாடல்களுக்கு என் ஒரு அரசை மட்டும் கொடுப்பதா? இப்படிப் பத்து ராச்சியங்கள் இருந்தாலும் கொடுத்து விடலாமே" என்றார்.

மந்திரி பிரமை பிடித்தவர் போல் நின்று கொண்டிருந்தார்.

அப்போது அம் மண்டபத்திலிருந்து எழுந்த இனிய கானம் அங்குள்ளவர்களை மட்டுமல்ல, இந்த உலகையே மோகன மயக்கத்தில் ஆழ்த்துவது போல் இருந்தது.

அதே சமயம் இதே இனிமைக் காட்சியைத்தான் இளநந்தியும் கற்பனை பண்ணிக் கொண்டிருந்தான்.

வாழும் வகை

[ராவ் பகதூர் டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி]

எந்தக் காலத்திலுமே வாழ்க்கைக்கு வேண்டிய முக்கிய தேவைகள் மூன்று. அது பழங்காலமாக இருந்தாலும் சரி, நவீன நாகரிகம் மிகுந்த இந்தக் காலமாக இருந்தாலும் சரி, இந்த மூன்று தேவைகளையும் யாருமே வேண்டாமென்று மறுத்துத் தள்ளிவிட முடியாது.

அன்பு, ஒற்றுமை, மனம் சலியாமை அதாவது தைரியம்—இந்த மூன்றையும்தான் குறிப்பிடுகிறேன். இங்கு வாழ்வோடு ஒட்டிய ஒற்றுமையைப் பற்றி புது வழியில் ஆராயலாம்.

உபதேசம் செய்வது எளிதான காரியம். நெடுகிலும் இதற்குப் பல உதாரணங்கள் சொல்லலாம். பழமொழிகளே அதற்கிசைந்தபடி அமைந்திருக்கிறது. தன் மக்களுக்குப் பாடம் போதிப்பதற்காக விறகுச் சுமைக் கட்டை உபயோகித்த கிழவன் கதை எல்லோருக்கும் நன்ருகத் தெரியும். ஒரு குச்சியை எடுத்துச் சுளுவாக ஒடித்து விடலாம். ஒரு கட்டுக் குச்சியையும் தனித்தனியாக எடுத்து ஒடித்து விடலாம். ஆனல் கட்டுக் குச்சி முழுவதையும் ஒரே தடவையில் ஒடிப்பதென்பது முடியவே முடியாது. கிழவன் எடுத்துச் சொல்லிய இந்த உண்மை ஒரு குடும்பத்திற்கு மாத்திரமா? கிடையாது. எல்லாச் சாதி — சமூகங்களுக்கும் பொருத்தமானதுதான். இந்த தத்துவத்தை உலகம் எங்கும் காண்கிரும்.

உடம்பைப் பற்றி நான் ரொம்பவும் ஆராய்ந்திருக்கிறேன். பல ஆண்டுகள் ஆராய்ச்சி செய்ததின் பயனக நுட்பமான சில விஷயங்களும் எனக்குத் தெரியலாயிற்று. வாழ்வோடு அவைகளைப் பொருத்தவேண்டுமென்பதே என் நோக்கம்.

நம்முடைய சரீரம் கோடிக்கணக்கான சீவ அணுக்களால் அமைக்கப் பட்டிருக்கிறது. இன்னெரு சங்கதியை முதலிலேயே சொல்லி விடுகிறேன். ஆங்கிலம் கற்காத தமிழர்களுக்கு எழுதுவதாக நான் பாவித்துக் கொண்டு எழுதுகிறதினல், வேண்டுமென்றே ஆங்கிலச் சொற்களை நான் இங்கு உபயோகிக்கப் போவதில்லை. தமிழிலேயே சொல்லிப் பார்ப்போம் என்ற ஆசைதான்.

சில அணுக்கள் தசையாகவும் சில எலும்பாகவும், சில தோலாகவும் இன்னும் பல அவயவங்களாவும் பலவிதமாக நம் உடல் ஆக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சீவ அணுக்கள் தங்களுக்கு இயற்கையாக உண்டான வேலைகளைச் சரிவரச் செய்து கொண்டு இருக்கும் காலம் வரையிலும், வியாதியில்லாமல் ஒருவன் வாழ்கிருன். அந்த உயிர் அணுக்களில் ஒன்ருே அல்லது சிலதோ — இயற்கை விதியை மீறி, தங்கள் போக்கில் வளர ஆரம்பித்து விட்டால், மற்ற உறுப்புகளுக்கும் 'கோளாறு' வந்தே தீரும். மரணத்துக்கே கொண்டு போய் விட்டாலும் விட்டு விடும். பெயர் சொல்ல முடியாத பல கொடிய வியாதிகள் இதனல் ஏற்பட்டு உயிருக்கு உலை வைப்பதை சர்வ சாதாரணமாக நாம் பார்த்துத்தான் இருக்கிரும்.

இனி, சீவ அணுக்களால் அமையப்பெற்ற உடல் உறுப்புகளைப் பார்ப்போம். ஒரு கையில் உள்ள விரல்களெல்லாம் ஒரே மாதிரியாகவா இருக்கின்றன? ஐந்து விரலும் வேறுபட்ட அமைப்பும், தோற்றமும் கொண்டதாகத்தானே இருக்கிறது? இப்படி வேறு பட்டிருந்தாலும், ஐந்தும் ஒன்று படாவிட்டால் எந்தக் காரியந்தான் நன்ருகச் செய்யக்கூடும்? இரண்டு கையும், அவைகளில் இருக்கும் பத்து விரலும் சேர்ந்து செய்தால் அல்லவா கைத்திறன் முழுதும் காண்பிக்க முடியும்? கை செய்யும் வேலைகளைக் கணக்கிடவே முடியாது!

"மலரெடுத்து நல்ல செண்டு
மாலைகட்டும் கையே!

வாய்க் கினிய பண்டமெலாம்
வைத்துதவும் கையே!

கோபுரம் சேர் கோவிலோடு
சுடிசை கட்டும் கையே!

குளம் கிணறு, குட்டையெலாம்
குளித்துதவும் கையே!"

இந்த உண்மையை உடம்பின் எல்லா அவயவங்களிலும் காணலாம். சுவாசக் கருவியும், இரத்த ஓட்டக் கருவிகளும், சீரணக் கருவிகளும், ஈரல் மூளையும் — மற்றுமுள்ள எல்லா அவயவங்களும் ஒழுங்காக வேலை செய்யாத வரை சரீரம் சுகமாக இருக்க முடியாது. ஒரு சின்ன உறுப்பு முரண்டினலும் தேகத்துக்கே கோளாறுதான்!

வயிறின்மேல் குறை சொல்லிக்கொண்டு மற்ற அவயவங்கள் வேலை செய்ய மறுத்துவிட்ட கதையைக் கேட்டிருப்பீர்கள். வயிறின் கொடுமையும் பெரிய கொடுமைதான்! ஒரு நாள் சாப்பாட்டை மறுத்தாலும் வம்புதான். இரண்டு நாள் உணவை எடுத்துக் கொள்ளச் சொன்னலும் சங்கடமே. பிறகு, ஒன்று பட்டாலுண்டு வாழ்வு என்னும் தத்துவத்தை உணர்ந்து வயிரோடு மற்ற உறுப்புக்கள் ஒத்துழைத்தனவாம்.

எந்த உண்மையை எடுத்துக் கொண்டாலும் வாழ்வோடு அவைகள் ஒட்டியிருப்பதைக் காணலாம் மரஞ்செடி, மலை ஆறு எல்லாமே நம்மோடு அப்படி ஒன்றியிருக்கிறது.

தாகூர் இவைகளை ரொம்ப நன்ருக அறிந்து அனுபவித்திருக்கிருர். ஆகையால்தான் அவருடைய இலக்கியங்கள் அழியா வரம் பெற்றுவிட்டன. பெரிய பெரிய உடல்த் தத்துவ நிபுணர்களும் தங்கள் ஆராய்ச்சிக்குப் பிறகு இந்த முடிவுக்குத்தான் வந்திருக்கிருர்கள்.

கடவுள் படைப்பில், 'அனுவசியம்' என்று ஒதுக்கித் தள்ளுவதற்கு ஒன்றுமே இல்லை. எல்லாம் நம்முடைய நன்மையின் பொருட்டே இவ்விதம் அமைந்திருக்கிறது என்பதை உணர வேண்டும். அதற்குத்தான் நம் உறுப்புகளை உதாரணத்துக்கு எடுத்துச் சொன்னேன்.

வெறும் கதைகள் சொல்வதிலோ, கேட்பதிலோ ஏதாவது பயன் உண்டு என்ருல் அந்த வேலையையே எல்லோரும் மேற்கொண்டு விடலாம். ஆனல் அதுதானே கிடையாது! ஆகையால், வாழும் வகையில் முதல்க் கட்டம் மனதில் அன்பை வளர்ப்பதுதான். வறட்டு இதயத்தில் ஒன்றுமே பதியாது. அன்பு ஓங்கினல் அகிலத்தையே ஆளலாம்.

கலைக் கோயில்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

முன்னுரை

நாட்டுக்கேற்ற நாவலர் — இது உலகெங்கும் வழக்கமாயிருக்கிறது. வான்மீகி முனிவரின் இராம கதையைக் கம்பன் தனித் தமிழ்ப் பண்புடன் பாடியிருக்கிருன். தாகூர் கவி வங்கமயம்; ஹ்யூகோ நாவல் பிரெஞ்சு மயம்; கோர்க்கியின் கதைகள் ரஷ்ய மயந்தான். நெஞ்சத் துடிப்புள்ள மட்டும், 'தான், தன்னவர், தன்னுடு' என்ற பற்று நீங்காது; இந்த அன்புத் துடிப்பில் பொரிந்தெழுந்த கவிகளும், உரை நடைகளுமே உலகின் சிறந்த இலக்கியங்கள். கிரேக்க ஹோமர், கிரேக்க வீரத்தைப் பாடினுலே கம்பீரமாயிருக்கிறது; அவரவர் பிறந்து வளர்ந்து பழகிய மாந்தர் பண்புகளைச் சொல்லோவிய மாக்கினுல் அதில் உணர்ச்சி ததும்பும், உள்ளம் துடிக்கும்.

தமிழ், உலகின் முன் மொழி, தொன்மொழி; தமிழர் உலகின் தொல்பெரு மக்கள். உலகில் எத்தனையோ மரபினர் தோன்றி மறைந்தனர்; யூதம், ஆரியம், கோதிக், கிரீக், லத்தீன் போன்ற மொழிகள் வாழ்ந்து வழக்கற்றன. ஓமரும், விர்ஜிலும், ஓராசும், வான்மீகியும், காளிதாஸனும் பாடிய மொழிகள் இன்று பேச்சு வழக்கிலில்லை. தொல்காப்பியரும், வள்ளுவரும், கம்பரும், இளங்கோவும், ஔவையும் பேசிய, பாடிய தமிழ், பழந் தமிழ், இதோ உயிர்த் துடிப்புடன் உள்ளது. புதுப் புதுப் பொலிவுடன் வளர்கிறது. தமிழ், கடலையும் கால வெள்ளத்தையும் வென்று இன்று வீறுடன் நிமிர்ந்து நிற்கிறது.

தமிழ் **மறு மலர்ச்சி** பெற்றது; புதிய புதிய எழுத்தாளர் இன்று தமிழை வளப்படுத்துகின்றனர். ஆனுல் இப்போது ஆங்கில — வங்க இலக்கியங்களே தமிழுடை தாங்கி உலாவுகின்றன — மொழி பெயர்ப்பு நூல்கள் போதும், போதும்! தமிழர் தாகூரையும், பங்கிமையும், பிரேம சந்திரரையும் அறிவர். வட நாட்டார் நமது கம்பரையும், இளங்கோவையும் இன்னும் அறியவில்லை. தமிழ் மறு மலர்ச்சியில் இனித் தூய தமிழ் மணம் வீச வேண்டும். இன்றேல் மறு மலர்ச்சி மொட்டாகவேயிருக்கும். அன்னியப் புயல் அதன் இதழ்களை உலுப்பித்தள்ளிக் கொண்டேயிருக்கும். ஆங்கிலம், பிரெஞ்சு, ஜர்மன், ரஷ்யம், இத்தாலியம், இஸ்பானியம், வங்கம், இந்தி முதலிய மொழிகள் இன்று உலகை வென்று வருகின்றன. இவற்றின் நயங்களை உரம் போட்டு தமிழ்க்

கற்பகத்தை அதற்குரிய பண்புடன் வளர்க்க வேண்டும். தமிழும் தலை நிமிர்ந்து கலையுலகில் உரிமையுடன் உலவ வேண்டுமானால் தமிழர் தமிழ்ப் பண்புடன் தமிழர் உள்ளந் துடிக்கும் நூல்களையே இனி எழுத வேண்டும். இந்நூல் தமிழருக்குப் பெருமை தருமா — தமிழர் பண்பை உலகிற்கு விளக்குமா ? — என்பதே ஒரு நூலின் அளவுகோல்.

தமிழர் தனிப்பண்பையும், மாண்பையும் விளக்கும் சில தொடர்கதைகள் எழுதி வைத்திருக்கிறேன். வசந்தம் அழைக்கிறது! வசந்த வனத்தில் எனது தமிழ்த் துடிப்பை உலவ விடுகிறேன். தமிழர் தமிழ்ப் பண்பில், தமிழ் — நாகரிகத்தில், பெருமை கொண்டு முழுத் தமிழராக உலகை வெல்லும் வீரத் தமிழராக வாழ வேண்டு மென்பதே என் ஆர்வம். அந்த ஆர்வத்தையே கலைக்கோயில் என்னும் இந்தப் புதிய தொடர்கதை உங்களுக்கு ஒரு விறு விறுப்பான காட்சிப் படலங்களால் விளக்குகிறது. படித்து வாருங்கள்.

சுத்தானந்த பாரதி

வெற்றித் தூண்முன்

பாஸ்கர சேதுபதியைத் தெரியாத தமிழர் இருக்க முடியாது. அவரே சுவாமி விவேகானந்தரை அமெரிக்காவிற்கு அனுப்பினர். சுவாமிஜி சிகாகோ சர்வமத சங்க மேடையில் வேதாந்த கர்ஜனை செய்தார்; உடனே அவர் புகழ் உலகெங்கும் எதிரொலித்தது; இந்து மதத்தின் மாண்பு பரவியது; இந்தியாவை வெண்ணுலகு நன்கு மதித்தது. ஒரே நாளில் விவேகானந்தர் உலகை ஞான வெற்றி கொண்டார். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் தேசங்கள் வணக்கமுடன் வரவேற்று, அவர் சொல்லமுதை உண்டு மகிழ்ந்தன. சில ஐரோப்பியரும் சுவாமிகளுக்கு மாணவராயினர்.

27—1—1897; விவேகானந்தர் உலகெங்கும் அறிவு முழக்கம் செய்து ஞானவிருது பெற்றுத் தாய் நாட்டில் திருவடி வைத்தார். பாஸ்கர சேதுபதியும், தம்பி தினகர சேதுபதியும் அடிகளை வரவேற்றனர். பாஸ்கர சேதுபதி 40 அடி உயரத்தில் ஒரு கம்பீரமான வெற்றித்தூண் நாட்டினர். அது பாரததேசம், பாரத தருமம், தமிழர் உள்ளம் இவற்றின் வெற்றித் தூணாகும். அதைக்காணும் போதெல்லாம் அங்கே கம்பீரமாக நின்று கர்ஜித்த வேதாந்த சிங்கத்தின் நினைப்புவரும். அதனடியில் தமிழ்க் கடல் முன்னே, சுவாமிகள் அரிய பெரிய சொற்பொழி வாற்றினர். அமெரிக்க அன்பர் குட்வீன் வாழ்க! அவரால் சுவாமிகள் பிரசங்கம் நமக்கு அப்படியே கிடைத்தது. கொளும்பு முதல் அல்மோரா வரையில் விவேகானந்தர் செய்த பிரசங்கங்களில் இரண்டு முதன்மையானவை — ஒன்று வெற்றித் தூண்முன் செய்தது; மற்றொன்று சென்னையில் செய்தது. பிரசங்கத்தின் சுருக்கத்தைத் தருகிறேன் :

“சிவோஹம்! நண்பர்களே! உங்கள் நல் வரவேற்பிற்கும், நல்லுரைக்கும் நன்றி! என்பால் உள்ளன்புடைய ராஜரிஷி பாஸ்கர சேதுபதி மன்னருக்கு நன்றி செலுத்துகிறேன். என்னால் ஏதாயினும் நன்மையிருக்குமாயின், பாரத நாடு இந்தப் புண்ணியவானுக்கே கடமைப்பட்டுள்ளது. அவரே சிகாகோ செல்ல என்னை மீண்டும் மீண்டும் தூண்டி ஆதரவு தந்தார். அவரைப் போன்று ஆறு மன்

னர்கள் இருந்தால் நமது தெய்வப்பணி சிறந்த வெற்றிபெறும்.

அன்பர்காள்! நமது நாடு புண்ணிய பூமி; அதில் பொங்கியெழுந்த ஆத்ம ஞான வெள்ளமே, புத்துயிர் செழிக்கப் பாய்ந்து உலகாயதத் தீமையை மாற்றும். ஆத்ம ஞானத்தைத் தாராளமாக வழங்குதலே ஈகை. நான் மேனாடுகளைச் சுற்றிப் பார்த்தேன்; எங்கும் படையும், பணமும் வாணிபமும், யந்திர விநோதமும், உலகாயத மயக்கமுமா யிருக்கின்றன. நமது ஞான பூமியிலேதான் ஆத்மீக உணர்ச்சி வாழ்வில் தோய்ந்திருக்கிறது. கடவுளே உண்மை; தன்னுள் அதை அறிவதேஅறிவு — தன்னறிவு; சாதி மத பேத மின்றித் தன்னறிவை அனைவருக்கும் பொதுவாக்க வேண்டும். தீண்டாமை ஒழிய வேண்டும். கல்வியும் தொழிலும் செழித்தோங்க வேண்டும். பெண்ணடிமை தீர வேண்டும். நமது சமுதாயம் தலை நிமிர்ந்து உலகின்முன் கம்பீரமாக நடக்க வேண்டும். ஆத்ம ஞானத்தை அடிப்படையாகக் கொண்டே சீர்திருந்த வேண்டும். முதலில் ஆத்ம ஞானம், தன்னறிவு; பிறகு காலத்திற்கேற்ற கல்வி; பிறகு வாழ்வை அழகு படுத்தும் கலை; அதன் பின் வறுமையை ஒழித்து ஏழைகளுக்குத் தாராளமான உணவளிக்கும் தொழில் — இம்மூன்றும் நமக்கு உடனே வேண்டும். இவை நிறைவேற மனிதர், தீரமுள்ள மனிதர் வேண்டும். அறிவும் ஆற்றலும், அனுபவமும் கொண்ட ஆத்ம தீரர்கள் உலகெங்கும் அத்யாத்மச் செல்வத்தை வழங்க வேண்டும். அத்தகைய தீரர்களை, தியாகிகளை, அறிவொளி நிறைந்த ஆத்ம வீரர்களைப் பயிற்றுவதே என் முதல் வேலை. பலம், பலம், பலம் வேண்டும். **நமக்கு இரும்புத் தசைகளும், உருக்கு நரம்புகளும்** வேண்டும்; பலம், ஆற்றல், வீறு துடிக்க வேண்டும்; மனிதனைத் தீரனாக்கும் மதமே நமக்கு வேண்டும். மனிதத் தன்மையை வளர்க்கும் கல்வியே நமக்கு வேண்டும். உங்கள் உடலை உயிரை, மனத்தைத் தளர்த்தும் எதையும் நஞ்செனை விலக்குங்கள். தளர்வை ஒதுக்கித் தள்ளுங்கள்! அச்சத்தை ஒழியுங்கள்! ஆத்ம

ஞானச் சிங்கங்களாயிருங்கள்! ஒளியும், உறுதியும் தருவதே உண்மை!

உணருங்கள், பாரதமக்களே, உணருங்கள்! முப்பத்து முக்கோடி தேவரிஷிகளின் சந்ததிகள் இன்றுள்ள இழி நிலையை உணருங்கள். இப்பொன்னுட்டில், கோடானு கோடிப் பேர் 'பசி பசி' என்று கதறுகிறார்களே! உணர்ந்தீர்களா? ஏழைகள் படும் பாட்டைப் பார்த்தீர்களா? மனம் இளகினீர்களா? நாட்டைக் கவர்ந்த மடமையிருளை உணருங்கள்! வறுமைப் பிணியை உணருங்கள். வறுமை, மடமை, தளர்வு, சோம்பல், சுயநலம், பொருமை — இவற்றை வேரோடொழியுங்கள். பலம் வேண்டும். கீதைபடிப்பதினும்பந்து விளையாட்டால், எளிதில் விண்ணின்பம் பெறுவீர்கள். உடலுறுதி கொண்டால் கீதையை இன்னும் தெளிவாயறிவீர்கள். நான் ஆத்மா, நான் சுதந்திரன், அழிவற்றவன், நான் அறிவு, சக்தி என்று ஆயிரந்தரம் சொல்லுங்கள்! ஆண் பெண் அனைவரையும் ஆண்டவனென்றே அறியுங்கள், மதியுங்கள், ஞானவொளி பரப்புங்கள்!

நீளிரவு கழிகிறது. நம்மை வருத்தும் இன்னல் ஒழிந்தது! தெய்வ வாணி உதிக்கிறது. நமது தாய் நாடு, இந்தியா எல்லையற்ற ஞான ஹிமாலயம், அன்பும், வினைத் திறமும் பெற்றது. சாந்தமும் உறுதியும் சான்றது. அதன் வாக்குறுதி வலுக்கிறது. மக்கிப்போன எலும்புகளுக்கும் தசைகளுக்கும் அது மலையமாருதம்போல் புத்துயிரைக் கொண்டு வீசுகிறது. சோம்பல் ஒழிந்தது. எழுந்தாள் பாரதி! குருடரே காணுர்! கேடரே காணுர். சூழ்ந்து நீண்ட அயர்வினின்றும் எழுந்து விட்டாள் எந்தாய் — பாரததேவி! அவள் இனி உறங்காள். அவளை யாரும் இனித் தடுக்க முடியாது. அன்னிய பலங்கள் அடக்கி வைக்க முடியாது. அகண்ட மானவள் எழுந்து நிற்கிருள். எழுமின், விழிமுன், உறுதி கொள்மின்; கருதிய கருமம் கைகூடுமட்டும் உழைமின்! சிவோஹம்!"

கடல் அலைகள்கூட அமைதியாகக் கேட்டன; பாஸ்கர சேதுபதி பரவசமானுர்; தம்பி தினகர சேதுபதி சித்தங் குளிர்ந்தார். அவர்களை சூழ்ந்திருந்த செல்வரும் புலவரும் உள்ளம் பூரித்தனர். அவருள் பெரிய சாமித் தேவருக்கும், பண்டித கோபால கிருஷ்ணையருக்கும் நடுவே இருந்தவரே நமது **சிவநேசச் செட்டியார்.** அவருடன் இருக்கும் சிறுவனே அவர் மகன் **இராமநாதன்.** பையன் சுவாமிகளையே கண் கொட்டாமல் பார்த்துச் சொக்கி நிற்கிருன்.

பாஸ்கர சேதுபதியும், தினகர சேதுபதியும் சுவாமிகளை மேளதாளத்துடன் மண்டபத்திலுள்ள தமது மாளிகைக்கு அழைத்துச் சென்றனர். கூட்டம் கலைந்து செல்லுகிறது. பையன் மட்டும் இன்னும் அந்த வெற்றித் தூணையே பார்த்து நிற்கிருன்.

சிவ : இராமு வா, போவோம்.

இரா : அப்புச்சி சாமியை இன்னொருதரம் கும்பிடலாமே — நல்லசாமி!

சிவ : அப்படியே செய்வோம். சாமிக்குக் காணிக்கையும் தருவோம்.

இரா : அப்புச்சி காணிக்கை நான் தருவேன். சாமியோடே நான் பேசப் போறேன்.

சிவ : பயலே, அவ்வளவு பெரிய சாமியுடன் பேச உனக்கு என்ன தெரியும்? பேசாமல் வணங்கி வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டும்

இரா : சாமிக்கு நான் தேவாரம் பாடுவேன்.

சிவ : உனக்கென்ன தேவாரம் தெரியும்?

இரா : எனக்கு மந்திரமாவது, அரியானை, மற்றுப்பற்று, காதலாகி, மாசில் வீணையும், சொற்றுணை வேதியன் — இன்னுமெத்தனையோ தெரியுமே.

சிவ : இதெல்லாம் யார் உனக்குச் சொல்லித் தந்தார்கள்?

இரா : மதுரையிலே திருஞான ஒதுவார்.........

சிவ : அவரை எப்படிச் சிநேகம் செய்து கொண்டாய்?

இரா : என்மேல் அவருக்கு நிரம்பப்பிரியம். நான் கோயிலுக்குப் போவேன்; அவர் தேவாரப் பாட்டுக் கேட்டு நிற்பேன். அவர் என்னைப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு தொடையிலே தாளம் தட்டித் தேவாரம் சொல்லித் தருவார்.

சிவ : எங்கே ஒன்று பாடு பார்ப்போம் உன் சமர்த்தை.

இரா : திருச்சிற்றம்பலம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப் பொருளாவது
நாதனும நமச்சி வாயவே!

திருச்சிற்றம்பலம்.

அப்புச்சி நல்லாயிருக்கா?

சிவ : பரவாயில்லையே — நீ கெட்டிக்காரன்.

இரா : சாமிக்கு எல்லாத் தேவாரமும் பாடிக் காட்டுவேன்.

சிவ : முதலில் சாமியைப் பார்ப்போம். பிறகு நோக்க மறிந்து உன் கச்சேரியை நடத்து ......சேதுபதி மகராசாவைக் கேட்போம்.

இருவரும் புறப்படுகிறார்கள். பையன் வெற்றித் தூணுக்கு "நமச்சிவாய, ஓம்" என்றொரு கும்பிடு போட்டு அதையே திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே தந்தையுடன் செல்கிறான்.

2. சிவநேசர்

சிவநேசஞ் செட்டியார் காரைக்குடியில் பிறந்தவர்; எட்டு வயது முதல் பெட்டியடியில் அமர்ந்து 'ஓலைக் கணக்கெழுதி' படிப்படியாக லேவாதேவியில் உயர்ந்து பணஞ் சேர்த்து, ஆளானவர். அவர் பத்தாண்டுகள் தகப்பனார் சிதம்பரஞ் செட்டியாருடன் இரங்கோனிலிருந்து வட்டித் தொழில் பழகினார்; பதினெட்டாம் வயதில் தந்தையை இழந்தார். முன்பே தாயை இழந்தார். தாயாதிகள் தில்லுமுல்லு செய்து, அவரது குடும்பச் சொத்தைப் பறித்துக் கொண்டனர். சிவநேசர் அதைரியப்படவில்லை. தனக்கிருந்த வீட்டை விற்றுக் கையிலிருந்த ரொக்கமும் போட்டு ரூபாய் பதினையாயிரம் முதலுடன் கப்பலேறி ஈப்போ சென்று கடை விரித்தார். அதிர்ஷ்ட சக்கரம் திரும்பியது. ஆயிரம் பதினாயிரம் என்று லாபம் வந்தது. ரூபாய் ஐம்பதாயிரம் ஒரு ரப்பர் தோட்டத்தில் போட்டார்.

தமிழ் நாட்டிலிருந்து வேலைக்காரரை வரவழைத்து, வீடு சாப்பாடு தந்து, கவலையற்று வேலை செய்யச் சொன்னார். வேலை நன்றாக நடந்தது. கூலி நிரம்பத் தந்தார். வருமானமும் நிரம்பக் கிடைத்தது. கையில் ஐந்து லகாரம் சேர்ந்ததும் ஈப்போ வட்டிக் கடைக்கும், ரப்பர் தோட்டத்திற்கும் ஏஜண்டுகளை நியமித்துவிட்டு சிவநேசர் ஊருக்கு வந்து சேர்ந்

தார். அவர் காரைக்குடியில் ஒரு மாளிகை கட்ட ஏற்பாடு செய்த போது, இராமநாதபுரத்தில் லேவா தேவி நடத்திய இவரது மாமா சுப்பையா செட்டியாரின் அழைப்பு வந்தது. சென்றார் சிவநேசர். தமது முதலையும் மாமா முதலுடன் போட்டு வர்த்தகக்கடை ஒன்று நடத்தினர்.

சேதுபதி

அக்காலம் இராமநாதபுரம் மன்னர் **முத்துராமலிங்க சேதுபதி**. இவர் மறவரில் மறவர். வைரம் பாய்ந்த வீரர். முருகனிடம் தீவிரமான பக்தியுடையவர். தமிழ், ஆரியம் அறிந்த புலவர்; புலவர் கற்பகம்; இவரே சுயமாகப் பல கீர்த்தனங்களும், செய்யுட்களும் இயற்றியிருக்கிறார். அவரைப் பற்றியும் வித்வான்கள் பல பதங்கள் பாடியிருக்கிறார்கள். இவர் அறிவிற் சிறந்தவர்; அறத்திற் சிறந்தவர். இம்மன்னர் அடிக்கடி சிவநேசஞ் செட்டியாரிடம் பற்றுவழி செய்து வந்தார். இருவருக்கும் நெருங்கிய நட்புண்டு. சுப்பையா செட்டியாருக்கு **விசாலாட்சி** என்ற அழகான பெண் இருந்தாள். வேறு சந்ததி கிடையாது. அப்பெண் சிவநேசரையே காதலித்தாள். சிவநேசருக்கும் விசாலாட்சியிடம் ஆசை; இருவர் ஜாதகமும் பொருந்தியிருந்தது. தை மாதம் முகூர்த்தம் வைத்து கலியாணம் அமோகமாக நடந்தது. முத்துராமலிங்க சேதுபதியே தமது புதல்வருடன் வந்து தம்பதிகளை ஆசீர்வதித்தார். சிவநேசரும் — விசாலாட்சியும் நிறைமுறையாக இல்லறம் நடத்துவதைக் கண்ணாரக்கண்டு களித்து, சுப்பையா செட்டியார் இருவருக்கும் தமது சொத்து சுகமெல்லாம் எழுதி வைத்துவிட்டுத் தன் இறுதி காலத்தைத் திருத்தல யாத்திரையில் கழித்தார். ஓராண்டு தலங்களைச்சுற்றி திருக்காளத்தியில் சுப்பையா சிவனடி சேர்ந்தார். மகளும் மாப்பிள்ளையும் அவர் நினைப்பிற்காக **சுப்பையா மடம்** ஒன்று கட்டி அங்கே சைவப் பாடமும், தேவார பஜனையும் நடக்க ஏற்பாடு செய்து, பரதேசிகளுக்கும் சோறு துணிதர வேண்டிய நிலம் வாங்கி விட்டனர். சுப்பையா செட்டியார் இறந்து ஒரு மாதத்திற்கெல்லாம் அவர் நண்பரான முத்துராமலிங்க சேதுபதியும் முருகனடி சேர்ந்தார்.

முத்துராமலிங்க சேதுபதிக்கு இரண்டு சுடர்மணிப் புதல்வர் இருந்தனர். **பாஸ்கரர், தினகரர்** இருவரும் சிறுவர்; ஆதலால் இராமநாதபுரம் ஜமீன், சர்க்கார் ஆட்சியிலிருந்தது. முத்துராமலிங்கசேதுபதி இறக்கும்போது அவர் அருகே கண்ணீர்விட்டு நின்றவருள் **சிவநேசஞ் செட்டியாரும்** ஒருவர். "பாஸ்கரனையும், தினகரனையும் நன்றாகப் படிக்க வைத்து ஒற்றுமையாயிருந்து என் பெருமையைக் காப்பாற்றச் சொல்லுங்கள்; அவர்களைப் பாதுகாப்பது முருகன் பொறுப்பு. உங்கள் அன்பு" என்று அருகிலிருந்த நண்பரை (சிவநேசரையும்) பார்த்துச் சொல்லியே உடல் பிரிந்தார், சேதுபதி.

அவ்வாறே சிவநேசர் பாஸ்கர சேதுபதியிடமும், தினகரசேதுபதியிடமும் உள்ளன்பு வைத்து வந்தார். இருவரும் சென்னை மாகாணக் கல்லூரியில் படித்துத் தேறி, தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் பெரும் புலமை பெற்றனர். மறவருக்குரிய வீரத் தொழிலில் சிறந்தனர். யானையேற்றம், குதிரையேற்றம், சிற்பம், சித்திரம், சங்கீதம் அனைத்திலும் திறமை பெற்றனர். தினகரர் நூலாராய்ச்சியிலும் தத்துவ விசாரணையிலும் கவிதையிலும் காலங் கழித்தார்.

* * *

பாஸ்கரசேதுபதி பட்டம் புனைந்து, நாடாண்டார். அவர் அறிவும், அறமும், அருளும், அன்பும் சேர்ந்த அற்புத மன்னராக விளங்கினர். தமிழைக் கண் போலக் காத்தார். தம் ஒன்றுவிட்ட சகோதரரான **பாண்டித்துரைத்** தேவருடன்கூடி, மதுரையில் தமிழ்ச் சங்கமும், ஆங்கிலக் கலாசாலையும் நிலைநாட்டினர். இந்து மதத்திற்காக அரிய தொண்டு செய்தார். சைவத் திருமடங்களுக்கும் தமிழ்ப் புலவர்களுக்கும் பொருளை அள்ளி அள்ளிக் கொடுத்தார். தம்பியைப் போலத் தாமும் கல்வியைக் கண்ணெனப் போற்றினர். மாணவர் கல்விக்கு வேண்டிய உதவி செய்தார். அவரால் முன்னுக்கு வந்த புலவர் பலர். வேம்பத்தூர் பிச்சுவையர், மாம்பழக் கவிராயர், சங்கீத வித்வான் ஸ்ரீநிவாச ஐயங்கார், தேசபக்தர் எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார் முதலிய பலர்.

பாஸ்கர சேதுபதிக்கு நமது **சிவநேசஞ் செட்டியாரிடம்** பெருமதிப்புண்டு. அரண்மனையில் என்ன கச்சேரி நடந்தாலும், விசேஷம் நடந்தாலும் செட்டியாரை அன்புடன் அழைத்து அருகே அமரச் செய்வார். அவர் குலத் தொழிலில் நேர்மையானவர், கொடையில் தாராளர், கல்வியில் ஆர்வமுடையவர் என்று பாஸ்கர சேதுபதி வியந்து புகழ்வார். சேதுபதி சந்நிதானத்தில் எப்போதும் புலவர் புலமை விளங்கிக் கொண்டிருக்கும். சிவநேசர் கேள்வியறிவால் புலவரானர்.

* * *

சிவநேசருக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. மூத்த பிள்ளை **வேள்ளையன் செட்டி**. தொழிலுக்கேற்ற கல்வி கற்று ஈப்போவுக்கு சென்றிருக்கிறன். பையன் முரடன், பணப்பித்தன். அடுத்த பிள்ளையே **இராமநாதன்**. எட்டு வயதுப் பையன், சூடிகையும் சுறுசுறுப்புமான பிள்ளை. இவன்மேலேதான் தகப்பனருக்குப் பிரியம் அதிகம். மனைவி விசாலாட்சியின் உறவின் முறையார் மதுரையில் லேவாதேவி நடத்தினர். அவள் அடிக்கடி மதுரை செல்லும் போது, தன் சின்னவனையும் அழைத்துச் செல்வதுண்டு. இருவரும் திருஞானசம்பந்தர் மடத்திற்கு அடிக்கடி சென்று தேவார பஜனை கேட்பதுண்டு. **சுந்தா ஓதுவார்** அங்கே இனிமையாகத் தேவாரம் பாடிச் சைவப் பிரசாரம் செய்து வந்தார். அவருக்கு இராமநாதனிடம் மிகவும் பிரியம். பையன் தேவாரம் என்றல் ஆவலாக ஓடிவருவான். அவனுக்கு ஓதுவார் சமயாசாரியார் கதைகளையும், தேவார திருவாசகப் பாசுரங்களையும் சொல்லி வைத்தார். ஒரு சமயம் விசாலாட்சி மதுரையில் ஆறு மாதம் தங்கியிருந்து வந்தாள். அதற்குள் பையன் பல தேவார பாடல்கள் பாடம் பண்ணி உற்சாகமாகப் பாடத் தொடங்கி விட்டான்.

(**தொடரும்.**)

சிலப்பதிகாரம்

சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்

கொஞ்ச காலமாகத் தமிழ் மக்களிடத்தில் ஆழமான தமிழுணர்ச்சி வேரூன்றி வருகிறது. தமிழைப் பற்றிய பேச்சும், எழுத்தும் மிகுதியாகத் தோன்றியிருக்கிறது. புது உலகக் கருத்துகளையும், மேல் நாட்டு மொழிகளிலுள்ள நூல்களையும் தமிழில் வெளியிட வேண்டிய முயற்சியை அநேகர் செய்து வருகிறார்கள்.

இம் முயற்சிகள் மிகவும் அவசியமே யானாலும், தமிழிலுள்ள பழைய நூல்களை எல்லோரும் எளிதாகப்படித்து அறிந்து கொள்வதற்கு வழி செய்வது ஒரு முக்கியமான கடமையாகும். தமிழில் அருமையான இலக்கியங்கள் இருக்கின்றன. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, குறள், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை—இவை போன்ற சிறந்த கலைச் செல்வத்தை நம் முன்னோர் நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்த மாதிரி நூல்களைச் சாதாரண மக்கள் படிப்பதற்கு உதவியாய் எளிய நடையில் எழுதிய உரைகள் அதிகமாக இல்லை. அடியார்க்கு நல்லார் பரிமேலழகர், நச்சினார்க்கினியர் முதலிய பெரிய உரை ஆசிரியர்களுடைய உரைகள் சாமான்ய மக்களுக்கு எளிதில் விளங்குவதில்லை. இவர்களுடைய வசனநடை மிகவும் கடின மானது.

தமிழில் இலக்கண இலக்கியப் பயிற்சி அதிக மில்லாத சாதாரண மனிதன் சுலபமாகப் படித்துப் பொருள் தெரிந்து கொள்ளும் விதத்தில் சிலப்பதிகாரத்திற்கு "வசந்த"த்தில் உரை எழுதப்படும். தமிழ்ப் பயிற்சி அதிக மில்லாத ஒருவன் செய்யுள் நடையிலுள்ள ஒரு நூலைப் படிக்க வேண்டுமானால் முதலில் செய்யுளின் கருத்தை எடுத்துக் காட்ட வேண்டும். பிறகு சொற்களைப் பதம் பிரித்துக் காட்ட வேண்டும். கடைசியாகப் பதவுரை சொல்லவேண்டும். கீழ்க்கண்ட உரை இந்த முறையில் எழுதப் பட்டிருக்கிறது.

சிலப்பதிகாரம்—பதிகம்

'பதிகம்' என்பது முகவுரை; நூலில் சொல்லப்பட்ட கதை இதில் சுருக்கிச் சொல்லப் பட்டிருக்கிறது.

(1—11) சேர நாட்டு அரசனாகிய செங்குட்டுவனுடைய தம்பி இளங்கோ அடிகள் துறவறம் பூண்டு திருக்குணவாயில் என்ற ஊரில் இருந்தார். ஒரு நாள் அவரிடம் மலைவாசிகளாகிய குறவர் வந்து அடியில்க் கண்ட செய்தியைச் சொன்னார்கள். “வேங்கை மரத்தின் நிழலில், ஒரு முலையை இழந்த பத்தினியாகிய கண்ணகி நின்று கொண்டிருந்தாள். அப்போது இந்திரனைச் சேர்ந்த தேவர்கள் வந்து அவள் கணவனாகிய கோவலனை அவளுக்குக் காட்டி அவர்கள் இருவரையும் விண்ணுலகத்துக்கு கூட்டிக் கொண்டு போனார்கள். இந்த ஆச்சரியமான காட்சியை நாங்கள் கண்ணாரக் கண்டோம்.” குறவர்கள் இந்தச் செய்தியை அடிகட்குச் சொல்லும் போது அவருடன் தமிழ்ப் புலவரான கூல வாணிகன் சாத்தன் இருந்தார். அவர், “இந்தக் கதை நடந்த செய்திகளை நான் நன்றாய் அறிவேன்” என்று அதன் விவரத்தைச் சொல்லத் தொடங்கினார்.

குணவாயில் கோட்டத்து அரசு துறந்து இருந்த
குடக்கோச் சேரல் இளங்கோ அடிகட்குக்,
குன்றக் குறவர் ஒருங்கு உடன் கூடிப்,
“பொலம் பூ வேங்கை நலம் கிளர் கொழு நிழல்
ஒரு முலை இழந்தாள் ஓர் திருமா பத்தினிக்கு,
அமரர்க்கு அரசன் தமர் வந்து ஈண்டி, அவள்
காதல் கொழுநனைக் காட்டி, அவளொடு எம்
கட்புலம் காண விட்புலம் போயது
இறும் பூது போலும்; அஃது அறிந்தருள் நீ” என,
அவன் உழை இருந்த தண் தமிழ்ச் சாத்தன்,
“யான் அறிகுவன் அது பட்டது,” என்று உரைப்போன்;

பதவுரை

[குணவாயில் கோட்டத்து — திருக்குணவாயில் என்னும் ஊரிலுள்ள கோவிலில்; அரசு துறந்து இருந்த — அரச இன்பத்தை நீக்கி வசித்து வந்த ; குடக்கோச் சேரல் — மேல்நாட்டு அரசனாகிய சேரன் செங்குட்டுவனுடைய; இளங்கோ அடிகட்கு-இளையவரான இளங்கோஅடிகள் என்பவருக்கு; குன்றக் குறவர் — மலையில் வாழும் குறவர்கள்; ஒருங்கு உடன் கூடி — எல்லோரும் ஒன்றாய்க் கூடிப் போய்; பொலம் பூ வேங்கை— பொன்னைப் போன்ற பூக்களை உடைய வேங்கை மரத்தின்; நலம் கிளர் — குளிர்ச்சி நிறைந்த; கொழு நிழல் — செழிப்பான நிழலில்; ஒரு முலை இழந்தாள் — தன்னுடைய ஒரு முலை இழந்தவளாகிய; ஓர் திருமா

பத்தினிக்கு — ஒரு அழகிய வீரப்பத்தினிக்கு; அவள் காதல் கொழுநனை — அவளுடைய காதல் கணவனை; காட்டி — கண்ணெதிரில் கொண்டு வந்து காட்டி; அமரர்க்கு அரசன் தமர் — தேவர்களுக்கு அரசனுகிய இந்திரனுடைய சுற்றத்தார்; அவளொடு எம் கட்புலம் காண — அவளோடு எங்கள் கண்கள் காணும்படியாக; விட்புலம் போயது — விண்ணுலகம் சென்றது; இறும்பூது போலும் — மிக்க வியப்பாக இருந்தது; அஃது நீ அறிந்தருள் என — அதனை நீர் அறிந்தருள் வாயாக என்று கூற; அவன் உழை இருந்த — அப்போது அவன் பக்கத்தில் இருந்த; தண் தமிழ்ச் சாத்தன் — இனிய தமிழ்ப் புலவனுன மதுரை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனுர்; அது பட்டது — அந்தச் செய்தி விளைந்தது; யான் அறிகுவன் — நான் அறிவேன்; என்று உரைப்போன் — என்று சொல்லத் தொடங்கியவர்.]

(12—20) சாத்தனுர் கண்ணகியின் வரலாற்றைச் சுருக்கமாக இளங்கோ அடிகட்குச் சொல்லுகின்றுர். அத்திமாலையை அணிந்த சோழனுடைய தலைமைப் பட்டினம் நீங்காத சிறப்பை உடைய புகார் என்று வழங்கும் காவிரிப்பூம் பட்டினம். அந்த ஊரில் வணிக குலத்தைச் சேர்ந்த கோவலன் என்று ஒருவன் இருந்தான். அவன், பெயரும், கீர்த்தியும் பெற்ற மாதவி என்னும் ஒரு நாட்டியக் கன்னிகையுடன் சிற்றின்பத்தில் கூடி ஆடி தன் சொத்து முழுவதும் இழந்து விட்டான்.

கோவலனுடைய மனைவி உத்தம பத்தினியாகிய கண்ணகி என்பவள். அவளிடம் விலை உயர்ந்த கால்ச்சிலம்பு இருந்தது. சொத்தை இழந்து ஏழையான பின் தன் சொந்த ஊரில் இருக்க மனமில்லாதவனுய்த் தன் மனைவியின் கால்ச் சிலம்பை விற்று தன் பிழைப்பிற்கு வழி தேடலாம் என்று யோசித்து, அச்சிலம்பை விற்பதற்கு மனைவியுடன், பாண்டியன் தலை நகராகிய பேர் பெற்ற மதுரையில் கோவலன் புகுந்தான்.

ஆரங் கண்ணிச் சோழன் மூதூர்,
பேராச் சிறப்பின் புகார் நகரத்து,
கோவலன் என்பான் ஓர் வாணிகன்; அவ்வூர்
நாடகம் ஏத்தும் நாடகக் கணிகையொடு
ஆடிய கொள்கையின் அரும் பொருள் கேடு உற,
கண்ணகி என்பாள் மனைவி; அவள் கால்
பண் அமை சிலம்பு பகர்தல் வேண்டி,
பாடல் சால் சிறப்பின் பாண்டியன் பெருஞ் சீர்
மாட மதுரை புகுந்தனன்:—

[ஆரங்கண்ணி — அத்தி மாலையை அணிந்த; சோழன் மூதூர் — சோழ மன்னனின் பழைய பட்டினமாகிய; பேராச் சிறப்பின்—நீங்காத சிறப்பையுடைய; புகார் நகர்த்து—புகார் என்னும் காவிரிப்பூம் பட்டினத்தில்; கோவலன் என்பான் ஓர் வாணிகன்—கோவலன் என்னும் பெயரையுடைய, வாணிக குலத்தைச் சேர்ந்த ஒருவன்; அவ்வூர் — அந்தப் பட்டினத்தில்; நாடகம் ஏத்தும் — நாடகத்தை ஆட்டிச் சிறப்பிக்கும்; நாடகக் கணிகை யொடு — ஒரு நாட்டியக் காரியுடன்; ஆடிய கொள்கையின் — தான் சேர்ந்து ஒழுகிய ஒழுக்கத்தால்; அரும் பொருள் கேடு உற —தேடிய பெரும் செல்வம் எல்லாம் அழிந்து போக; கண்ணகி என்பாள் மனைவி — கண்ணகி என்ற அவன் மனைவி; அவள் கால் பண்அமை சிலம்பு — இனிய ஓசை அமைந்த அவள் கால் சிலம்பை; பகர்தல் வேண்டி — விற்பதற்காக; பாடல் சால் சிறப்பின் — புலவர்களால் பாடப்பட்டு சிறப்பை அடைந்த; பாண்டியன் பெருஞ்சீர் — பாண்டியனின் மிக்க புகழை உடைய; மாட மதுரை புகுந்தனன் — மாளிகைகளையுடைய மதுரை நகரில் புகுந்தான்.]

(20—30) மதுரையில்ப் புகுந்த கோவலன் அந்தச் சிலம்பைத் தன் கையில் எடுத்துக் கொண்டு அந்நகரத்திலுள்ள கடைத் தெருவின் வழியே போகும் போது பொன் வேலை செய்கின்ற ஒரு தட்டானை அங்கே கண்டு, அவனிடம் தன் கையிலிருந்த சிலம்பைக் காட்டினன்.

இந்தத் தட்டான் கொஞ்ச நாட்களுக்கு முன் அரண்மனையிலிருந்து அரசன் தேவியினுடைய சிலம்பில்ஒன்றைத் திருடினவன். கோவலன் கையிலிருந்த சிலம்பைக் கண்டதும், தான் தப்பித்துக்கொள்ள நல்ல வழி கிடைத்தது என்று நினைத்து, "இந்த விலை உயர்ந்த சிலம்பானது அரசன் மனைவியாகிய கோப்பெருந் தேவியல்லாமல் மற்ற எவரும் அணிவது பொருத்தமில்லை. அரண்மனைக்கு நான் போய் இந்தச் சிலம்பைப் பற்றித் தெரிவித்து வருகிறேன். அது வரையில் நீ இவ்விடத்திலேயே இரு" என்று கோவலனுக்குச் சொல்லி விட்டு அரண்மனையை நோக்கிப் போனான்.

அங்கே அரசனாகிய பாண்டியன் நெடுஞ்செழியனைக் கண்டு, "அரண்மனையில்க் களவுபோன சிலம்பை பிறர்நாட்டு ஒரு திருடன் கையில்க் கண்டேன்" என்று சொன்னான். தட்டான் இந்தச் செய்தியைச் சொல்லும் போது அரசன் தன் தேவியின் ஊடலைத் தீர்க்க காம வெறியுடன் அந்தப்புரம் போய்க் கொண்டிருந்தான். காமவெறி யாயிருந்ததாலும் தனக்குப் பழையவினைப் பயன் விளைய வேண்டிய காலம் வந்து விட்டதாலும், அரசன் தட்டான் சொன்ன விஷயத்தை நன்றாய் ஆராயாமல், தன் காவலாளரில் நன்கு பழகியவர்கள் சிலரைக் கூப்பிட்டு, "அந்தத் திருடனைக் கொன்று சிலம்பினை இங்கே கொண்டு வாருங்கள்" என்று கட்டளை இட்டான்.

..............................அது கொண்டு
மன் பெரும் பீடிகை மறுகின் செல்வோன்,
பொன் செய் கொல்லன் தன்கைக் காட்ட;
'கோப் பெருந் தேவிக்கு அல்லதை, இச்சிலம்பு
யாப்புறவு இல்லை; ஈங்கு இருக்க' என்று ஏகி,
பண்டு தான் கொண்ட சில் அரிச் சிலம்பினைக்
கண்டனன் பிறன் ஓர் கள்வன் கை என;
வினை விளை காலம் ஆதலின், யாவதும்
சினை அலர் வேம்பன் தேரான் ஆகி
கன்றிய காவலர்க் கூஉய், "அக்கள்வனைக்
கொன்று அச்சிலம்பு கொணர்க ஈங்கு" என,

பதவுரை

[அது கொண்டு — அச்சிலம்பைக் கையில்க் கொண்டு; மன் பெரும் -- மிக்க சிறப்பினை உடைய; பீடிகை மறுகில் — வணிகர் தெருவில்; செல்வோன் — போகின்றவன்; பொன் செய் கொல்லன் — பொன் ஆபரணங்களைச் செய்கின்ற தட்டான் ஒருவனிடம்; தன் கை காட்ட — அவன் கையிலிருந்த சிலம்பைக் காட்ட; கோப் பெருந் தேவிக்கு அல்லதை — அரசனுடைய மனைவிக்கு அல்லாமல்; யாப்புறவு இல்லை — மற்ற

எவருக்கும் இச்சிலம்பு பொருத்தமில்லை; ஈங்கு இருக்க என ஏகி — இவ்விடத்திலேயே நீ இருப்பாயாக என்று அவனை இருத்தி தான் மட்டும் போய்; பண்டு தான் கொண்ட — முன்பு தான் திருடிக் கொண்ட; சில் அரிச் சிலம்பினை — மெல்லிய பூ வேலை செய்யப்பட்ட சிலம்பை; கண்டனன் பிறன் ஓர் கள்வன் கையில் என — வேறு ஒரு திருடன் கையில் நான் பார்த்தேன் என்று சொல்ல; வினைவிளை காலம் ஆதலின் — தனக்கு பழைய வினைப் பயன் விளைய வேண்டிய காலம் வந்து விட்ட படியால்; யாவதும் — சிறிதும்; சினை அலர் வேம்பன் — கொம்புகளில் அலர்ந்த வேப்ப மாலையை அணிந்த பாண்டியன்; தேரான் ஆகி — ஆராயாதவன் ஆகி; கன்றிய காவலர் கூஉய் — பழகிய காவலாளிகளில்ச் சிலரைக் கூப்பிட்டு; அக்கள்வனைக் கொன்று — அத்திருடனைக் கொன்று; அச் சிலம்பு கொணர்க ஈங்கு என — அந்தச் சிலம்பை இங்கே கொண்டு வாருங்கள் என்று சொல்ல]

(*31—36*) அரசனுடைய உத்திரவின் படி காவலாளர் கோவலனைக் கொன்று விட்டார்கள். கொல்லப்பட்ட கோவலனுடைய மனைவியாகிய கண்ணகி கணவனை இழந்ததினால் பற்றுக் கோல் இல்லாமல் நிலை தடுமாறிக் கதறி அழுது தன் கற்பின் வல்லமையால் பாண்டியன் அழிந்து போகும்படி செய்து, தன் அழகிய மார்பிலுள்ள ஒரு முலையைத் திருகி எறிந்து நிலை பெற்ற சிறப்பை உடைய மதுரை நகரைப் பெரிய நெருப்பானது உண்ணும்படி செய்தாள். அப்படிச் செய்த பத்தினிப் பெண் தான் இந்தக் குறவர்கள் சொல்லிய பெண்மணியாகும் என்று கூல வாணிகன் சாத்தனார், இளங்கோ வடிகட்குக் கண்ணகியின் வரலாற்றைச் சொன்னார்.

"கொலைக் களப்பட்ட கோவலன் மனைவி,
நிலைக்களம் காணாள்; நெடுங் கண்ணீர் உகுத்து,
பத்தினி ஆகலின், பாண்டியன் கேடு உற
முத்து ஆர மார்பின் முலை முகம் திருகி
நிலை கெழு கூடல் நீள் எரி ஊட்டிய
பலர் புகழ் பத்தினி ஆகும் இவள்" என;

பதவுரை

[கொலைக்களம் பட்ட — கொலைக் களத்திலே வெட்டுண்ட; கோவலன் மனைவி — ; நிலைக்களம் காணாள் — தனக்கு நிலையான ஓரிடத்தையும் அறியாதவளாய் (அதாவது கணவனை இழந்தபடியால் நிலை தடுமாறி) நெடும் கண் நீர் உகுத்து — தன் நீண்ட கண்களிலிருந்து நீரைச் சிந்தி (அழுது); பத்தினி ஆகலின் — ; பாண்டியன் கேடு உற — பாண்டிய மன்னன் அழிந்து போகும்படி; முத்து ஆர மார்பின் — முத்து மாலை புரளுகின்ற தன் மார்பிலுள்ள; முலை முகம் திருகி — ஒரு முலையைத் திருகி (எறிந்து); நிலை கெழு கூடல் — நிலைபெற்ற சிறப்பை உடைய மதுரை மா நகரத்தை; நீள் எரி ஊட்டிய—பெரிய நெருப்பானது உண்ணும்படி செய்த; பலர் புகழ் பத்தினி — பலராலும் புகழப்பட்ட பத்தினி இவள் ஆகும் என; (இக்குறவர் கூறிய) இப் பெண்மணியாகும் என்று சொல்ல;]

கலைக்கதை:

அழியாத அழகு

பெ. தூரன்

அவன் ஒரு ஓவியன். அவள் ஒரு கட்டழகுள்ள இளங்குமரி. அழகை அள்ளிப் பருகி வர்ணங்களால் சித்திரிக்கும் அவன் உள்ளத்தை அவள் கவர்ந்ததில் ஆச்சரியமில்லை.

இந்த உள்ளக் கவர்ச்சி ஆரம்பத்தில் கலை உணர்ச்சியாகவே தொடங்கிற்று. அவளது கட்டுக் கடங்காத எழிலை அவன் எழுத ஆவல் கொண்டான். அவளும் இணங்கினாள். ஒரு சிறு அறையிலே, சித்திரக் கூட்டங்களுக்கிடையே தனிமையில் இருவரும் பல நாட்கள் சந்திக்கலானார்கள்.

சில நாட்களில் 'அந்நியம்' என்ற உணர்ச்சி நட்புணர்ச்சிக்கு இடங் கொடுத்து விட்டது. இப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் பெயர் சொல்லித் தாராளமாகக் கூப்பிட்டுக் கொள்ளுகிறார்கள்.

"முருகா, இன்னும் எத்தனை நாட்களுக்கு எழுதிக் கொண்டிருப்பாய்?"

"எத்தனை நாளைக்குத் தீட்டினாலும் உனது அழகு முழுவதையும் திரையில்க் காட்ட முடியாதே! தெய்வம், நீ வெறுந் தெய்வமல்ல, அழகுத் தெய்வம்."

தெய்வானை சிரித்தாள். மறு கணம் நாணிக் குனிந்தாள். முருகன், தான் மிகைப் படுத்திக் கூறியதாக நினைக்கவேயில்லை. உண்மையைச் சொல்ல ஏற்ற வார்த்தைகள் அகப்படவில்லையே என்றுதான் ஏங்கினான். ஆனால் சொல்ல முடியாத அந்தக் காரியத்தை அவன் கை செய்து கொண்டிருந்தது. அதில் சந்தேகமேயில்லை.

முருகன் தெய்வானையின் ஒவ்வொரு அங்கத்திலும் பொங்கும் "பருவச்சாயலை" படத்தில்பதித்துக் கொண்டிருந்தான். அவளோ அவன் தனது உருவத்தைத் திரையில்ப் பதிப்பதோடு உள்ளத்தையும் பதித்துக் கொண்டான் என்பதை மெதுவாக உணர்ந்தாள்.

* * *

இப்பொழுது அவர்கள் சதிபதிகள். தெய்வானையின் ஒவ்வொரு அசைவும் முருகனுக்கு ஒரு புது ஓவியத்திற்கு "மாதிரியாக" இருந்தது. முருகன் எழுதும் ஒவ்வொரு சித்திரமும் தெய்வானையின் காதலை வளர்க்கும் உயிர்ச் சத்தாக இருந்தது.

முருகன் சிறந்த ஓவியன் என எங்கும் புகழ் பெற்றான். பத்து வருடங்கள் சென்றன.

அதன் பிறகுதான் எதிர்பாராத சம்பவமொன்று நடந்தது. ஒரு நாள் மாலை முருகன் கண்களை மூடிக்கொண்டு மானசிக ஓவிய மொன்று கற்பித்துக் கொண்டிருந்தான். தெய்வானை அங்குவந்து எதிரில்நின்றதும் அவனுக்குத் தெரியவில்லை. அவள் அவனைப் பார்த்து ஆனந்தப் பட்டுக்கொண்டிருந்தாள். ஓவியன் கனவு துள்ளும் கண்களைத் திறந்தான். அவள் சிரித்தாள். ஆனால் அவன் சிரிக்கவில்லை.

எதிர்பாராத ஒன்றை அவன் கண்டான். கண்ணாடி போலிருந்த அவள் கன்னங்களில் முன்பிருந்த பளபளப்பைக் காணோம். கற்பனையுலகிலிருந்து மனதைத் திருப்பிய முருகன் திடுக்கிட்டான். தெய்வானையின் அழகும் மாறுவதா? கடவுள் படைக்கும் அழகுகளெல்லாம் இப்படித் தேய்ந்து அழிவதுதானா? அவன் நெஞ்சு படபடத்தது. அப்படியே பதைபதைத்துப் போனான்.

பலவகையான எண்ணங்கள், உணர்ச்சிகள் குமுறியது. அன்றிரவு முழுவதும் அவனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை: படுக்கையிற் புரண்டு கொண்டிருந்தான். உள்ளம் வெதும்பியது. கொஞ்சநேரத்திற் கொருதடவை அவன் நெடுமூச் செறிந்தான்.

தெய்வானையும் தூங்கவில்லை. அவள் மனத்தில் ஒரு கலவரம். என் இவ்வாறு உறக்கமில்லாமல் புரளுகிறார்? புதிதாக எதாவது ஒரு காட்சி அவர் எண்ணத்திற் புகுந்து ஓவியமாக வெளிவரும் முன்பு ஏற்படும் உயிர்ப்பு வேதனையா? இல்லையே-அதை எத்தனையோ தடவை அவள் கண்டிருக்கிறாளே.

மறுநாள் முருகன் தனது ஓவியக்கண்களோடு அவளை ஊடுருவிப் பார்த்தான். அவள் முகம் தூக்கமின்மையால் வாடியிருந்தது. ஆமாம்-பத்து வருடங்களுக்குமுன் அவன் கண்ட அழகு மறைந்துவிட்டது. கன்னியழகு போய்க் காதல் வாழ்க்கையிற் பிறந்த தண்மையழகை அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. அதை உணராத குருடனாகிவிட்டான். அவனால் இந்த மாறுதலைத்தாங்க முடியவில்லை.

“என்ன, கடவுள் படைத்த அழகு இவ்வளவுதானா? அழிவதுதானா? இத்தனை பேரழகையும் நிலைத்திருக்கச்செய்ய அவரால் முடியாதா? இன்னும் சிறிது காலத்தில் எல்லாம் சூனியமாகி விடுவதா? சேச்சே! அதை என்னால் சகிக்கவே முடியாது” முருகன் நெட்டுயிர்த்தான். ஒரு வேதனைக் குரல் அவனையறியாது வெளிப்பட்டது.

முருகனுக்கு நிம்மதி கொள்ளவில்லை. அன்று முழுதும் அறைக்குள்ளேயே ஊசலாடிக் கொண்டிருந்தான். மாலை நேரம், அன்று என்றுமில்லாத வனப்புடன் தோன்றியது. தெய்வானை முருகனை அழைத்தாள். “வெளியே வந்து பாருங்கள். அந்தி வேளை என்ன அற்புதமாக இருக்கிறது! இதை ஒரு நல்ல காட்சியாகத் தீட்டலாம்”.

முருகன் தலையை வெளியே நீட்டினான். "இன்னும் சிறிது நேரத்தில் இது அழியப்போகிறது. இந்த அழகு யாருக்கு வேண்டும்? இவ்வளவுதான் இறைவன் படைப்பு மகிமை" என்று சொல்லிவிட்டு அவன் மறைந்து விட்டான். அவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

முருகன் பைத்தியம் பிடித்தவன் போலாகி விட்டான். அகிலாண்டங்களையும் அதிலுள்ளவை அனைத்தையும் ஆக்கியவனைச் சபிக்கலானான். அழியாத அழகைப்படைக்க முடியாத கடவுள் என்ன கடவுள்! தெய்வானையின் பேரெழிலும் மாய்வதா? சீ இந்தக் கடவுளுக்குக் கொஞ்சமும் திறமையில்லையே. சீதையின் அழகைக்கண்டு மயங்கிய ராவணன் குலத்தோடு மாண்டான். ஆனல் அந்த அழகு எங்கே? கம்பன் காவியத்தில் காண்பதல்லால் கடவுள் கைவன்மை எங்கே?

தலைமேல் கையை வைத்தான் முருகன். தலை சூடாக இருந்தது. குழம்பிய மனதிலிருந்து திடீரென்று ஒரு எண்ணம்உதயமாயிற்று. "சிருட்டி கர்த்தாவால் நிலைக்கச் செய்ய முடியாத இந்த அழகை என் கைத்திறனல் என்றும் இருக்கச் செய்கிறேன், பார்!" என்று கூவினன். வழி பிறந்து விட்டது கண்டு அவன் துள்ளிக் குதித்தான். ஆனந்த வெறியில் ஆடினன்.

இந்த முறை அவன் தெய்வானையை முன்னிருத்திப் படம் எழுதவில்லை. அவளுடைய சாயல்களை வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு சித்திரங்களில் சேமித்து வைத்திருந்தவைகளையெல்லாம் ஒருங்கு திரட்டினன். முதன் முதலில் அவள் ஓவியத்திற்கு 'மாதிரியாக நின்றபோதிருந்த யௌவனத்தை அடிப்படையாக வைத்தான். மணம் முடிந்து முதல் தடவையாகத் தனி அறை புகுந்த போது அவள் முகத்தில் தோன்றிய முறுவலை இப்புதுச் சித்திரத்தில் கொண்டு வந்தான்.

இப்படியாகச் செவ்வியெல்லாவற்றையும் திரட்டிப் பதினறு வயது கன்னிகையாக அவள் இருந்தவாறே எழுதி விட்டான்.

அவன் கொண்ட குதூகலத்திற்கு அளவேயில்லை. வெற்றிக்குறி அவன் முகத்தில் தாண்டவமாடியது. "இது என்றும் அழியாது. உலகம் உள்ள அளவும் நிலைத்திருக்கும். ஆனல் கடவுள் உண்டாக்கிய அந்த அழகு மறைந்து போகும்—இது என்று மிருக்கும்; அப்படியே யிருக்கும்."

இந்த வார்த்தைகளை அவன் உலகுக்கே பறை சாற்றுபவன் போல் உரத்துக் கூறினன். "தெய்வம் இதோ இதை வந்து பார்."

ஆனந்தமான குரலைக் கேட்டுப் பல நாட்களாகி விட்டன. தெய்வானை ஓடிவந்தாள்.

"அன்று இப்படித்தானே இருந்தாய்?"

"ஆமாம்-ம்-அதென்னமோ, உங்களுக்குத்தானே தெரியும்? நான் நினைத்துக் கொண்டா இருக்கிறேன்?"

சிறிது நேரம் இருவரும் மௌனமாக ஓவியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"இப்பொழுது இதை எதற்காக வரைந்தீர்கள்?"

"இந்த அழகை என்றும் நிலைக்கச் செய்வதற்காக."

"என்ன இருந்தாலும் இது உயிரில்லாத திரைதானே?"

"இதற்கா உயிரில்லை! என்னுடன் அந்தக் குமரி பேசுகிறுளே! அந்தச் சிரிப்பு இப்போது உன்னிடமேது? அதிலில்லாத 'உயிர்'வேறு எங்கே

யிருக்கிறது?"

தெய்வானைக்கு அவன் கருத்துச் சிறிதும் புலப்படவில்லை!

* * *

மேலும் ஒரு ஐந்து வருடங்கள் கழிந்து விட்டன. தெய்வானையின் மடியில் ஓராண்டு நிரம்பாத பெண் குழந்தை யொன்று விளையாடிக் கொண்டிருக்கிறது. அது வொன்றே இன்று அவளுக்கு ஆறுதல். குழந்தையின் சிரிப்பே அவள் உள்ளத்தைக் கவ்வும் கவலையிருளை அகற்றும் தண்ணமுதமாயிருந்தது.

முருகனுக்கு அந்தப் படமே எல்லாமாக ஆகிவிட்டது. அதைக் கட்டி அணைத்துக் கொள்வான். அத்துடன் கொஞ்சுவான்.

தெய்வானையைப் பார்க்கக் கூட அவனுக்குப் பிடிக்கவில்லை. தாய்மை யெய்திய அவள் தோற்றம் அவனுக்குக் கசந்தது. நாளடைவில் அவள் தானிருக்கு மிடத்திற்கு வருவதையும் வெறுக்கலானான். காணும்போதெல்லாம் உள்ளத்தில் வெறுப்புப் பொங்கலாயிற்று.

தெய்வானை நைந்துருகினாள். ஆனாலும், தன் கணவனது நிலையை உணர்ந்து அவனிருக்கும் அறைக்குள் போவதையே குறைத்துக் கொண்டாள்.

ஒரு நாள்க் காலை. பத்துமணியாகிவிட்டது. இன்னும் வரக் காணோமே என்று அவள் காலையாகாரத்தை ஏந்திக் கொண்டு அவனறைக்குள் நுழைந்தாள். முருகன் படத்துடன் கொஞ்சிக் கொண்டிருந்தான். தனது கைத்திறமையில் முழுகியிருந்த அவன் கடவுள் சிருஷ்டியைப் பார்த்ததும் என்றுமில்லாத பெருங் கோபமடைந்தான். அவள் முகத்தில் காரி உமிழ்ந்தான். அப்பொழுதும் அவன் உள்ளக் கசப்பு மட்டாக வில்லை. பக்கத்தில் கிடந்த படச் சட்டம் ஒன்றை யெடுத்து அவள் மீது வீசினான்.

தெய்வானை பதுமைபோல் நின்று கொண்டிருந்தாள். நெற்றியில் வழியும் ரத்தத்தையும் அவள் துடைக்க வில்லை. கண்களில் மட்டும் அடக்க முடியாத ஒரு துளி வெளிப்பட்டது.

"இனிமேல் என் முன்பு வந்து என்னை வருத்தப் படுத்தாதே. கடவுளின் கேவலக் கைவேலையைப் பார்த்தது போதும்" என்று முருகன் வெறுப்புடன் பேசலானான்.

அவனது சித்திர சாலைக்குக் கம்பி யில்லாத சாளர மொன்றுண்டு. வீட்டின் பின் கட்டத்தை நோக்கியிருந்தது அது. இப்பொழுது அதன் வழியாகத்தான் உணவு வருகிறது. காலா காலத்தில் உணவேந்திய ஒரு கை சன்னலின் வழியே தென்படும். முருகனும் அவன் மகிழ்ந்த படமும் யாதொரு தடங்கலுமின்றி ஏகாந்தமாக இருந்தனர்.

முருகனுக்குப் படத்தின் மீதேற்பட்ட ஆசை கொஞ்சங் கொஞ்சமாக வளர்ந்தது. சிறிது நேரமும் அதைவிட்டுப் பிரிய அவனால் முடிவதில்லை. சதா அதைப்பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தான். புது ஓவியங்கள் தீட்டுவது, நண்பர்களுடன் சல்லாபிப்பது, தனது உடலை கவனிப்பது — எல்லா வற்றையும் மறந்துவிட்டான். அந்தக் கன்னியழகொன்றே அவன் கவனத்தைக் கவர்ந்திருந்தது. "இந்த அழகை அழியா அழகாகச் செய்து விட்டேன்" என்று வெறி பிடித்தவன் போல்ச் சொல்லுவான்; படத்தைப் பார்ப்பான். அந்த மோகனச் சிரிப்பு அவனை எதிர்கொள்ளும். முருகன் அப்படியே சொக்கியிருப்பான்.

இரண்டு வருடங்கள் இவ்வாறு கழிந்தன. முருகனுக்குச் சித்தப்

பிரமை என்ற வதந்தி எங்கும் பரவலாயிற்று. "சிறந்த ஓவியன், பாவம் இப்படியாகிவிட்டது" என்று பலரும் பேசலானார்கள். ஆனால் அவனுக்கு ஓவியப் பிரமை யென்று யாரும் தெரிந்து கொள்ளவில்லை. தேகத்தைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாதிருந்ததால் இருமல் அடிக்கடி வந்து கொண்டிருந்தது.

அவன் உடல் மெலிந்து விட்டது. கன்னம் ஒடுங்கி கண் குழிந்து விட்டது. ஆனால் ஆசை மட்டும் தணிவதாயில்லை. படத்தைப் பார்ப்பான். அது சிரிக்கும். கள்ளுண்டவன் போல் களிப்புடன் படுக்கையில்ப் புரளுவான். உணர்ச்சி வேகத்தால் இருமல் விடாது வரும்.

சில மாதங்களில் அவன் படுக்கையை விட்டெழுந்திருக்கவும் சக்தி யற்றவனாகி விட்டான். எலும்புந் தோலுந்தவிர அவன் உடம்பில் ஒன்று மில்லை. சன்னல்ப் பக்கமாகக் கால் மாட்டை வைத்துக் கட்டிலைப் போட்டுக் கொண்டான். கைக்கெட்டும் தூரத்தில் அந்தச் சித்திரத்தை வைத்தான். அதையே பார்த்துக் கொண்டு படுத்திருந்தான்.

முருகனுக்கு இருமல் அதிகரித்தது. காய்ச்சலும் தலைவலியும் அடிக்கடி வந்தது. கால் குடைச்சலும் சிலசமயங்களில் சேர்ந்து கொள்ளும். உடல்த்துன்பம் அவன் சக்தியை மீற ஆரம்பித்தது. அந்தப் படம் அவனைப் பார்த்து சிரித்துக் கொண்டேயிருந்தது.

ஒரு நாள் மேனியிலேற்பட்ட வலியைச் சகிக்க முடியாது அவன் புரண்டு கொண்டு இருந்தான். விடாது இருமல் நெஞ்சைப் பிளந்தது. பிறருடைய அன்பு மொழிகளுக்கு ஏங்கி "அப்பா" என்று பெரு மூச்செரிந்து முருகன் ஓவியத்தை நோக்கினான். அது சிரித்தது.

அந்தச் சிரிப்பு இப்பொழுது அவனைப் பரவசப் படுத்த வில்லை.

துன்புறு பவனுக்காக அதில்க் கவலை யிருக்கிறதா! ஆறுதல் மொழி அந்த உதடுகளில்த் தொனிக்கிறதா? ஒரே சிரிப்பு, மாறுதலில்லாத ஒரே சிரிப்பு. முருகன் மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொண்டான். அவன் தலை கொதித்தது. மண்டை வெடித்து விடும் போலிருந்தது. திணறிக் கொண்டு தன்னையறியாது படத்துப் பக்கம் திரும்பினான்.

அந்தத் திரை சிரித்தது!

அன்றும் மறு தினமும் வேதனையில்க் கழிந்தன. முருகனுக்கு உணவு கொள்ள வில்லை. மனத்தில் பலவிதமான எண்ணங்கள் குமுறிக் கொண்டிருந்தன.

மூன்றாவது நாளும் குணம் ஒன்றும் காணவில்லை. உச்சி வேளையாக ஆகக் கால்க் குடைச்சல் ரொம்ப அதிகரித்தது. "கால் குடைச்சல் தாங்க முடிய வில்லையே, கால் குடைச்சல் தாங்க முடிய வில்லையே" என்று அடிக்கடி வாய் விட்டுக் கதறினான். ஒரு சமயம் அப்படிக் கூவிக் கொண்டு படத்தைப் பார்த்தான். அது சிரித்தது.

"சீ, உயிரற்ற பிணமே, சிரிக்கிறயா? என்மேல் உனக்கு அன்பிருந்தால் சிரிப்பாயா இப்போது?"

அவனுடைய காத லெல்லாம் பறந்து விட்டது. "இதுவா என் கைத் தொழில்? சே, கேவலம் ஒரே மாதிரி சிரிப்பு — ஒரே மாதிரி இளமை — ஒரே மாதிரி அழகு. இது எத்தனை நாளைக்கு இன்பந்தரும்!" அவன் உள்ளத்தில் தெளிவும், உறுதியும் ஏற்பட்டன. உடல் வாதையை யெல்லாம் பொருட்படுத்தாது எழுந்தான். வர்ணம் கலக்கும் பட்டைக் கத்தியை எடுத்தான். திரைச் சீலையைச் சின்னபின்னமாகக் குத்திக் கிழித்தெறிந்தான்.

முருகன் ஆயாசத்தால் படுக்கையில் சாய்ந்தான். ஆனால் மனத்தில் கொஞ்சம் சாந்தி யேற்பட்டது. அப்படியே கண்களை மூடினான். வாய் மட்டும் என்னென்னவோ பிதற்றிக் கொண்டிருந்தது.

வெகு நேரம் உறங்கி விட்டான். மறுபடியும் அவன் கண்களைத் திறந்த போது மனம் அமைதியாக இருந்தது. மூளைக் கொதிப்பும் நீங்கி விட்டது. அப்பொழுது யாரோ அவன் காலை மெதுவாக வருடிக் கொண்டிருப்பதை அவன் உணர்ந்தான்.

அதில் ஒரு சுகம் உண்டாயிற்று. மறுபடியும் கண்களை மூடிக் கொண்டான். அந்த மிருதுவான கைகளின் வெது வெதுப்பை சதா அனுபவித்துக் கொண்டிருக்கலாம் என்று தோன்றியது.

இருந்தாலும் யாரென்று பார்க்க வேண்டுமென்ற ஆசை பிறந்தது. மெதுவாக முருகன் தலையை மேலே தூக்கினான். இரு கரங்கள் மட்டும் தென் பட்டன. வேறு அவயவங்கள் சன்னலுக்கு வெளியே மறைந்திருந்தது.

தலையைப் படுக்கையில் வைத்துத் திரும்பவும் அவன் கண்களை மூடிக் கொண்டான். பல உணர்ச்சிகள் உள்ளத்தில் எழுந்து மோதிக் கொண்டன. திடீரென்று முருகன் எழுந்து அவ்விரு கைகளையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

பிறகு வெளியே எட்டிப் பார்த்தான். கண்ணீர் வடியும் தெய்வானையின் முகம் மேலே காதலோடு பார்த்தது. அதில் என்ன கவலை! கனிவு! ஆவல்!

என்றும் பார்த்தறியாத அழகை முருகன் அன்று கண்டான். கன்னியழகல்ல. முதிர்ந்த தாய்மையழகு, விசனத்திலாழ்ந்தும் பொங்குகிற பேரழகு. தினந்தினம் மாறிப் புதிதாகத் தோன்றும் உயிருள்ள அழகு.

''கடவுளே நீதான் ஒப்பிலா ஓவியன் — ஓவியர் மணி. நான் மாறுதலறியாத உயிர்ச் சக்தியற்ற அழகை உண்டாக்குபவன். நீ மாறி மாறி வளரும் பேரழகை உண்டாக்குகிறாய் -- தெய்வமே என்னை மன்னிக்க வேண்டும்'' என்று கதறினான்.

தெய்வானை தெய்விகச் சிரிப்புடன் அறைக்குள் நுழைந்தாள்.

அவள் கையைப் பிடித்துக் கொண்டு ஒரு சிறுமி அழகு கூடத் தொடர்ந்து வந்தது. அந்தப் புதிய படைப்பில் தெய்வானையின் இளமையழகும் ;முருகனின் கலை நிறைந்த கண்களும் வெளிப்பட்டன.

பாவைப் பாட்டு

மு. அருணசலம் எம். ஏ.

சைவ சமயாசாரியருள் ஒருவரான மாணிக்க வாசக சுவாமிகள் தமிழ் மக்களுடைய நயம் பொருந்திய எளிய வாழ்க்கை முறையைப் பல வகையாகக் கண்டு அதில் ஈடுபட்டிருக்கிறார். சிறு பிள்ளைகளும் முக்கியமாகப் பெண்களும் கூடி, ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் உல்லாசமாக வாழ்க்கை நடத்தி வந்ததைத் தாம் நேரில் பார்த்து அனுபவித்திருக்கிறார். அது காரணமாக, அவர் இறைவனுடைய பெருங் கருணையை நினைந்து நினைந்து மன முருகிப் பாடிய போதெல்லாம், தாம் கண்ட தமிழ் நாட்டுக் காட்சிகள் கண் முன்னே எக்நேரமும் வந்து நின்றன.

வீடுகளிலும் முற்றங்களிலும் மர நிழல்களிலும் பெண்கள் ஊஞ்சலிலமர்ந்து ஆடிக்கொண்டும், பாடிக் கொண்டு மிருந்ததைப் பார்த்தார். தெரு ஓரங்களில் உரலை வைத்து அதில் சுண்ணமிடிப்பதைக் கண்டார்; அவர்கள் பாடிய சுண்ணப் பாட்டையும் கவனித்தார். இள மகளிர் வினவும் விடையுமாகச் சாழல் பாட்டுப் பாடியதையும், அம்மானை ஆடியதையும் அறிந்தார். வீதிகளிலே தும்பிகள் இசை பாடிக்கொண்டு காற்றில் பறந்ததையும் அவற்றைத் தொடர்ந்து சிறுவர்கள் ஓடி விளையாடியதையும் கண்டார். சோலையிலே குயில் கூவியதையும் கேட்டார். மார்கழி மாதத்திலே, இளம் பெண்கள் பொழுது புலரு முன் எழுந்து, அயல் இல்லங்களிலுள்ள தங்கள் தோழியரை ஒவ்வொருவராக எழுப்பி உடனழைத்துக்கொண்டு, குதூகலமாக ஆற்றுக்குப் போய்க் குளித்து முழுகி விட்டுத் திரும்பி வந்து இறைவனை வழிபட்டதையும் பார்த்தார். நீராடச் சென்ற பெண்கள் ஆம்பற் பூக்களைக் கொய்து விளையாடுவதையும் கவனித்தார்.

இப்படியாக எண்ணற்ற காட்சிகளைக் கண்டிருக்கிறார் மாணிக்க வாசகர். கனிந்த உள்ளத்தோடு இறைவனைப் போற்றத் தலைப்பட்டபோதெல்லாம் இக்காட்சிகள் அவர் நினைவிலே தோன்றின. அன்பின் பெருக்கினால் அரிய பெரிய சமய உண்மைகளை அவர் வெளியிட்ட போதெல்லாம், அவற்றை இத்தகைய விளையாட்டுக் கேற்ற பாடல்களிலே அமைத்துப் பாடினர். தும்பிப் பாட்டு, சாழற் பாட்டு, அம்மானைப்பாட்டு, ஊசற் பாட்டு, சுண்ணப்பாட்டு, அல்லிப் பாட்டு- என்று எத்தனையோ வகையான பாட்டுக்களைப் பாடினர். இப்படிப் பாடிய பாட்டுக்களிலே ஒன்று பாவைப்பாட்டு.

திருவெம்பாவை என்ற பெயராலே இந்தப் பாவைப் பாட்டு இன்று வழங்குகிறது. இருபது பாடல்கள் கொண்ட இந்தப் பாட்டைச் சைவ மக்கள், மார்கழி மாதத்திலே, பொழுது புலரு முன் எழுந்து நீராடி இறை வழிபாடு செய்து, பாராயணம் பண்ணுவதை நியமமாகக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பாடல்களிலே, இறைவனுடைய பெருமையைப் பெண்கள் வாய்மொழியாகச் சொல்லச் செய்ததோடல்லாமல், பெண்களுக்குள் நடக்கும் விளையாட்டை

யும் பரிகாசத்தையும் சுவைபட அழகாகப் பாடியிருக்கிருர். மாணிக்க வாசகர் பாடிய திரு வெம்பாவையானது பிற்காலத்தில் பலர் பாவைப் பாட்டுப் பாடக் காரணமா யிருந்திருக்கிறது.

இனி, சுவாமிகளுடைய பாவை ப்பாட்டிலே முதற் பாடலை மட்டும் இங்கே பார்க்கலாம்.

* * *

வான நூல் வல்லவர்கள் எத்தனையோ அரிய உண்மைகளைக் கண்டு வெளியிடுகிருர்கள். வான வீதியிலுள்ள கோள்களுள் ஒன்ருன சந்திரனைக் குறித்து எவ்வளவோ ஆராய்ந்திருக்கிருர்கள். சந்திரனிடத்திலே சூடில்லை; அதனுலேயே, அவன்தானே ஒளி கொடுக்க வகையின்றி, சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று, பூமியில் வாழும் நமக்கு அவ் வொளியைப் பிரதிபலிக்கச் செய்கிருன். அவன் சூடின்றிக் குளிர்ந்திருக்கின்றமையால், அவனுடைய நிலவொளியும் நமக்குக் குளிர்ச்சியாகவே இருக்கிறது. இவ்வளவும் நாமறிந்த உண்மை. ஆனல் வான நூல் வல்லார், இன்னும் சிறிது ஆழ்ந்து நோக்கி, இந்த நிலை ஏற்பட்டதற்குரிய காரணத்தைக் கூறுகிருர்கள்.

இன்று நாம் சந்திரன் என்று சொல்லுகிற கோளானது ஒரு காலத்தில் சூடுடையதாயிருந்தது. பூமியானது சூரியனைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கையில் ஒரு சமயம், பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னே, அந்தப் பூமியிலிருந்து ஒரு சிறு பகுதி தனியே பிய்த்துக் கொண்டு அந்தரத்தில் போய் விட்டது; அப்பகுதியே இன்றைய சந்திரன். தனியே பிரிந்து வந்த சமயம் அதற்கிருந்த சூடானது, நாளடைவில் குறைந்து குறைந்து, இப்போது சூடு அறவே இல்லாமல் குளிர்ந்து போய் விட்டது.

நாம் வாழ்கிற பூமி, மத்தியிலே பெரியதோர் அனற்பிழம்பைக் கொண்டிருக்கிறது. இதுவும் ஒரு காலத்தில், அதாவது கோடிக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னர், அனல் முழுதும் தணிந்து குளிர்ந்துபோய் விடும். இந்தப் பூமிக்கு ஆதியான ஒரு காலத்திலே, தாயாக இருந்தது சூரியன். அந்தச் சூரியனும், இனியொரு காலத்தில், எத்தனையோ யுகங்களுக்குப் பின்னல், பூமி போலவும் சந்திரன் போலவும் குளிர்ந்து போய்விடும். அதன் சூடும், ஒளியும் அறவே நீங்கும்; பூமியில் உயிர்கள் வாழ்வது போல,சூரியன்மீது உயிர்கள் வாழ்கிற காலமும் வரும்.

இவ்வாறெல்லாம் வான நூற் புலவர் எவ்வளவோ இயற்கை உண்மைகளைக் கண்டறிந்து நமக்கு அறிவுறுத்துகிருர்கள். நாம் அறிந்தவற்றுள்ளே மிக்க ஒளியுடைப் பொருளான சூரியனும், தனக்கொரு செயலில்லாமல், காலம் செல்லச் செல்ல, ஒளிப்பிழம்பான தன்

நிலையிலிருந்து மாறவேண்டியவன்; அப்படியானால், இவ்வளவும் நமக்கு எதைத் தெரிவிக்கின்றன? இந்தச் சூரியனுக்கும், இதைப் போன்ற பிறவேறு நட்சத்திரங்களுக்கும் அப்பாலுள்ள ஒரு பொருளே இவை யாவற்றையும் இயக்குகிறதென்றும், அந்தப் பொருளே முழு முதற்பொருள், என்றும் ஒளியுடைப் பொருளென்றும் நாம் உணர்கிறோம். அந்த ஒளியுடைப் பொருளையே பலர் பலவேறு பெயரால் போற்றுகிறார்கள். கடவுள் என்றும், இயற்கைச் சக்தி என்றும், சிவம் என்றும், சோதி என்றும், சுடர் என்றும் அன்பர்கள் சொல்லித் துதிப்பன அனைத்தும், அவ்வொரு முழு முதற் பொருளையே சேர்கின்றன. பிற ஒளியுடைப் பொருள்கள் அனைத்திற்கும் தோற்றமும் ஒடுக்கமும் தரவல்ல அந்தப் பொருளுக்குத் தோற்றம் உண்டா? ஒடுக்கந்தான் உண்டா? இரண்டும் இருத்தல் முடியாது. ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெருஞ் சோதியல்லவா அது?

இந்தச் சோதியின் புகழைப் பாடிக்கொண்டே சில பெண்கள் வீதி வழியே போகிறார்கள். வீடு தோறுமுள்ள இளம் பெண்கள் அந்தப் பாட்டொலியைக் கேட்டு, விழித்தெழுந்து வந்து, நீராடப் போவோர் கூட்டத்தில் கலந்து கொள்கிறார்கள். இப்படியாகப் போகிற பெண்கள் ஒரு வீட்டின் வாயிலில் வந்து நிற்கிறார்கள். அவ்வீட்டிலுள்ள இவர்கள் தோழியானவள் இன்னும் விழித்தெழவில்லை. இவளை விட்டு விட்டுப் போய் விடலாமென்றாலோ, இவள் எழுந்த பின், மற்றவர்கள் தன்னை விட்டுப் போனதை யறிந்து வருந்துவாள். அன்றியும், "ஏன் நீங்கள் என்னை எழுப்பவில்லை?" என்று, தன் தோழிகளான இப்பெண்களை மறு நாள் காணும் போது, கடிந்து கொள்வாள்.

இதையெல்லாம் மனதிலெண்ணி அப்பெண்கள் வந்து இவளை அழைக்கிறார்கள்: "வாள் போன்ற கூர்மையான நெடிய கண்களையுடைய பெண்ணே! இன்னுமா நீ உறங்குகிறாய்?" என்று கேட்கிறார்கள். அவள் இதற்கும் எழவில்லை. அழைப்போருக்குக் கோபம் வருகிறது. அதோடு கூட ஒரு பரிதாபம்: "எல்லோருடைய காதினுள்ளும் ஒலியறிவதற்காகவுள்ள மெல்லிய தோலானது, எந்த நுட்பமான ஒலியையும், ஓசையையும் அறிய வல்லதாய்ப் படைக்கப் பட்டிருக்கிறது. ஆனால், இவளுடைய செவியிலே எந்த ஓசையும் ஏறவில்லையே? மிகக் கடினமான கனத்த தோல் இவள் செவிக்குள்ளே இருக்கிறதோ?" என்று ஐயப்படுகிறவர்கள் போல, 'தோழியே! உன் செவி வன் செவியோ?' என்று கேட்கிறார்கள். இதற்கும் அவள் விழித் தெழுந்து வரவில்லை.

பார்த்த பெண்களுக்கு மிக்க மனவருத்த முண்டாகிறது. 'அடடா, நம்முடைய தோழியாகிய இவள் எவ்வளவோ பக்தியுடையவள் என்றல்லவா இது காறும் நாம் எண்ணி வந்தோம்! இவள் சிறிதும் உணர்ச்சியற்றவளாக இருக்கிறாளே! நம்முடைய தலைவரான சிவபெருமான் திருவடிகளைத் துதித்து நாம் பாடிய பாடல்கள், வீதியெங்கும் பேரொலியாய் ஒலிக்கின்றன. இவள் அன்புடையவளாயிருந்தால், வீதியிலெழுந்த இவ் வாழ்த்தொலியைக் கேட்டு, என்ன செய்திருப்பாள்? புளகாங்கிதமடைந்து விழிநீர் பெருக்கி, விம்மி மெய் மறக்க வேண்டும். மெய்மறந்து இப்போதுஇவள் படுத்துறங்கும் மலர் அமளியிலிருந்தும் புரண்டு விழுந்து விடுவாளே! ஆனால் இப்படியொன்றும் இவள் ஆகக் காணோமே! உறக்கம் சிறிதும்

கலையாமல் அப்படியே அமர்ந்து கிடக்கிறாளே! இதுவா இவளுடைய பக்தியின் நிலை!' என்றெல்லாம் அப் பெண்கள் எண்ணுகிறார்கள். 'இப்படிப்பட்டவளா நம் தோழி! இதுவா இவளுடைய அன்பு இருந்தவாறு!' என்று அவர்கள் அவளுடைய நிலையைப் பார்த்துப் பெரிதும் இரங்குகிறார்கள்.

இந்த பாவத்திலே மாணிக்க வாசக சுவாமிகள் திருவெம்பாவை முதற் பாடலைப் பாடினர்:

ஆதியும் அந்தமும்
இல்லா அரும் பெருஞ்
சோதியை யாம் பாடக்
கேட்டேயும், வாள்தடங்கண்
மாதே; வளருதியோ?
வன் செவியோ நின் செவிதான்?
மாதேவன் வார்கழல்கள்
வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே,
விம்மி விம்மி, மெய்ம் மறந்து,
போதார் அமளியின்மே
னின்றும் புரண்டு, இங்ஙன்
ஏதேனும் ஆகாள்!
கிடந்தாள்! என்னே என்னே!
ஈதே எந்தோழி
பரிசு! ஏலோ ரெம் பாவாய்.

[வளருதியோ — உறங்குகிறாயோ; கழல்கள் — திருவடிகளை; போது ஆர் அமளி — மலர் பொருந்திய படுக்கை; இங்ஙன் — இவ்விதம் பரிசு — தன்மை.] 1.

உலகத்திலே அனுபவிப்பதற்கான உண்மைகளும் தத்துவங்களும் எத்தனையோ இருக்கின்றன. கவியிலும், இசையிலும், நடனத்திலும், சிற்பத்திலும் சித்திரத்திலும் உணர்ந்து கொள்ள வேண்டிய கலை யுண்மைகளுக்குக் கணக்கு இல்லை. ஒவ்வொரு கலையிலும் அறியவேண்டுவன வற்றுக்கு வாழ் நாள் காணாது என்றே சொல்லத் தோன்றும். ஆனால் மக்கள், முக்கியமாக அறிவுடைய மக்களாவது, இவற்றை உணர்கிறார்களா என்றால் அதுதானில்லை. இப்படிப்பட்ட கலையுண்மைகளையும் கடவுளுண்மைகளையும் அனுவிப்போர் தொகை மிககுறைவு. கண்ணிருந்தும் காண்போர் அரியர்; அறிவிருந்தும் அறிபவர் மிகச் சிலரேயாவர். வாழ்க்கையிலே எல்லாத் துறைகளிலும் இப்படியிருக்கும் போது மாணிக்கவாசக சுவாமிகள் இக்கருத்தைப் பெண்கள் வாய் மொழியாகச் சொல்லிக் காட்டுவதில் எவ்வளவோ நயம் அமைந்து கிடக்கிறது.

இப்பாடலை அனுபவிக்கவும் பாடவும் ஏதோ ஒரு வகையான பக்தி இருந்தால் போதும் — மாணிக்க வாசகரிடமாவது, திருவாசகத்தினிடமாவது, சிவபெருமானிடமாவது பக்தி இருந்தால் போதும்; அல்லது தமிழ்ப் பற்று, தமிழ் நாட்டுப் பற்று இருந்தாலும் போதும். பாடல் படம் பிடித்துக் காட்டுகிற அன்பு மயமான தமிழ் மக்களின் உல்லாச வாழ்க்கையில் உண்மையாகவே உளங்குழைந்து ஈடுபட முடியும்.

1. இப்பாடலுக்கு வலிந்து வேறு பொருள் சொல்வாருமுளர்.

ஒரு ஆசை

ஆசிரியர்:
சரத்சந்திர சட்டர்ஜி

மொழி பெயர்ப்பு:
ஆர். ஷண்முகசுந்தரம்

மஜூம்தார் வம்சம் மிகப் பிரசித்தமானது. கிராமத்தில் அவர்களுக்கு மிகுந்த செல்வாக்கு உண்டு. குருசரணர்தான் குடும்பத் தலைவர். ஏன், கிராமம் முழுவதிற்குமே அவர்தான் தலைவர் என்று சொல்வதிலும் குற்றமில்லை. பெரிய மனிதர் இன்னும் சிலர் இருந்தார்கள்; ஆனால் இப்பேர்ப்பட்ட பக்திமான் ஸ்ரீகுஞ்சபுரத்தில் வேறுயாருமே கிடையாது. வாழ்க்கையில் அவர் பெரிய பதவி ஒன்றுமே வகித்ததில்லை. கிராமத்தை விட்டு மாத்திரம் வெளியேறப் பிரியப் பட்டிருந்தாரானால் பதவி ஒன்றும் அவருக்குப் பிரமாதமாக இருந்திருக்காது. முதல் முதலில் அவர் பக்கத்துக் கிராமத்தில் ஜில்லா போர்டு பள்ளிக்கூட உபாத்தியாயராக வாழ்க்கையை ஆரம்பித்தார். பிறகு அந்தப் பள்ளிக்கூடத்தை விட்டுப் போக அவர் விரும்பவேயில்லை! முப்பது ரூபாயிலிருந்து சம்பளம் ஐம்பது ரூபாய் வரையிலும் அவருக்கு உயர்ந்தது. இப்போது அவருக்கு 'பென்ஷன்' இருபத்திஐந்து ரூபாய் கிடைக்கிறது.

மூன்று வருஷமாக அவர் ஓய்வுடன் இருக்கிறார். உலகத்திலே அவருக்கு எப்போதுமே பணம் முக்கியமானதாக இருந்ததில்லை. அப்படி இருந்திருந்தால் கிராமத்தில் ஏற்படுகிற சண்டை சச்சரவுகளை இவரைக் கொண்டு தீர்த்துக் கொள்ள யாராவது முற்படுவார்களா? அவருடைய நேர்மை, தளராத உறுதி, சாந்தம் முதலிய சிறந்த குணங்களுக்குத் தலைவணங்காதவரே கிடையாது. வயது கிட்டத்தட்ட எழுபது ஆகிறது. அக்கம் பக்கத்தில் உள்ள கிராமங்களில் யாராவது கொஞ்சம் தர்ம காரியங்களில் அக்கரை காட்ட ஆரம்பித்தால், மற்றவர்கள், அவரைப் பார்த்து, "அடேயப்பா! ஓரேயடியாக குருசரணர் ஆகிவிட்டாயே!" என்று கேலி செய்வது வழக்கமாகி விட்டது.

குருசரணருக்கு மனைவி இல்லை. விமல் என்று ஒரு பையன்தான் இருந்தான். இதுதான் அதிசயம் என்று உலகத்தில் முடிவு கட்டிவிட முடியாது. ஏனென்றால் இவ்வளவு நற்குணமுடைய தந்தைக்கு துர்க்குணமுடைய இப்படிப் புத்திரன் ஏன் பிறக்க வேண்டும்?

மகனோடு அவருக்கு இந்த உலக சம்பந்தமான தொடர்பு ஒன்றுமே கிடையாது. ஆனால் அவர் உள்ளமெல்லாம் தம்பி மகன் பாரசினிடம் கட்டுண்டிருந்தது. ஹரிசரணனுடைய மூத்த மகன் பாரசைத் தன் சொந்த மகன் போல் பாவித்தார். பாரஸ் எம். ஏ. படித்து விட்டு இப்போது சட்டப் பரிட்சைக்காகப் படித்துக் கொண்டிருக்கிறான். அவனை ஆரம்பத்திலிருந்து இதுவரையிலும் இவர்தான் படிக்க வைத்து வருகிறார். பாரஸ் படித்ததால் தன் மகன் விமல் படிக்கவில்லையே என்ற கவலை கூட இல்லாமலிருந்தார்.

கடைசித் தம்பி ஹரிசரணர் இத்தனை நாளாக வெளியூரில் வேலையிலிருந்து வந்தார். திடீரென சண்டைக்குப் பிறகு எப்படியோ பெரிய மனிதராகி விட்டார். வேலை

யை விட்டு விட்டு ஊருக்கே வந்து சேர்ந்து வட்டித் தொழில் செய்ய ஆரம்பித்தார். மனைவி பேருக்கு தோட்டம் ஒன்று வாங்கினார். இன்னும் என்ன வெல்லாமோ செய்தார். இதனால் இவருடைய பணப் பெருமை சுற்றுப் புறக் கிராமங்களி லெல்லாம் வெகு சீக்கிரத்தில் பரவியது.

ஒரு நாள் ஹரிசரணர் மிகுந்த அடக்கத்துடன், "அண்ணா, ரொம்ப நாளாகத் தங்களிடம் ஒரு சங்கதி சொல்ல வேண்டு மென்றி ருக்கிறேன்" என்றார்.



"சரி, சொல்லு" என்றார் குரு சரணர். ஹரிசரணர் சற்று அருகில் வந்து, "நீங்கள் தனியாக இன்னும் எத்தனை நாளைக்கு இருக்க முடியும்? வயதோ ஆகி விட்டதே" என்றார்.

"ஆமாம், எழுபது நடந்து கொண்டிருக்கிறது."

"அதனால்த் தான் சொல்ல வந்தேன். நான் இங்கேயே இருக்கப் போகிறேன். இலபுலன்கள் எல்லாம் ஒன்றாக அப்படியே இருக்கிறது. அவைகளை ஒழுங்கு படுத்தி நானே எல்லாம்--"

குருசரணர் ஒருகணம் தன்னுடைய கடைசித் தம்பியின் முகத்தை உற்றுப் பார்த்து விட்டு, "இல புலன்கள் எல்லாம் எப்போதும் போலத்தானி ருக்கிறது. ஒன்றாகவும் இருக்கவில்லை; — நீ என்ன பாகப் பிரிவினை செய்ய வேண்டு மென்று சொல்கிறாயா?' என்றார்.

ஹரிசரணர் வெட்கத்துடன், "இல்லை, இல்லை! எப்படி இருக்கிறதோ, எப்படி நடந்து கொண்டிருக்கிறதோ, எல்லாம் அப்படியே இருக்கும். உங்கள் பார்வையில் இருப்பதை மட்டும் தெரிவிக்க வேண்டும். அதோடு இந்தச் சாப்பாட்டு விஷயம் ரொம்பத் தொந்தரவு பிடித்த விஷயம். எல்லாம் ஏகமாகத் தானிருக்கும். ஆனால் சமையல் மாத்திரம் தனித் தனியாக இருக்கட்டும். நான் சொல்வது தெரிகிறதா?" என்றார்.

"தெரியாமல் என்ன? தெரிந்து தான் இருக்கிறது. சரி, நாளையிலிருந்து அப்படியே ஆகட்டும்."

"நீங்கள் சொத்து விஷயமாக எப்படி உத்தேசித்து வைத்திருக்கிறீர்கள்?"

"அதற்கு இதுவரையிலும் உத்தேசிக்க வேண்டிய அவசியம் நேரவில்லை. இன்று நேர்ந்திருக்கிறது. சரி மூன்று சகோதரர்

களுக்கும் மூன்று பாகம் செய்து விட்டால் போகிறது.''

ஹரிசரணர் ஆச்சரியத்துடன், ''மூன்று பாகம் எப்படி? நடு அண்ணனுக்குக் குழந்தை குட்டிகள் ஒன்றும் கிடையாது. மனைவி தான் இருக்கிறாள். அவளுக்கேது பாகம்? இரண்டு பாகம்தானே'' என்றார். குருசரணர் தலையை அசைத்துக் கொண்டு, ''முடியாது. மூன்று பாகம்தான் போட வேண்டும் அவள் உயிருள்ள வரையில் ஒரு பாகம் கொடுத்துத்தான் தீரவேண்டும்'' என்றார்.

ஹரிசரணர் மிகுந்த கோபத்துடன்''சட்டப்படி கிடைக்காது. சாப்பாடுதான் கிடைக்கும்'' என்றார்

''அவ்வளவுதானே அவளுக்கும் வேண்டியது. தலையிலா கட்டிக் கொண்டு போகிறாள்?''

''நாளைக்கு அதை விற்கவோ அல்லது அதன் பேரில் கடன் வாங்கவோ முயற்சித்தால்?''

''சட்டம் அதற்கு இடம் கொடுத்தால் செய்து கொள்ளட்டும்.''

''உம், செய்வாள். செய்யாமலா இருப்பாள்!''

அடுத்த நாளே ஹரிசரணர் கையில் அளவுகோல் கொண்டு இங்குமங்கும் அளந்து கொண்டிருந்தார். குருசரணர் ஒன்றும் பேசவில்லை; தடை சொல்லவும் இல்லை. இரண்டொரு நாளில் சுண்ணும்பு, செங்கல் வகையறுக்கள் கூட வந்து விட்டன. வீட்டுப் பழைய வேலைக்காரி, 'நாளையோடு வேலை முடிந்துவிடும்' என்றாள்.

குருசரணர் சிரித்துக்கொண்டு, ''அதைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேனே! சொல்லா விட்டால் என்ன?'' என்றார்.

ஏழு எட்டு நாட்களுக்குப் பிறகு ஒரு சாயங்காலம் கதவுப்பக்கத்தில் காலடி ஓசை கேட்கவே குருசரணர் வெளியில் எட்டிப்பார்த்து விட்டு, ''பஞ்சம்மா என்ன சங்கதி?'' என்றார்.

பஞ்சம்மா ரொம்ப நாளாக இங்கு இருக்கிறாள். மச்சினி வந்திருப்பதாக அவள் சாடை காட்டினாள். குருசரணருடைய மனைவி இறந்துபோனதிலிருந்து இந்த விதவைதான் வீட்டுக் காரியங்களைக் கவனித்து வந்தாள். அவள் மறைவில் நின்று கொண்டு, ''இந்த வீட்டில் எனக்குத் துளிக்கூட அதிகாரம் கிடையாதா? சின்னவர் பெண்சாதி என்னை இரவு பகலாகத் திட்டுகிறாள்'' என்றாள்.

''இல்லாமலென்ன! அவளுக்கிருக்கும் அதிகாரம் உனக்கும் இருக்கிறது'' என்றார் குருசரணர்.

''ஆனால் வீட்டுக்குள் இப்படி இருந்தால் யாரும் இருக்க முடியாதே'' என்றாள் பஞ்சம்மா.

குருசரணர் அனைத்தையும் கேட்டார். பிறகு கணநேரம் மௌனமாக இருந்துவிட்டு, ''பாரசை வரும்படி எழுதியிருக்கிறேன். அவன் வந்தவுடன் எல்லாம் சரிப்பட்டு விடும். அதுவரையிலும் நீங்கள் பொறுத்துக் கொண்டிருங்கள்'' என்றார். அவள் இருமனதுடன் ''ஆனால் பாரஸ்—''என்றாள்.

குருசரணர் குறுக்கிட்டு,''எனது பாரஸிடம் ஆனால் கீனல் ஒன்றும் சாயாது. ஹரிதான் அவனுடைய தந்தை; இருந்தாலும் அவன் என்னுடைய பிள்ளைதான். இந்த உலகமெல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டாலும் அவன் என் பக்கம் தான் இருப்பான். அவனுடைய ''பெரியப்பா'' எப்போதும் அநியாயம் செய்யமாட்டார் என்பது அவனுக்கு நன்கு தெரியும். அப்படித் தெரியா விட்டால், அப்போது வேண்டுமானால் நான் அந்நியர் பிள்ளையை எடுத்து வளர்த்தினேன் என்று சொல்லு'' என்றார்.

"இதில் சொல்வதற்கு என்ன இருக்கிறது? போன வருஷம் அம்மை போட்டிருந்தபோது உங்களைத் தவிர வேறு யார் எமன் கையிலிருந்து அவனைக் காப்பாற்றியது? அப்போது தகப்பனும் சிறிய தாயும் எங்கிருந்தார்கள்? பயத்தால் யாருமே அவனருகில் போகவில்லை. அப்போது பெரியப்பாதானே இரவு பகலாக அவனருகில் இருந்தது!" என்றாள் பஞ்சம்மா.

"பாரசினுடைய தாயார் உயிரோடிருந்தால் கூட அப்படிப் பார்த்திருக்க முடியாது" என்றாள் விதவை.

குருசரணர், "அதெல்லாம் போகட்டும்." என்றார்.

அவர்கள் சென்ற பிறகு வயோதிகக் குருசரணர் கண்முன்பு விமலும், பாரசும் நிற்பது போலிருந்தது.

இருள் சூழ்ந்த ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு பெருமூச்சு விட்டார். இதற்குப் பிறகு அவர் தமது மூங்கில் தடியை எடுத்து ஊன்றிக் கொண்டு ஊர்ச் சாவடிக்கு சதுரங்கம் விளையாடுவதற்குப் புறப்பட்டார்.

அடுத்த நாள் மத்தியானம் குருசரணர் சாப்பிடுவதற்கு உட்கார்ந்தார். வீட்டுக் கூடத்திற்கு வலது புறம் சற்று தள்ளி ஹரிசரணருடைய சமையலறை இருந்தது. அங்கிருந்து மிகக் கடுமையான வார்த்தைகள் வெளிக்கிளம்பிக் கொண்டிருந்தது. அவருக்குச் சாப்பாடு பிடிக்க வில்லை. அந்தப் பெண்குரலோடு ஒரு ஆண் குரலும் சேர்ந்து கேட்கவே சற்று உற்றுக் கேட்டார். பிறகு சடக்கென அவர் எழுந்து நின்றார்.

இரண்டாவது தம்பியின் மனைவி பார்வதி மறைவில் நின்று கொண்டு புலம்பத் தொடங்கினாள். பஞ்சம்மா நடந்த விஷயங்களை விளக்கிக் கூறினாள். கூடத்தில் இருந்துகொண்டே குருசரணர் தம்பியைக் கூப்பிட்டு, "ஹரிசரணா, பெண்கள் விஷயத்தில் தலையிட எனக்கு விருப்பமில்லை. நீ ஆண்பிள்ளையாயிருந்தும் அண்ணன் மனைவியை இப்படி அவமானப் படுத்தலாமா? இந்த மாதிரி செய்தால் இந்த வீட்டில் எப்படி இருப்பது?" என்றார்.

இதற்கு யாரும் பதில் பேசவில்லை. ஆனால் அவர் வெளியில் செல்லும் போது தம்பி மனைவி, வீட்டிற்குள் கணவனைக் கேலி செய்து கொண்டிருந்தாள். "இப்படி அவமானம் பண்ணுகிறீர்கள். அண்ணன் மனைவி வீட்டை விட்டுப் போய் விடுவாள். அப்புறம் என்ன ஆவது?" என்று சொன்னாள்.

அதற்கு ஹரிசரணர், "இந்த உலகமே முழுகிப் போய்விடும். வேறு என்ன ஆகும்! இங்கு யாரும் இருக்கும்படி வேண்டிக் கொள்ள வில்லையே? போனால் பிழைத்துப் போவாள்." என்றார். குருசரணர் நின்று இவைகளைக் கேட்டு விட்டு வெளியே சென்றார்.

* * *

தலைமை உபாத்தியாயருடைய பெண் கலியாணத்திற்கு குருசரணர், கிருஷ்ண நகரத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். இதற்குள்ளாக வேலைக்காரி வந்து பாரஸ் நோயுடன் வந்து படுத்திருப்பதாகச் சொன்னாள். அவர் திடுக்கிட்டு அவன் படுத்திருக்கும் அறைக்குள் நுழைந்தார். அதற்குள் தம்பி எதிரில் வருவதைப் பார்த்து, "பாரசுக்கு உடம்பு சரியில்லையா?" என்றார்.

ஹரிசரணர், 'ஆமாம்' என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.

(தொடரும்)

[முத்தொள்ளாயிரம்: பதிப்பாசிரியர் : டி. கே. சிதம்பரநாத முதலியார். பிரசுரம் : புதுமைப் பதிப்பகம், காரைக்குடி. விலை ரூ. 3.]

வெகு காலத்துக்கு முன் அலெக்சாண்டிரியா என்னும் பட்டணத்தில் ஏழு லட்சம் புத்தகங்கள் கொண்ட ஒரு புத்தக நிலையம் இருந்ததாம். 1300 ஆண்டுகளுக்கு முன் இந்தப் பட்டிணத்தின் மேல் படையெடுத்த ஒரு அரசன் இந்த ஏழு லட்சம் புத்தகங்களையும் நெருப்பில் வைத்துப் பொசுக்கி விட்டானாம். விலை மதிக்க முடியாத அத்தனை செல்வமும் அழிந்தது.

தமிழ் நாட்டிலும் அழிந்து போன கலைச்செல்வம் எவ்வளவோ!

ஆனால் பகைவர்களால் தீங்கு வரவில்லை. வெள்ளப் பெருக்கினாலும், கரையான் முதலிய பூச்சி புழுக்களாலும், நம்மவர்களுடைய கவனக் குறைவினாலும் எவ்வளவோ ஆயிரக்கணக்கான நூல்களை இழந்து விட்டோம். ஏதோ நம்முடைய யோகம் — கொஞ்சமாவது கைக்குக் கிடைத்திருக்கிறதே!

முத்தொள்ளாயிரம் என்றால் என்னவென்று அனேகருக்குத் தெரியாது. மூன்று தொள்ளாயிரம்-அதாவது இரண்டாயிரத்தெழுநூறு என்பது அதன் பொருள். சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப்பற்றி ஒரு கவிஞர் — அவருடைய பெயருங்கூடத் தெரியாது! — 2,700 அருமையான பாடல்களைப் பாடினார். அதில் நமக்குக் கிடைத்திருப்பது 108 தான்.

இதிலும் ஒன்பது பாடல்களுக்குப் பாடம் சிதைந்தும், பொருள் மறைந்தும் கிடக்கிறது. மீதியுள்ள 99 பாடல்களையும் நாம் படித்து அனுபவிக்கும் விதத்தில் டி. கே. சி. அவர்கள் பதிப்பித்திருக்கிறார்கள்.

முத்தொள்ளாயிர வெண்பாக்கள் உண்மைக் கவிதைக்குச் சிறந்த உதாரணம் என்று அறிவாளர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். இப்படிப்பட்ட உண்மைக் கவிதைகளுடைய பெருமையின் ரகசியம் தான் என்ன?

கவிதையில், விஷயம் முக்கியமா அல்லது உருவம் முக்கியமா? விஷயந்தான் முக்கியம் என்று சொல்ல முடியாது. கடவுளின் மகிமையைப் பற்றி அசட்டுத்தனமான கவிதை இருக்கலாம். சிட்டுக் குருவியைப் பற்றிச் சிறந்த கவிதை கட்டலாம். அப்படியானால் உருவம்தான் முக்கிய அம்சமோ? இல்லை. செய்யுள் இலக்கணத்தை நன்றாய் படித்திருந்தால், இலக்கணக் குற்றம் கொஞ்சம் கூட இல்லாமல் பாட்டுக்களை எழுதி விடலாம். ஆனால், இவைகள் வெறும் பாட்டுகளாகுமே தவிர உண்மைக் கவிதைகள் ஆகாது.

விஷயத்தையும் உருவத்தையும் ஒன்று சேர்த்து உயிரைக் கொடுத்தால், அது கவிதை. உயிரைக் கொடுப்பதில்தான் இருக்கிறது கவியின் சாமர்த்தியம். கவிதை ஒரு படைப்பு வேலை. படைப்புக் கர்த்தாவாகிய பரம்பொருள் மனிதனுக்கும் ஓரளவு படைப்புச் சக்தியைக் கொடுத்திருக்கிறார். மனிதன் இந்த சக்தியைக் கொண்டுதான் சித்திரம் சிற்பம், கவிதை இவைகளைச் செய்கிறான்.

சோழ நாட்டில் 2,000 வருஷங்களுக்கு முன் ஒரு பெண் சோழ மன்னன் மீது காதல் கொண்டு விட்டாள். அவனே தனக்குக் கிடைக்கும் வழி இல்லை. அக்கம் பக்கத்து வீட்டுக் காரர்களோ இவளைத் தூற்றுகிறார்கள்.

இந்தச் சின்ன விஷயத்தில் நம்மை ரசிக்கச் செய்யும் பொருள் என்ன இருக்கிறது? ஒன்றையும் காணோம். ஆனால், கவிஞர் அதில் என்னவோ அபூர்வமான உண்மையைக்கண்டு விட்டார். அது மட்டுமா? நாமும் அதை அனுபவிக்கும்படி செய்து விட்டார். பெண் தன்னுடைய நிலைமையைப் பற்றி என்ன சொல்கிறாள்?

உள் நிலைய
தேங் (கு) உண்ட தேரை
படுவழிப் பட்டேன் யான்.

தேங்காயை உடைத்துப் பார்த்தால் உள்ளே சத்து ஒன்றும் இல்லை; வெறும் கொட்டாங்கச்சி. தேரை தேங்காயின் கிட்டே கூட வரவில்லை! இருந்தாலும் தேங்காயின் சத்தை தேரை தின்று விட்டதென்று தேரை மேல்ப் பழி.

தேரைக்குப் பழி வந்த மாதிரி தான் தனக்கும் வீண் பழி வந்ததென்று பெண்ணுக்கு வருத்தம். பழிக்குப் பயப்பட வில்லை. மன்னன் கிடைக்க வில்லையே என்று தான் வருத்தம்.

கவிதையிலிருக்கும் இந்த நுட்பமான அழகை செய்யுளைப் படித்தவர்கள் எல்லோரும் கண்டு பிடித்துவிட முடியுமா? முடியாது. இந்த அழகை எடுத்துக் காட்டுவதற்கு கவிஞருடைய அனுபவமும் சக்தியும் கொஞ்சமாவது இருக்க வேண்டும். இந்தவிதமான சக்தி டி. கே. சி. அவர்களிடத்தில் ரொம்பவும் இருக்கின்றது. கவிதையைத் தான் அனுபவிப்பதல்லாமல், மற்றவர்களும் அனுபவிக்கும் படி செய்யும் சக்தி இவரிடம் நிறைந்திருக்கிறது.

ஒவ்வொரு செய்யுளின் முன்னுரையிலும் பாட்டிலுள்ள நுட்பமான அழகை வெகு அற்புதமாக எடுத்துக் காட்டியிருக்கிறார். இது அல்லவா உண்மையான பதிப்பாசிரியருடைய பொறுப்பு.

தமிழ் நூல்களுக்கெல்லாம் டி. கே. சி போன்ற பதிப்பாசிரியர்கள் கிடைப்பார்களா? கிடைத்தால் அது நம்முடைய பாக்கியம் தான்.

இந்தப் பதிப்பில் இன்னொரு தனிச் சிறப்பு. பாட்டுகளை ஒன்றின் பின் ஒன்றாய் அமைத்திருக்கும் அழகு பாராட்டத்தக்கது. ஒரு பாட்டிலே சேரனுடைய வீரம். கோபத்தால் சிவந்த அவன் கண்கள்; அவனது வீரத்தால் பகை அரசருக்கு ஏற்படும் கொடுமை; அவனுடைய மதயானையின் அட்டூழியம். பாட்டைப் படிக்கும் போதே ஒரு வித பயம், வெறுப்பும் கூட. அடுத்த பாட்டை எடுத்தாலே, சேரன் பவனி வருகிறான். ஒரு இளம் பெண் தன் வீட்டுக் கதவு இடுக்கிலிருந்து காதல்த் ததும்பிய கண்களோடு சேரனுடைய அழகைப் பார்க்கிறாள்; அரசனுடைய மார்பில் செங்கழுநீர் மலர்களால் தொடுத்த மாலை அசைந்தாடுகிறது. இந்தப் பாட்டைப் படித்ததும் முன்னால் படித்த பாட்டினால் உண்டான பயம் போய் விடுகிறது. மனதில் ஒரு உல்லாச உணர்ச்சி உதிக்கிறது. காதலும் கூட உண்டாகிறது. எவர் மேல் காதல்? சேர மன்னன் மேலா, கதவுச் சந்தில் நிற்கும் பெண்ணின் மீதா! அது படிப்பவர் ஆண் பிள்ளையா, பெண் பிள்ளையா என்பதைப் பொறுத்திருக்கிறது!

இவ்வளவு அருமையான நூலை, இவ்வளவு அழகாக வெளியிட்ட புதுமைப் பதிப்பகத்தாரையும் நாம் பாராட்டத்தான் வேண்டும்.

ஆர். கே. எஸ்

ஹரிஜனப் பெண்

[பி. கோதண்டராமன் எம். ஏ; பி. எல்.]

காட்சி 1.

[தாவீது ... ஹரிஜனக் கிறிஸ்தவர்
தருமம் ... இவர் மனைவி
தங்கமணி ... இவர்களின் மகள்
கிருஷ்ணசாமி ... பார்ப்பன வாலிபன்
காமாட்சி ... இவனது அன்னை
தபால் காரனும் தந்தி சேவகனும்]

(புதுவையில் வெள்ளையர் குடியிருக்கும் பகுதியில், ஓர்லேயான் வீதியில் 25-வது இலக்கமிட்ட வீடு. முன்கட்டிலுள்ள விசாலமான அறையில் மெஸ்யோ தாவீது ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார். காலை 8 மணி இருக்கும்.)

தபால்காரன்: மெஸ்யோ! மெஸ்யோ!

தாவீது: யாரது ?

தபால்காரன்: தபால்காரன் மெஸ்யோ!

(தாவீது தெருக்கதவு வரையில் சென்று தபால்காரனிடமிருந்து ஒரு கடிதத்தைப் பெற்றுத் திரும்பி சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு கடிதத்தின் உறையைக் கிழித்துப் படித்துப் பார்க்கிறார்.)

தாவீது: தருமம்! தருமம்!

தருமம்: என்? இதோ வந்து விட்டேன். (வருகிறாள்)

தாவீது: உன் மகளின் சேதியைக் கேட்டாயா? இதோ உன் தம்பி ஒரு கடிதம் எழுதியிருக்கிறான். படிக்கிறேன் கேள். (படிக்கிறார்)

74, நேவல் ஆஸ்பத்திரி ரோட்
பெரிய மெட்டு, சென்னை.
18, ஆகஸ்டு, 1935.

"அன்பார்ந்த மைத்துனரே,

இங்கு யாவரும் க்ஷேமம். அங்குள்ள அனைவரின் க்ஷேமத்தையும் தெரிவிக்கவும். அக்காவுக்கு என் வணக்கத்தையும், தங்கமணிக்கு என் அன்பையும் சொல்லவும். தங்கள் வியாபாரம் எப்படி இருக்கிறது? இங்கு சற்று மந்தமாகவே இருக்கிறது. ஆயினும் பாதகமில்லை.

நிற்க, என் வீட்டுக்கு அருகில் கிருஷ்ணசாமி என்னுமொரு பார்ப்பன வாலிபர் இருக்கிறார். அவர் சட்டகலாசாலையில் எம். எல் படிக்கிறார். அவரை நான் சுமார் ஐந்து வருடங்களாக அறிவேன். நமது கடையில்தான் அவர் தம்

குடும்பச் செலவுகளை வாங்குகிறார். தஞ்சாவூரில் அவருக்கு நில புலன்கள் உண்டு. தகப்பனார் காலகதியடைந்து விட்டபடியால், அவரே எல்லாச் சொத்துக்களுக்கும் உரியவராக இருக்கிறார். இங்கு அவர் தமது தாயாருடன் குடியிருந்து வருகிறார். அவர் நல்ல கல்விமான், குணவந்தர். சமூக சீர்திருத்தத்தில் அவருக்கு மிகுந்த ஆர்வமுண்டு. அவர் பெரியமெட்டிலுள்ள இராப் பள்ளிக்கூடத்தில் நம்முடைய ஹரிஜனப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லித் தருகிறார். வருடா வருடம் சம பந்தி போஜனம் ஏற்பாடு செய்து, சாதி வித்யாசம் பாராட்டாது நம்மவர்களுடன் கலந்து உண்கிறார். இப்பகுதியிலுள்ள ஹரிஜன சங்கத்தின் ஆதரவில் நம்மவர்களிடம் அனுதாபங்காட்டிப் பல பிரசங்கம் செய்திருக்கிறார். அவர் நமது தங்கமணியை இங்கே அடிக்கடி சந்தித்திருக்கிறார். அவள் மீது உண்மையான விசுவாசமும் அன்பும் கொண்டிருக்கிறார். ஒருநாள், தங்கமணியின் மீது தமக்கேற்பட்டுள்ள காதலைக் குறித்து அவர் என்னுடன் அந்தரங்க நட்புடன் பேசினார். அவர் எல்லாவற்றையும் துறந்து நமது தங்கமணியை மணஞ் செய்து கொள்ளச் சித்தமாயிருக்கிறார். அவர் உண்மையானவரென்றும் உயர்ந்த நோக்கமுடையவரென்றும் உமக்கு உறுதியாகக்கூறுவேன். தங்கமணி இங்கிருக்கையில் இவ்விஷயத்தைப் பற்றி அவளுடன் கலந்து பேசினேன். அவளும் இவ் வாலிபரை உண்மையாகவே காதலிக்கிறாள். அவளும் சீர்திருத்த நோக்கங் கொண்டவள். அவர்களிருவரும் மணந்து இல்லறம் நடத்தினால் நமது குலத்துக்குப் பெருமை உண்டாகுமென நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். தாங்களும் அக்காளும் இதற்குச் சம்மதித்தால், மற்ற விஷயங்களை நானே முன் நின்று ஏற்பாடு செய்கிறேன். தாங்கள் தெரிவித்தால், அவ்வாலிபரை ஒரு நாளைக்கு புதுவைக்கு அழைத்து வருகிறேன். தங்கள் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

இங்ஙனம்,

அன்புள்ள

மதுரைப் பிள்ளை."

இதற்கு என்ன சொல்லுகிறாய்? தங்கமணி எங்கே?

தருமம்: (உள்ளக் கிளர்ச்சியை வெளிக்குக் காட்டாமல் அமைதியாக) தங்கமணி! அப்பா கூப்பிடுகிறார். இங்கே வா. (தங்கமணி வருகிறாள்)

தாவீது: தங்கமணி, பட்டணத்தில் யாரையோ தேடிப் பிடித்திருக்கிறாயாமே? என்னிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லையே! (தங்கமணி வாய்திறவாமல் தலையைக் குனிந்து கொள்கிறாள்)

தருமம்: தங்கமணி என்னிடம் இவ்விஷயங்களைப் பற்றி ஒரு சிறிது சொல்லியிருக்கிறாள். பையன் நல்ல மாதிரியாம். அவளுக்கு மிகவும் பிடித்திருக்கிறதாம்.

தாவீது: ஆமாம், போயும் போயும் ஒரு பார்ப்பனப் பையனைத்தானா பிடிக்க வேண்டும்? நமது சாதியில் இளங்காளைகளுக்குப் பஞ்சமா? மேலும், சாதியையும் மதத்தையும் விட்டுப் புதுச் சம்பந்தம் செய்து கொள்ள முடியுமா என்ன? இவ்விதக் கலப்புவிவாகங்கள் அங்கங்கேநடப்பதுஉண்மையே. ஆனால், இவைகளினால் எந்தவித நன்மையும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

தருமம்: இக்காலத்தில்தான் சாதி ஒழிய வேண்டுமென எல்லோரும் சொல்லுகிறார்களே. ஒரு உயர்குலப் பையன் நமது பெண்ணை மணக்கத் தயாராயிருப்பது நமக்குக் கௌரவந்தானே?

தாவீது: இந்தப் பார்ப்பனப் பிள்ளைகள் எல்லாம் முதலில் அப்படித்தான் தேனொழுகப் பேசுவார்கள். புது மலரை முகர்ந்து முகர்ந்து, வாசனை போய்விட்ட பிறகு அதை எறிந்து விடுவதைப் போல, நமது பெண்ணையும் பின்னர் தள்ளிவிட்டு வேறு கலியாணம் செய்து கொள்வார்கள். அவர்களுடைய சூழ்ச்சி உனக்குத் தெரியாது.

தருமம்: தம்பி எழுதியிருப்பதைப் பார்த்தால் பையன் தங்கமானவன் என்றே தோன்றுகிறது. மேலும், தங்கமணிக்கு அவன் மீது முழு நம்பிக்கை இருக்கிறது. நாம் மட்டும் அவனை ஏன் அனாவசியமாகச் சந்தேகிக்க வேண்டும்?

தாவீது: எல்லாம் சரிதான், இதை யோசித்துப் பார்த்தாயா? அவன் ஒரு இந்து; நாம் கிறிஸ்தவர்கள். சட்டப்படி எப்படிக் கலியாணம் நடக்கும்?

தருமம்: புதுவையில் கிறிஸ்தவர்களும் இந்துக்களும் சகசமாக மணந்து கொள்ளுகிறார்களே?

தாவீது: புதுவை சமாச்சாரம் வேறு. இங்கு எது வேண்டுமானாலும் நடக்கும். அவனோ பிரிட்டிஷ் இந்தியாவைச் சேர்ந்தவன். நினைவிருக்கட்டும்.

தருமம்: அதற்கென்ன பிரமாதம்? நமது பெண் இந்து மதத்தில் சேர்ந்து விட்டால் போகிறது. நம் முன்னோர்களெல்லாம் இந்துக்கள் தானே. அல்லது பையன்தான் கிறிஸ்தவனாகப் போய் விட்டால் போகிறது.

தாவீது: என்ன பிதற்றுகிறாய்? நமது பெண்ணை இந்துவாய் விடுவது? அதற்கு நான் ஒருகாலும் சம்மதிக்க மாட்டேன். என் தகப்பனார் இந்துவாக இருந்தால் நான் இந்த நிலைமைக்கு வந்திருக்க முடியுமா? இந்துக்கள் தான் நம்மைப் பறையர்கள் என்று ஒதுக்கித் தாழ்த்தி அமிழ்த்தி விடுகிறார்களே. அவர்களின் சமூகத்திலும் மதத்திலுமா நாம் மீண்டும் போய்ச் சேரவேண்டும்? போதும், போதும்.

தருமம்: ஏன்? என் தம்பி இன்னும் இந்துவாகவே இருக்கிறான். அவனுக்கென்ன குறைவு? தானாகவே தலையெடுத்து மளிகை வியாபாரத்தில் பொருள் சேர்த்து, வீடும் வாசலுமாய்க் கௌரவமாக வாழவில்லையா?

தாவீது: பிரிட்டிஷ்காரன் இருப்பதால் தான் நம் குலமக்கள் தலை தூக்க முடிகிறது. இந்துக்கள் சுயராச்சியம் பெற்று விட்டால் கிராமத்துச் சேரிகளில் சிதறிக் கிடக்கும் நம் குல மக்களின் கதி அதோகதி தான். அது போகட்டும். என் பெண்ணை நான் ஒரு இந்து பையனுக்குத் தரவே மாட்டேன். அதைப் பற்றி என்னிடம் இனிப் பேச வேண்டாம். தங்கமணி, இனி அந்தப் பார்ப்பனப் பிள்ளையை உன் மனத்திலிருந்து அகற்றி விடு. நம்மூரில், சைகோன் சின்னையாவின் மகன் ஜோசெப்பு இப்போது கொலோனியல் கா்லேஜில் இருநூறு ரூபாய் சம்பளத்தில் உயர்தர உபாத்தியாயராக இருக்கிறான். அவனை உனக்கு ஏற்பாடு செய்கிறேன். பேசாமலிரு. சரி, உங்கள் வேலையைப் பார்க்கலாம்.

தங்கமணி: (கண்ணீர் விட்டு அழுது கொண்டே) அப்பா!

தாவீது: நீ என்ன அழுதாலும் என் தீர்மானத்தை மாற்றவே மாட்டேன். பட்டணத்துப் பையனை மறந்துவிடு.

தருமம்: தம்பிக்கு என்ன பதில் போடப் போகிறீர்கள்?

தாவீது: என்ன பதிலா? அது ஒன்றும் முடியாது என்று கண்டிப்பாய் ஒரே வரியில் எழுதி விடுகிறேன்.

(தருமமும் தங்கமணியும் உள்ளே போகிறார்கள்)

காட்சி 2.

(ஏழு நாட்களுக்குப் பின், இடம் சென்னை வேப்பேரி ஐரோட்டு 12, வது இலக்கமுடைய மாடி வீடு. காலை 8 மணி.)

கிருஷ்ணசாமி: அம்மா, அந்த ஹரிஜனப் பெண்ணைத்தான் கலியாணஞ் செய்து கொள்ளப் போகிறேன். அவளைப் பார்த்த எவரும் அவள் ஹரிஜன குலத்தில் பிறந்தவளென்று சொல்லவே மாட்டார்கள். அவ்வளவு சுந்தரமாக அவள் இருக்கிறாள். அவள் மாநிறமாகத்தான் இருப்பாள். ஆயினும், முகத்தில் என்ன ஒளி! என்ன களை! பெண்களுக்குரிய உயர்ந்த லட்சணங்கள் எல்லாம் அவளிடம் பொருந்தியிருக்கக் காண்கிறேன். அவள் பத்தாவது வகுப்பு வரை படித்திருக்கிறாள். தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு மூன்றும் அவளுக்குத் தெரியும். அவள், எனக்கேற்ற வாழ்க்கைத் துணைவியாக இருப்பாள் என்பதில் எனக்கு சந்தேகமேயில்லை. நான் இதுவரை இந்து சமூகச் சீர்திருத்தங்களைப் பற்றிப் பேசி வந்திருக்கிறேன். என் நம்பிக்கைகளையும் கொள்கைகளையும்

செயலில் நடத்திக் காட்டுவதற்கு இப்போது தருணம் வாய்த்திருக்கிறது. இதை நான் கை நழுவ விடப்போவதில்லை. சமூகம் என்னைச் சாதியிலிருந்து விலக்கட்டும். அதைப் பற்றி எனக்கு அக்கரையில்லை. ஆனல் நான் வாழ்க்கையில் சுகப்பட வேண்டுமென்னும் எண்ணம் உனக்குச் சிறிதேனும் இருந்தால் எனக்கு நீ இவ்விஷயத்தில் தடையாயிருக்கக் கூடாது.

காமாட்சி: கிட்டு, நீ எனக்கு ஒரே பிள்ளை. பல வருடங்கள் தவஞ் செய்து உன்னைப் பெற்றேன். உனக்கும் இந்த விபரீத புத்தி வரவேண்டுமா? உன் சாதி என்ன? குலங்கோத்திர மென்ன? ஒரு நீசப்பெண்ணை இச்சிப்பது என்ன வெட்கக்கேடு! வேண்டாம்!

கிருஷ்ணசாமி: அம்மா, நீ வேறெந்த விஷயத்திலும் எது கேட்டாலும் செய்யத் தயார். அதற்காக என் உயிரையும் தியாகம் செய்வேன். இந்த ஒரு விஷயத்தில் மட்டும் உன் பேச்சைக் கேட்க மாட்டேன். நான் காணும் உண்மையின் படி நடக்கவும், தூய்மையான கருத்துக்களின் படி என் வாழ்க்கையை நிருமித்துக் கொள்ளவும், எனக்கு உரிமையுண்டு.

காமாட்சி: அப்பா, தொன்று தொட்டு வரும் சமூக ஆசாரங்களையும் பழக்க வழக்கங்களையும் உதறித் தள்ளி விடுவதற்குத் தனி மனிதன் ஒருவனுக்கு உரிமையேது? அவ்விதம் செய்வது நீதியுமாகாதே.

கிருஷ்ணசாமி: சமூக ஆசாரங்களும் பழக்க வழக்கங்களும் கால ரீதிக்கு ஒப்ப மாறுதலடைவதும், அம்மாறுதல்களுக் கொப்ப சமூக அமைப்பு மாறுவதும் இன்றியமையாதன. பழமையிலும் சம்பிரதாயத்திலும் ஊறிப்போன மக்கள் காலாகாலத்தில் ஏற்படவேண்டிய சீர் திருத்தங்களை எதிர்க்கின்றனர். அமைதியான மாறுதல்களுக்கு இடங் கொடாவிட்டால் நவசக்திகள் ஒன்ருகத் திரண்டு புரட்சி ஏற்படும். அப்புரட்சியில் பழைய அமைப்பும் ஒழுங்கும் உருக்குலைந்து, தவிடு பொடியாகி, அவை இருந்தவிடத்தில் சமூகத்தின் புது நிலைமைக் கொப்ப ஒரு புது அமைப்பும் ஒழுங்கும் ஏற்படுவது திண்ணம். உன் எதிர்ப்பு வீண். நீ கால வெள்ளத்தின் வேகத்தைத் தடுக்க இயலாது.

காமாட்சி: பையா, நீ என்னவோ பெரிய விஷயங்களைப் பற்றிப் பேசுகிருய். அவை எனக்கு விளங்க வில்லை. புரட்சி என்ருலே எனக்குப் பயமாயிருக்கிறது. நமது குலாசாரப்படி வாழ வேண்டுமென்பதே எனக்குத் தெரிந்தது. மிக அழகான படித்த பெண்கள் நமது குலத்தில் எத்தனையோ பேர் இருக்க இந்தப் பறைப் பெண்ணை மணக்க விரும்புகிருய். எல்லாம் என்

கஷ்டகாலம். அந்த எண்ணத்தை விடமாட்டாயா?

கிருஷ்ணசாமி: அம்மா, என்னைத் தொந்தரவு செய்யாதே. எனக்குக் குலமும் கோத்திரமும் வேண்டாம். இவையே நமது நாட்டில் மக்களைப் பிரித்து, மனிதத் தன்மையை ஒடுக்கி, நம்மை அடிமைக் குழியில் தள்ளியிருக்கின்றன. பட்டுப்போன ஒரு சமூகத்திற்குப் புத்துயிரளிக்கும் ஒரு மகத்தான வேலையில் நான் ஈடு படப்போகிறேன். அந்த வேலையில் எனக்குத் துணையாக விளங்கக் கூடியவள் அந்த ஹரிஜன திலகமாகிய தங்கமணியே யாவாள். நான் இந்த விஷயத்தில் செய்துள்ள முடிவை எவரும் அசைக்க முடியாது. நான் வீணாக வாதாடப் போவதில்லை. இதனால் நான் உன்னைத் துறக்க நேரிடும் என்பதை அறிவேன். ஆயினும், லட்சியமே உயிராயுள்ள எனக்கு உன்னைத் துறப்பதைத் தவிர வேறு வழியில்லை.

தந்தி சேவகன்: சார், தந்தி!

கிருஷ்ணசாமி: உள்ளே வா. (உள்ளே வந்த தந்தி சேவகனிடமிருந்து தந்தியை வாங்கிப் படிக்கிறான்.)

புதுவை.

"என் அக்காள் எனக்கு தந்தியடித்ததன் மேல் இங்கே வர நேர்ந்தது. நாங்கள் எவ்வளவோ சொல்லியும் மைத்துனர்பிடிவாதமாயிருக்கிறார். வேறொரு மணமகனுக்கு ஏற்பாடு செய்து பரியமும் போட்டாய் விட்டது. தங்கமணி ஓயாமல் கண்ணீர் விடுகிறாள். இதைப் பார்த்துவிட்டு அடுத்த வாரமே முகூர்த்தம் நிச்சயித்திருக்கிறார். என்ன செய்வது? தங்கமணியை மறந்து விடுங்கள்.

மதுரைப்பிள்ளை"

ஆகா! நான் கட்டிய கோட்டை ஒரு நொடியில் இடிந்து விட்டதே! ஊம்! இருக்கட்டும்!

காமாட்சி: என்னடா சமாச்சாரம்?

கிருஷ்ணசாமி: ஒன்றுமில்லை. அந்தப் பெண்ணின் தகப்பனார் அவளை வேறிடத்தில் கொடுக்க ஏற்பாடு செய்து விட்டாராம்.

காமாட்சி: அப்பாடா! என் கவலை நீங்கிற்று. நானும் நாளைக்கே தஞ்சாவூர் போய் நல்ல பெண்ணைப் பார்த்து முகூர்த்தம் நிச்சயம் செய்து விட்டு வருகிறேன்.

கிருஷ்ணசாமி: அதெல்லாம் வீண் ஆசை. நான் என் தங்கமணியை இழந்து விட்டாலும் என் லட்சியத்தை விடப்போவதில்லை. மனிதனின் நன்மைக்காக ஏற்பட்ட சமூகக் கட்டுப்பாடுகளும், சமயக்கட்டுப் பாடுகளும் இன்று மக்களின் விலங்குகளாகி விட்டன. அவ் விலங்குகளை உடைத்தெறியும் வேலையில் மிகவும் முரமாக ஈடு படப்போகிறேன். எம். எல். படிப்புக்கு மூட்டை கட்டிவிட்டேன். நீ தஞ்சை போகலாம். நான் சுயமரியாதைக் கட்சியில் சேர்ந்து சமூகப் பிரசாரம் செய்யப் போகிறேன். நமது நாட்டிற்கே சாபக்கேடாகவுள்ள இந்தச் சாதியும், குறுகிய சமயப் போக்கும் என்று ஒழிகிறதோ அன்றே நமக்கு விடுதலை!

(திரை)

தமிழ்மணி

டி.கே.சி

1. 'தாயில்லவர்க்குத் தாய்'

தமிழ்க் கவி என்பது தனியான உருவம் படைத்தது. உண்மையான கவிக்கு உருவம் நிச்சயம் உண்டு. எத்தனையோ பூர்வமான கவிகள் அற்புதமான உருவத்தோடு அமைந்துள்ளன. பிற்காலத்தவருக்கு கவி உருவத்தின் தன்மை இன்னதென்று தெரியாமல் போய், பொருந்தாத சாமான்ய விஷயங்களையும், கற்பனைகளையும் செய்யுளுக்குள் புகுத்தி உருவத்தைக் கெடுக்க நேர்ந்திருக்கிறது. அந்தச் சேர்மானங்களையெல்லாம் விலக்கித், திருத்தவேண்டிய எழுத்துக்களையும் வார்த்தைகளையும் திருத்திப் பார்த்தால்தான், பூர்வமான கவி உருவம் இன்னதென்று தெரியவரும்.

பண்டைய கவியொன்றைப் பார்க்கலாம் :

ஒரு காலத்தில் மழையே பெய்யாமல் கடும் வெயில் எரித்ததின் காரணமாகக் குளங்கள் எல்லாம் வற்றிப் போய் விட்டன. ஒரே பஞ்சம். பட்டினி காரணமாக இயற்கையான அன்போ, இரக்கமோ எல்லாம்,, மக்கள் இதயத்தில் அற்றுப்போய் விட்டன. ஏதோ கிடைத்த இலைகளை வெந்து சாப்பிடுகிறார்கள். அதையும் குழந்தைகளுக்குக்கூட தெரிந்துவிடக் கூடாது என்று மறைவிலிருந்து சாப்பிடுகிறார்கள் பெற்றோர்.

காலை ஞாயிறு
கடுங்கதிர் பரப்பி,
வேலையுங் குளன்என
வெடிபடச் சுவறி,
தந்தைஆய் மக்கள்
முகம்பா ராமே
வெந்த சாகம்
வெவ்வே (று) அருந்தி,

தாய் தந்தையர் நிலை இப்படி: கேட்பானேன் மற்றவர் நிலையை !

உற்ற நண்பர்களைப் பார்த்தாலும் இனந் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ள மனமிருக்கிறதில்லை. இதமான வார்த்தை சொல்லுகிறது போய்விட்டது. உயர்ந்த நீதி நூல்களைப் படித்தவர்கள் தான். ஆனால் எல்லாம் மறந்தொழிந்து போய்விட்டது. உலகம் முடிகிற காலமே வந்து விட்டது, என்று எண்ணத் தோன்றுகிறது.

விழித்த விழி எல்லாம்
வேற்று விழி ஆகி,
அறவுரை இன்றி
மறவுரை பெருகி,
உறை மறந் (து) ஒழிந்த
ஊழிகா லத்தில்; —

உலகம் முடிகிற காலமாய்த் தோன்றுகிறது. ஆனாலும் அதை ரட்சிக்க திருமாலே அவதாரஞ் செய்தான் ;—ஆலஞ்சேரியில்.

தாயில் லவர்க்குத்
தாயே ஆகவும்
தந்தையில் லவர்க்குத்
தந்தையே ஆகவும்,
இந்த ஞாலத் (து)
இடுக்கண் தீர
வந்து தோன்றினன்
மாநிதிக் கிழவன்; —
நீலஞ் சேரும்
நெடு மால்
ஆலஞ் சேரி
அயிந்தன் தானே!

இங்கே கவி முடிகிறது. உள்ளூரும் உணர்ச்சியும், அதற்கேற்ற கவி உருவமும் எப்படி அற்புதமாய் அமைந்திருக்கிறது !

[காலை ஞாயிறு கடுங்கதிர் பரப்பி—காலையிலேயே சூரியன் கடுமையாகக் காய்ந்து, உச்சி வெயில் போலவே; வேலையுங் குளன் என வெடிபடச் சுவறி—சமுத்திரத்தின் தளமும் வறண்டு வெடிபடும்படியாக உலர்ந்து: குளன்என—சாமான்ய குளத்தைப் போலவே வறண்டு; தந்தை ஆய்—தந்தையும், தாயும்; வெந்த சாகம்—வெந்த ஏதோ பல இலைகளை; வேற்று விழி—இனந்தெரியாது பார்ப்பதுபோல் பார்க்கும் விழி; அறவுரை இன்றி—அன்பான் வார்த்தையெல்லாம் இல்லாமல்; மற உரை பெருகி—கடுமையான வார்த்தைகளே வழங்க நேர்ந்தது. உறை மறந்தொழிந்த-நீதி வார்த்தைகள் எல்லாம் மறந்தொழிந்த; ஊழிகாலத்தில்—உலகம் முடிகிறதுபோல்த் தோன்றுங் காலத்தில்; இந்த ஞாலத்து இடுக்கண் தீர—இந்த உலகத்துக் கஷ்டமெல்லாம் தீரும்படி; வந்து தோன்றினன் மாநிதிக் கிழவன்—வைகுண்டத்திலிருந்து வந்து அவதரித்தனன் பெரும் வள்ளலாய்—அவன் யார்?—நீலஞ் சேரும் நெடுமால்—நீலமேனி கொண்ட திருமாலான; ஆலஞ்சேரி அயிந்தன் தானே--ஆலஞ்சேரிக்கு அரசனான அயிந்தனனவன்.]

* * *

குறிப்பு :—தமிழ் நாவலர் சரித்திரத்திலும், பெருந் தொகையிலும் கீழ்க்கண்டபடி செய்யுள் அமைந்திருக்கிறது.

1. காலை ஞாயிறு கடுங்கதிர் பரப்பி
வேலையுங் குளனும் வெடி
படச் சுவறி
தந்தையை மக்கள் முகம்பா
. ராமே
வெந்த சாகம் வெவ்வே றருந்
திக்
5. குணமுள தனையுங் கொடுத்து
வாழ்ந்த
கணவனை மகளிர் கண்பா
ராமே
விழித்தவிழி யெல்லாம் வேற்
றுவிழி யாகி
அறவுரை இன்றி மறவுரை
பெருகி
உறைமறந் தொழிந்த ஊழிகா
லத்தில்

தாயில்லவர்க்குத் தாயே யாகவும்
தந்தையில் லவர்க்குத் தந்தையே யாகவும்
இந்த ஞாலத்(து) இடுக்கண் தீர
வந்து தோன்றினன் மாநிதிக் கிழவன்
நீலஞ் சேரும் நெடுமால் போல்வன்
ஆலஞ் சேரி அயிந்தன் என்பான்
ஊருண் கேணி நீரே போலத்
தன்குறை சொல்லான் பிறர் பழி உரையான்
மறந்தும் பொய்யான் வாய்மையுங் குன்றான்
இறந்து போகா தெம்மையுங் காத்தான்
வருந்தல் வேண்டா வழுதி!
இருந்தனம் இருந்தனம் இடர் கெடுத்தனமே!

அடிகள் ஐந்தும் ஆறும், சோகத்தின் வேகத்தைக் கெடுத்து விடுகின்றன. தந்தை தாயாரைவைத்து உயர்ந்த அன்பை சுட்டிக் காட்டிய பிறகு மனைவியரை எடுத்துப் பேசுகிற காரியம் வேண்டவே வேண்டாம்.

ஆலஞ் சேரியில் அவதரித்தான்
அயிந்தன்தானே, — என்று கவிதோரணையோடு முடிகிறது. இது தான் தமிழ் முறை. யாரோ ஒருவர் செய்யுளுக்குப் பொருத்தமில்லாமல், சாமான்ய நீதிகளையும் உவமைகளையும், வேண்டாததையுஞ் சேர்த்து செய்யுளில்த் தொங்கவிட்டுவிட்டார். 16 முதல் 21 ஈறாக உள்ள அடிகள், சென்று தேய்ந்த இறுதலுக்கு வாய்ப்பான இலக்கியம்.

தாயில் லவர்க்குத்
தாயே யாகவும்
தந்தையில் லவர்க்குத்
தந்தையே யாகவும்

என்று சொல்லி ஆனபின் ‘ஊருண் கேணி.........’ என்று சொல்லவும் தோன்றுமா! ‘ஆலஞ்சேரி அயிந்தன்’ என்றுதானே முடிய வேண்டும்? அதற்குப்பின் சொல்லுகிறதெல்லாம் பிய்ந்த நூலைப் பிடித்து இழுக்கிற கணக்குத்தான்.

தமிழ் நாட்டு மக்களுக்கு ஒரு விண்ணப்பம்

[தமிழிசை இயக்கம் பசுமரத் தாணிபோல் தமிழர்கள் உள்ளத்தில் பதிந்து விட்டது. இனி யாராலும் இதைக் கொஞ்சங்கூட அசைக்கவே முடியாது. கலையுணர்ச்சி கொண்ட எல்லாத் தமிழர்களும் இயக்கத்தை அமோகமாக ஆதரிக்கிறார்கள். இந்த அரிய பணியில் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களும், ராஜா சர். அண்ணாமலை செட்டியார் அவர்களும் பெரிதும் ஈடுபட்டிருக்கிறார்கள். பரந்த நோக்கத்துடன் தொடங்கிய தமிழிசை சிறப்புடன் தழைத்து ஓங்கும் என்பதில் சந்தேகமே கிடையாது. கலை வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட இவ் வேண்டுகோளுக்கிணங்கி, எல்லாத் தமிழர்களும் இதில் கலந்துகொண்டு பயன் பெறுவார்கள் என்றே நம்புகிறோம்.

ஆசிரியர்]

நமது தாய் நாட்டில் தேசீய இயக்கம் பரவியதன் காரணமாக நம் தேச மக்களிடையில் ஒரு புதிய கலை உணர்ச்சி இப்போது தோன்றியிருக்கிறது. நம் முன்னோர்களுடைய நாகரிகத்தின் பெருமையும், அவர்கள் நமக்குக் கொடுத்திருக்கும் கலைச் செல்வத்தின் அருமையும், இன்னதென்று சமீப காலத்தில்தான் நமக்குத் தெளிவாய்த் தெரிந்தது. இந்தக் கலை உணர்ச்சியை முதன் முதல் பெற்றவர்கள் நம் வங்காள சகோதரர்கள். சுமார் 30 வருஷங்களுக்குள் வங்காள மொழியும், அம்மொழியிலுள்ள ஆடல் பாடல்களுக்குரிய நூல்களும், இலக்கியங்களும் ஒரு புத்துயிரைப் பெற்றன. மகாராஷ்டிரர், ஆந்திரர் முதலிய மற்ற இந்திய மக்களிடையிலும் இதே விதமான உணர்ச்சி தோன்றியிருக்கிறது. உயர்ந்த கலைச் செல்வத்தின் வார்சுகளாகவிருக்கும் தமிழ் மக்கள் மனதிலும் இந்தப் புத்துணர்ச்சி குடி கொண்டு விட்டதென்றால், அதில் என்ன ஆச்சரியம்? தாய்மொழியை மறந்திருந்த தமிழ் மக்களுக்கு இப்போது அம்மொழியின்மேல் அபிமானம் ஏற்பட்டு விட்டது. வெகு காலமாக மறைந்து மங்கலடைந்திருந்த தமிழ்க் கலையை உலகில் பிரகாசிக்கச் செய்ய வேண்டுமென்ற ஆசை அனேகம் தமிழ் மக்களுக்கு உண்டாகி யிருக்கின்றது.

தமிழ் இசை இயக்கம் இந்தக் கலை உணர்ச்சியின் ஒரு அம்சம். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுக்கும் இப்போது புத்துயிர் வந்திருக்கின்றது. தமிழ் மொழியில் இசையின் இன்பத்தை அடைய வேண்டுமென்ற ஆசைக்குக் காரணம் நாடெங்கும் பரவி வரும் கலை

உணர்ச்சியே தவிர வேறொன்றும் அல்ல.

தமிழ் மக்களிடையில் தோன்றியிருக்கும் கலை உணர்ச்சியை நியாயமாக எல்லோரும் பாராட்ட வேண்டும். தமிழன் ஒவ்வொருவனும் உற்சாகத்துடன் ஆதரிக்க வேண்டும். அப்படிக்கில்லாமல் ஒரு சிறுபான்மையார் இந்த இயக்கத்தைப் பலமாக எதிர்க்க முன் வந்திருப்பது ஆச்சரியமே. தமிழ் இசை இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள் வம்புச் சண்டைக்காரர்களென்றும், வகுப்புத்துவேஷிகளென்றும், கட்சிவாதிகளென்றும் இந்த இயக்கத்தை எதிர்ப்பவர்கள் கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவ்விதமான கெட்ட நோக்கங்கள் இந்த இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு இல்லையென்று எவ்வளவு தடவை எடுத்துச் சொன்னபோதிலும் இவர்கள் மனப்பான்மை மாறவில்லை. நியாயமான இந்த இயக்கத்தை எதிர்ப்பது கலை வளர்ச்சியைத் தடுப்பதாகுமென்றும், கலை யுணர்ச்சியை அடியோடு அழிப்பதாகுமென்றும் இவர்கள் உணரவில்லை.

விசித்திரமான காரணங்களை ஆதாரமாகக் கொண்டு தமிழ் இசை இயக்கம் தாக்கப்பட்டு வருகிறது. 1. கச்சேரிகளில் பாடுவதற்குச் சிறந்த கீர்த்தனைகள் தமிழ் மொழியில் இல்லையென்றும், 2. மற்ற சில மொழிகளைப் போல் சங்கீதத்திற்குத் தமிழ் மொழி அவ்வளவாகப் பொருத்தமான தல்லவென்றும், 3. தமிழ் இசை இயக்கம் கர்நாடக சங்கீத முறையைக் கெடுத்துவிடுமென்றும், 4. சங்கீதத்திற்குச் சாகித்தியமே அவசியமில்லையென்றும், இம்மாதிரி பல காரணங்களை எடுத்துச் சொல்லுகிறார்கள்.

இவைகளுக்கு விஸ்தாரமாக பதில் சொல்ல இது சந்தர்ப்பமல்ல. அநேகம் தடவைகளில் இயக்கத்தின் நோக்கத்தைப்பற்றி எவ்வளவு எடுத்துச் சொல்லியும் பயன் படவில்லை. சங்கீதக்கலையில் ஈடுபட்டுத் தேர்ந்த அநேகம் பெரியோர் தமிழ் மொழியில் சிறந்த கீர்த்தனைகள் நூற்றுக்கணக்காய் இருக்கின்றன என்று எடுத்துக் காட்டி யிருக்கிறார்கள். தமிழ் மொழி சங்கீதத்திற்குப் பொருத்தமில்லை யென்றால், அதற்கு அவ்விதம் சொல்லுகிறவர்கள் உண்மை இன்னதென்று தெரிந்து கொள்ளாம லிருப்பதும், தமிழ் மொழியில் அவர்களுக்கு வெறுப்பு இருப்பதும் தான் காரணமாகும். இவ்விதப் பழிச்சொல் தமிழ் மக்களை இழிவு படுத்தும் சொல் என்றே கருதவேண்டும். தமிழ் மொழியின் நுட்பத்தை அறியாத தமிழ் மக்களல்லாத வெளியார்கள், தமிழ் மக்கள் மனதைப் புண்படுத்தும் வார்த்தைகளை இனி மேலாவது சொல்லாமல் இருப்பார்கள் என்று நம்புகிறோம். தமிழராகப் பிறந்தும் தாய் மொழியைப் பழிக்கும் மனிதர் தமிழ் நாட்டில் இருப்பது விசனிக்கத்தக்க ஒரு விஷயமேயாகும். உலகத்தில் மக்கள் பேசிவரும் மொழிகளில் தமிழ்மொழியும் உன்னத பதவியுள்ள ஒரு மொழி யென்று

தமிழ் மக்கள் கருதுகின்ருர்கள். தமிழ் என்னும் சொல்லுக்கே இனிமை என்று பொருள் உண்டு. தமிழ் இசைகளைப் பாடுவதால் கர்நாடக சங்கீதத்தின் தரம் கொஞ்சமேனும் குறைந்து போய் விடாதென்று அறிவாளிகள் விளக்கிக் கூறி யிருக்கிருர்கள்.

தமிழ் இசை இயக்கத்திற்கு நியாயமில்லாத எதிர்ப்பு பலப்பட்டுக் கொண்டு வருகிறபடியால், இந்த இயக்கம் முன்னேற வேண்டுமானல் தமிழ் மக்கள் விடா முயற்சியுடன் உழைக்கவேண்டும். விஷமப் பிரசாரத்திற்கும் கேலிப் பேச்சுகளுக்கும் அஞ்சக்கூடாது. தமிழ் நாட்டில் நடைபெறும் சங்கீதக் கச்சேரிகளில் தமிழ்ப் பாட்டுகளை அதிகமாகப் பாடச் செய்யவும், இப்போது மறைந்திருக்கும் தமிழ்க் கீர்த்தனங்கள், பதங்கள், பண்கள் இவைகளை வெளிவரச் செய்து விளக்கி சங்கீத வித்வான்கள் அதிகமாகக் கையாளச் செய்வதற்கும் தமிழில் புதிய கீர்த்தனங்களையும் பதங்களையும் செய்ய வித்வான்களுக்கு ஆதரவளிப்பதற்கும் சென்னையில் **தமிழ் இசைச்சங்கம்** என்னும் பெயரால் ஒரு புதிய சங்கம் ஸ்தாபிக்க முயற்சி நடந்துவருகிறது. சில தமிழ் அபிமானிகள் இந்தச் சங்கத்திற்கு இதுவரை ரூ. 3,51,922 தந்து, அந்தத் தொகை இம்பீரியல் பாங்கில் இருக்கிறது. தமிழ் மக்கள் எல்லோரும் இந்தச் சங்கத்திற்கு ஆதரவு கொடுத்து உற்சாகத்துடன் உதவி செய்வார்களென்று நம்புகிருேம்.

தமிழ் இசை இயக்கம் வகுப்புப் பிரிவினை இயக்கமல்லவென்றும், தாய்மொழியைப் போற்றுவது மனித இயற்கையென்றும், பின்னும் ஒரு முறை இந்த விண்ணப்பத்தின் மூலம் நாங்கள் வற்புறுத்திச் சொல்லுகிருேம். தாய்மொழியை ஒரு மனிதன் போற்றினல் அதனல் அவன் பிறமொழிகளை வெறுக்கிருன் என்று சொல்லுவது எவ்விதத்திலும் பொருத்தமில்லாதது. தமிழ்த் தாயின்மேல் பற்றுதலை உண்டாக்கும் வழியில் தமிழர்களிடையிலிருக்கும் வகுப்புச் சண்டை சிறிதேனும் குறைவு படலாம் என்று எதிர்பார்க்கக்கூடாதா? ராஜீய விஷயங்கள் வேற்றுமைகளை உண்டாக்கக்கூடும். ஆனல் கலைப்பற்று ஒற்றுமைக்கு வழிகாட்டியாகவிருக்கும். தமிழ் இசை இயக்கமென்பது கலை இயக்கமாகும். இனிமையான தமிழ் இசையைக் கேட்டு அதன் சுவையை அனுபவிக்க வேண்டுமென்று தமிழ் மக்கள் ஆசைப்படுவது இயற்கை. இந்த இயக்கம் தாய்மொழியைப் போற்றும் இயக்கம். இதில் கட்சிபேதமும் வகுப்பு பேதமும் இல்லை. எல்லாத் தமிழ்மக்களும் கலந்துகொண்டு ஆதரிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிருேம்.

அண்ணமலை செட்டியார்.
சண்முகம் செட்டியார்.

தமிழ் இசைச் சங்கம், சென்னை.

ராஜா சர். அண்ணாமலை செட்டியாரின் அழைப்புக் கிணங்கி தமிழ் இசைச் சங்கத்தின் நன்கொடையாளர் ஆலோசனை சபை ஒன்று 1943 ம் வருஷம் ஏப்பிரல் மாதம் 19 உ திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சென்னை அடையார் செட்டிநாடு ஹவுசில் நடைபெற்றது. சபை துவங்குமுன் ராஜா சர். அண்ணாமலை செட்டியார் வந்திருந்த கனவான்களுக்கு விருந்தளித்தார். பின்னர் தண்டபாணி தேசிகரின் இசை விருந்து நடந்தது. அச்சமயம் சபையில் சுமார் 20 நன்கொடையாளர்களும் மற்றும் பல கனவான்களும் சென்னையிலிருந்தும் பல ஜில்லாக்களிலிருந்தும் வந்து கலந்து கொண்டனர்.

பின்னர் ராஜா சர். அண்ணாமலை செட்டியார், தமிழ் இசையின் முன்னேற்றத்தைக் கருதி தமிழ் இசைச் சங்கம் என்னும் சபை ஒன்றை ஸ்தாபித்து ரிஜிஸ்டர் செய்யத் தீர்மானிக்கப் பெற்றிருக்கிறது என்று தெரிவித்தார். அச்சங்கத்தின் நோக்கங்களை எடுத்துக் கூறினர். ஷை சங்கத்திற்காக நாலு லக்ஷம் ரூபாய்க்கு மேலாகவே நன்கொடை வாக்களிக்கப்பட்டிருக்கிற தென்றும் அதில் ரூ. 3,71,922 ரொக்கமாக வசூலாகி இம்பீரியல் பாங்கில் வைக்கப் பட்டிருக்கிறதென்றும் தெரிவித்தார்.

அதன் பின்னர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் இச்சங்கத்தின் நோக்கங்களையும் சட்டதிட்டங்களையும் பற்றி விபரமாக எடுத்துச் சொன்னர். சங்கத்தின் நிர்வாகம் 7 ட்ரஸ்டிகளால் நடத்தப்பெறும். சங்கத்தின் சட்டதிட்டங்களும் கூடியிருந்த நன்கொடையாளர்களால் ஆமோதிக்கப் பட்டன. பின் கண்ட 7 பேர்களும் முதல் ட்ரஸ்டிகளாக இருந்து சங்கத்தின் காரியங்களை நடத்துவதென்று ஏகமனதுடன் தீர்மானிக்கப்பெற்றது. சங்கத்தை 1880-ம் வருஷத்திய 21 வது ஆக்ட்படி ரிஜிஸ்டர் செய்யவும் சங்கத்தின் ஆதரவில் நடவடிக்கைகளைத் துவங்கவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

1. ராஜா சர். அண்ணாமலை செட்டியார் (பிரஸிடெண்ட்)
2. சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் (வைஸ்பிரஸிடெண்ட்)
3. திவான்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார்
4. பி. எஸ். சாத்தப்ப செட்டியார்
5. ராவ்பகதூர் வி. எஸ். தியாகராஜ முதலியார்
6. ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியார்
7. பி. வி. குழந்தையன் செட்டியார்

சிறுகதை:

தங்கம்மா

திருஞானம்

நல்லசாமிக் கவுண்டரைப் பார்ப்பதென்றால் எனக்கு எப்போதுமே அளவற்ற மகிழ்ச்சி ஏற்படுவது வழக்கம். வேறு யாரிடத்தில் பேசிக் கொண்டிருந்தாலும் அத்தனை உற்சாகமும், குதூகலமும் என் ஏற்படுவதில்லை என்பதைப் பற்றி நானும் பலதரம் யோசித்திருக்கிறேன். ஆனால் நாளது வரை அந்தச் சந்தேகம் தீர்ந்த பாடில்லை. அதென்னவோ கவுண்டரைத் தூரத்தில் கண்டாலே ஒரு உவகை உள்ளத்தில் பிறக்கிறது. அவரோடு பேசிக் கொண்டிருந்தால் நேரம் போவதே தெரிவதில்லை. இத்தனைக்கும் அவர் ஒரு எம். ஏ. யோ அல்லது பி. ஏ. ஹானர்ஸ்ஸோ அல்ல. திண்ணைப் பள்ளிக் கூட வாத்தியாரோடு தகராறு பண்ணிக் கொண்டு, காடு காடாக ஒளிந்து திரிந்து, எப்படியோ கையெழுத்து மட்டும் தான் போடக் கற்றுக் கொண்டார். இப்போது தன்னை ஒரு தற்குறி என்று சொல்லிக் கொள்ளத் தயங்குவதில்லை! “இந்தக் கை நாட்டுக்கு என்ன அப்புனு தெரியும்? நீ எதாச்சும் சொன்னாக் கேப்பமிண்ணு இருந்தா, எம் வாயைப் புடுங்கி அலக்காட்றயே” என்று சிரித்துக் கொண்டே சொல்லுவார். ஆனால் எனக்கென்னவோ அவர் பேச்சில் தனி இன்பம் இருப்பதாகவே பட்டது. அவர் பேசிக் கொண்டிருந்தால் விடிய விடியக் கேட்டுக் கொண்டே இருக்கலாம் என்று நான் சொல்வேன்.

நல்லசாமிக் கவுண்டர் இதைக் கேட்டு என்ன எண்ணினார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் ஸ்ரீமதி பார்வதி பி. ஏ. க்கு கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை என்பது எனக்கு ரொம்ப நன்றாகத் தெரியும். ஸ்ரீமதி பார்வதி பி. ஏ. பலதரம் என்னிடம் இதைப் பற்றி வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறாள். மனதிற்கு மயக்கம் தரும் மாலை வேளைகளையும், அருமையான நிலா இரவுகளையும், அமைதியான காலை நேரங்களையும் கவுண்டரோடு பேசிப் பேசியே பாழ்படுத்தி விடுகிறேன் என்பது ஸ்ரீமதி பார்வதி பி.ஏ. யின் நினைப்பு. சரிதான், இந்தப் பார்வதியோடு பி. ஏ யையும் என் விடாமல் சேர்த்துக் கொண்டே வருகிறேன் என்றால் எ.பி. ஸி. டி. தெரிந்த பையன் கூட நல்லசாமிக் கவுண்டரைப் போன்ற ‘கைநாட்’டுகளோடு பேசுவது ரொம்ப அவமானம் என்பது என் மனைவி ஸ்ரீமதி பார்வதி பி. ஏ. யின் ஆணித் தரமான அபிப்பிராயம்! ஆனால் எனக்கல்லவா தெரியும் கவுண்டரின் அருமை பெருமை. அரும்பாடு பட்டு பி. ஏ. பட்டத்தைப் பெற்றுவிட்ட பார்வதிக்கு அது தெரியவா போகிறது?

(2)

‘பொன் விளையும் பூமி’ என்று சொல்வது நல்லசாமிக் கவுண்டர் தோட்டத்துக்குத் தான் நூற்றுக்கு நூறு பொருந்தும். தங்கம் போட்டால் தங்கம் எடுக்கலாம். அவர் காட்டு மண் வாக்கே அப்படி. அதோடு நல்ல கைராசியும் அவருக்கு உண்டு. அவர் ‘தொட்டது துலங்கும், வைத்தது விளங்கும்’ என்பதில் எல்லோருக்குமே நம்பிக்கை உண்டு.

முறுக்கி விட்ட மீசையையும் இயற்கையாகவே சிவந்த அவர் கண்களையும் பார்த்தால், ரொம்ப முன்கோபி போலத் தோன்றும். சில சமயங்களில் படபடப் பாக வும் பேசிவிடுவார். நீக்குப் போக் குத் தெரியாதவனே என்று சந்தே கம் கூட வரும். ஆனால் பெரிய விரோதியிடம் கூட, "அண்ணு, என்னமோ ஒளறுனதை மனசிலே வைச்சுக்காதீங்க. இண்ணைக்கு கட்டாயம் நம்ம வளவுக்கு வந்து கை நனைக்காமே போகப்படாது. ஒரு வாய் நீங்க உங்காமே போனு எம் மனசு கேக்காது" என்பார். அந்த அன்பு அழைப்பை மீற யாருக்குமே துணிவு வராது.

இப்பேர்ப் பட்ட நல்ல மனிதனை ஒரு தீராக்குறை சதா வாட்டிக் கொண்டே இருந்தது. உண்ணும் போதும் உறங்கும் போதும் அவ ரை அந்த வேதனை கொஞ்சம் கொஞ்சமாக அரித்துத் தின்று கொண்டே வந்தது. அடடா என் ன பரிதாபம்!

'பாழும் கடவுளுக்குக் கண்ணி ல்லே' என்று தூற்றுவதைக் கேட் கிறோம்! அப்போதெல்லாம் நாம் என்ன நினைக்கிறோம்? 'கடவுளா வது, கண்ணற்ற விதமாக நடப்ப தாவது! எல்லாம் நாமாகச் செய்து கொண்டு வீண் பழியைக் கடவுள் மேல் போடுகிறோம்' என்று தான் எண்ணுகிறோம். ஆனால், நல்லசா மிக் கவுண்டருக்கு ஏற்பட்ட துர் பாக்கியத்தை நினைத்தால் நம்மைப் படைத்த பிரமனிடமே அசாத்தி யக்கோபம் வரத்தான் செய்கிறது. பாவம், தன்னுடைய மகளைப் பற்றி நினைக்கும் தோறும் கவுண்டர் உள்ளம் கலங்கும்,

கவுண்டருக்கு ஒரே ஒரு செல்ல மகள். வயசு பதினைதான் ஆகி றது. ஆனால் அழகு அவளிடம் பரி பூரணமாகப் பூத்திருந்தது. 'கரு கரு' என்று இடை வரை நீண்டு தொங்கும் கூந்தலைக் கொண்டை போட்டு மல்லிகையோ, ரோஜா வோ கொத்தோடு சொருகியிருப் பாள். வரிந்து கட்டிய மாராப்புச் சேலையோடு திடுதிடென்று தான் எந்தக் காரியத்தையும் செய்வாள். ஒப்புக்குச் செய்யும் வேலை யொன் றும் அவளுக்குப் பிடிக்காது. 'எங் க தங்காயா இல்லாட்டி எங்களு ககுப் பொளுதே போவாது' என்று ஊர்ப் பெண்கள் எல்லாரும் சொல் லுவார்கள்.

அனைவருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டிருந்தாள் தங்க ம்மா. நொடிக்கு நூறுதரம் கவுண் டர், "தங்கம்மா! தங்கம்மா!" என் று கூப்பிட்டுக் கொண்டேதான் இருப்பார். சுண்ணும்பு முதல் கொண்டு, தங்கத்தின் கையில் வாங் கிக் கொண்டால் தான் கவுண்ட ருக்குத் திருப்தியாயிருக்கும்.

ஆனால் தங்கம், தன் அருமைத் தந்தையிடமோ மற்ற ஆருயிர்த் தோழிகளிடமோ ஒன்றும் பேச முடியாதவளா யிருந்தாள். அவள் மனத்தை நீண்டு விரிந்த கருங்கண் கள் வழியாகத் தான் காட்ட முடிந்ததே யொழிய வாய் திறந்து அவளால் ஒன்றும் சொல்ல முடி யாது. இதனால் பெற்ற மனம் மட் டுந்தான தவித்துக் கொண்டிருந் தது?

மத்தியான வேளைகளில் வீட்டி லிருக்க எனக்குப் பிடிக்காது. அதுவும் வெயிலின் வேகம் ஏற ஏற என்னவோ மாதிரி இருக்கும். நல் லசாமிக் கவுண்டர் தோட்டத்துச் சாலையோரம் ஒரு கருவேலந் தோப்பு உண்டு. மரங்கள் குடை பிடித்தாற் போல குவிந்திருக்கும். அதன் நிழலில் பசும் தென்னந் தடுக்கை விரித்து உட்கார்ந்து கொள்வேன். படுத்தாலும் சுக மாகத் தூக்கம் வந்து விடும்.

சாதாரணமாக அந்த வேளையில் தான் கவுண்டருக்கும் ஓய்வு. என்னென்னவோ பேசிக்

கொண்டிருந்தாலும் கடைசியில் அவருடைய பெண்ணின் விஷயத்தில் தான் போய் நிற்கும் பேச்சு.

'என்னத்தை அப்புனு பண்றது. நீ எரக்கப்பட்டு என்னப்பா ஆவும்? நான் கும்பிட்ட சாமிகளுக்கு அந்த எரக்கம் வல்லியே! நாம் போவாத கோயிலுண்டா?' என்று கவுண்டர் கேட்கும் போது நம்மை அறியாமலேயே துக்கம் உண்டாகும். தங்காயாளைச் சாதாரணமாகப் பார்க்கிறவர்கள் அவள் வாயற்றவள் என்பதைக் கண்டு கொள்ளவே முடியாது. எப்போதும் சிரித்த முகத்துடன் தான் இருப்பாள். அவள் என்னைக் காணும் போதெல்லாம் வாய் நிறையச் சிரிப்புடன் தான் வரவேற்பாள். அவள் அழகிய கண்கள் என்னென்னத்தையோ பிரதி பலிக்கும். ஆனல், பாவம் பேச்சு ஒன்றும் தான் வெளிவராதே.

"அப்பா தம்பி" என்று கவுண்டர் உரிமை பாராட்டித்தான் எப்போதும் என்னைக் கூப்பிடுவார். ஊரில் எங்கள் இருவர் குடும்பத்திற்கும் ரொம்ப ரொம்பத் தொடர்பு உண்டு. ஆகையால் வீட்டுப் பெண்களும் முறை சொல்லித்தான் அழைப்பார்கள்.

"இதோ, உங்க அண்ணன் வந்திட்டானே. நீ சும்மா நிக்கறயே தங்கம்" என்று கவுண்டர் சொல்லிவிட வேண்டியதுதான் பாக்கி; உடனே தங்கம் ஓடிப்போய் நீர்மோரோ பானகமோ கொண்டு வந்து விடுவாள்.

தங்கம் தான் எங்கள் மனதை நன்கு தெரிந்து கொண்டாளே தவிர, நாங்கள் யாருமே அவள் உள்ளத்தைத் துளிக்கூட தெரிந்து கொள்ளவில்லை. தெரிந்திருந்தால் கவுண்டர் அப்பேர்ப் பட்ட காரியத்தைச் செய்யத் துணிந்திருப்பாரா?

எனக்கு முதலில் அதைக் கேட்டதும் நம்பவே முடியவில்லை. "ஐயோ, நம்ம நல்லசாமிக் கவுண்டரா இந்த முடிவுக்கு வந்திருக்கிருர்!" என்று திகைத்துப் போனேன். "என்ன அப்பா பண்றது? விருமத்தி புடிச்சாப்பலே நிக்கறயே. சித்தெ உக்காந்துதான் சொல்றதைக் கேளு. பொண்ணைப் பொறந்தா கண்ணாலம் பண்ணமே ஊட்டோடே வெச்சுக்க முடியுமா? அது போவட்டும். பண்ணுடி பண்ணயம் என்ன சிறிசா? நம்ம பக்கத்திலே இண்ணக்கி அதை மீர்ர குடும்பம் எங்கே ஒண்ணு சொல்லு?" என்ருர். 'அவர் குடும்பம் இருந்து பாழாய்ப்போச்சு' என்று நான் நினைத்துக் கொண்டேன். ஆனல் பணத்தை மட்டும் கவுண்டர் கருதுகிறவர் அல்லவே?

என்ன அடக்கியும் ஆத்திரம் அதிகரித்தது. "பண்ணுடி மகனுக்குத் தங்கத்தைக் கொடுக்கிறதைக்



காட்டிலும், குளம் குட்டையிலே புள்ளையைப் புடிச்சுத் தள்ளி விட லாமே! இதைவிட அது எவ்வ ளவோ நல்லது'' என்று கோபத்தை அடக்கிக் கொண்டு சொன்னேன்.

கவுண்டரும் என் வார்த்தை வேகத்தைப் புரிந்து கொண்டார் என்றே நினைக்கிறேன். அதனால்த் தான் கொஞ்ச நேரம் பேச்சு மூச் சில்லாமல் அசைவற்று நின்று கொண்டிருந்தார். மனசும்குமுறிக் கொண்டுதான் இருந்திருக்க வேணும்.

நினைக்க நினைக்க எனக்கு எரிச் சல் அதிகமாகிக் கொண்டே வந் தது. தாமரைப் பூவைப் பறித்து தரையில் போட்டதைப் போலல் லவா இருக்கிறது இது!

ஊர்ப் பண்ணடி மகனைப் பற்றி அனைவருக்கும் தெரியும். குணத் தை ஒருவரும் குறை சொல்ல வில்லை. அவனுக்கு இரண்டு கண் ணும் குருடு. அந்தக் கபோதிக்கா தங்கத்தைப் பலி கொடுப்பது! யார் தான் இதற்குச் சம்மதிப்பார்கள்?

(3)

மறுநாட் காலையில் கவுண்டரிடம் நான் கேட்ட செய்தி என்னை எங்கோ ஒரு மாய லோகத்துக்கே தூக்கிக் கொண்டு போய்விட்டது. ''அடேயப்பா, அதிசய—அற்புதச் சம்பவங்களுக்கு உலகில் ஒரு எல் லேயே கிடையாது போலிருக்கிறது. இன்னும் என்னென்ன விந்தைக ளெல்லாம் நடைபெறுமோ'' என்று ஆச்சரியத்தில் முழுகி விட் டேன்.

தங்கம் பிறவியிலே ஊமை இல் லேயாம். ஐந்து வயதுக் குழந்தை யாக இருக்கையில் இட்டேறி முக் கில் மாலை மசக்கலில் விளையாடிக் கொண்டிருந்தபோது 'காத்து'ச் சூழ்ந்து கொண்டதாம். அந்தக் 'காத்துக் கெரகம்' தான் குழந்தை வாய் அடைக்கும் படி செய்து விட்டதாம். கவுண்டரும் தன்னு

லான எல்லாக் காரியத்தையும் செய்து பார்த்தும், தங்கத்தின் வாய் அடைத்தே விட்டதாம். செங்காட்டு வலசு சின்னுனும், ''இது மருந்துக்கு ஒண்ணும் குண மாகாதுங்க. ஆத்தா கோபத்துக்கு நான் எந்தத் தலையைக் கசக்கிக் குடுத்தாலும் அதெல்லாம் கேக் காதுங்க'' என்று தீர்மானமாகச் சொல்லி விட்டதால், வைத்தியத் தைப்பற்றி பிறகு கவுண்டர் துளிக் கூட சிந்திக்கவே இல்லையாம்!

வேறு ஒன்றும் பேசாமல் நான் வந்து விட்டது எனக்குச் சற் றும் பிடிக்க வில்லைதான். இருந்தா லும் என்ன பண்ணுவது? கலி யாணக் காரியங்கள் என் கண்ணை உறுத்திக் கொண்டே இருந்தது. பச்சைப் பந்தல் சொல்ல முடியாத பதை பதைப்பை ஏற்படுத்திக் கொண்டே இருந்தது.

நேரம் ஆக ஆக என் மனசு ஏன் அப்படி அடித்துக் கொண்டது? என் கண்ணும் மனமும் ஏன் நிலை கொள்ள மாட்டேனென்கிறது?

தோட்டத்தின் கோடியிலே அழ கிய முல்லைப் பந்தல் இருக்கிறது. பந்தல் ஓரமாகப் பசும் புல் மைதா னம். மைதானத் தோரமாக இளம் சோளப் பயிர்களின் 'கம்' மென்ற மணம் நிறைந்திருந்தது.

அன்று அங்கு போனேன். கண் ணில் தங்கம் படவேஇல்லை. வீட்டி ற்குள்ளே தான் இருந்தாளா? ஆம். எங்கோஒரு மூலையில் வருங் காலத்

தைப் பற்றிய கனவில் ஆழ்ந்திருப்பாள். என்னென்ன சிந்தனைகள் உள்ளத்தில் உருக் கொண்டு ஓடிற்ருே? ஐயோ, பாவம். இந்தப் பாழாய்ப் போன வீட்டிலே அவள் ஏன் பிறந்தாள்? இல்லை, இல்லை, இந்தத்தங்கமான மனிதருக்கு அந்தத் தங்கமான பெண் ஏன் பிறக்க வேண்டும்? பிறந்ததில் என்ன குற்றம்? கவுண்டர் இப்படிச் செய்யத் துணிந்து விட்டாரே.

விடிந்தால் கலியாணம்! உம். விடிந்தால். ஆம், விடியாமலே இருந்து விட்டால்? எந்த மகராசியோ விடியாமலே இருக்கச் சாபம் கொடுத்து விட்டாளே? அப்படி ஒரு அற்புதம் நடக்கலாகாதா? எத்தனையோ விசித்திரங்கள் நடைபெறுகிறதே, இந்த மாதிரி ஒரு சம்பவம் நடந்து தங்கத்தின் வாழ்வு தளிர்க்கலாகாதா? காட்டுக் கொடி போல அவளும் கட்டுத்தளையின்றி யதேச்சையாக இருப்பாளே. காலடி ஓசை கேட்டது. ஸ்ரீமதி பார்வதி பி. ஏ. சிரித்துக் கொண்டு வந்து நின்ருள்.

"சாயங்காலத்தில் அப்படியே வெளியே போய் உலாவாமல் என்ன இப்படி அசையாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்களே" என்ருள்.

என் மனத்தின் அசைவு அவளுக்குத் தெரியவா போகிறது?

'எழுந்திருங்களேன், போகலாம்' என்ருள் பார்வதி.

"ஏனே நடக்கப் பிடிக்கவில்லை"

"தங்கமும் கூட வருகிறேன் என்கிருள்' என்ருள் அவள்.

"எங்கே"? என்று திடுக்கிட்டுக் கொண்டே சுற்று முற்றும் பார்த்தேன்.

"அவளிடமே கேட்டால்ச் சொல்வாளே"

எனக்குக் கோபம் வந்தது.

"விளையாட்டைப் புரிந்து கொள்ளாத மனிதர்களோடு நான் பேசுவதில்லை" என்ருள் பார்வதி.

"எல்லாச் சமயத்திலும் விளையாடிக் கொண்டிருப்பது சுத்தப் பைத்தியக்காரத்தனம்"

"இப்போது யாருக்குப் பைத்தியம் என்பது எனக்குச் சந்தேகமாயிருக்கிறது. எனக்கா அல்லது?"

"யாருக்கோ இருக்கட்டும். இப்போது நான் ஒன்றைப் பற்றியும் பேசப் பிரியப் படவில்லை"

"என்ன தங்கத்தைப் பற்றிக் கூடவா?"

நான் மௌன மாயிருந்தேன். பார்வதி கொஞ்சம் ஆச்சரியத்துடனே கேட்டாள். "ஆமாம், தங்கத்துக்குக் கலியாணமாமே. நல்ல பொருத்தம் தான்" என்று கூறிக் கேலிச் சிரிப்புடன் என்னைப் பார்த்தாள். பார்வதியை நான் துளியும் சலித்துக் கொள்ள வில்லை. 'பார்க்கும்' 'கிளப்பும்' டென்னிஸ் கோர்ட்டும் இல்லாத ஊரும் ஒரு ஊரா என்று எண்ணி விவாதிக்கும் பார்வதியிடம் பேசுவதில் பயனில்லை என்பது எனக்குத் தெரியும் அல்லவா?

ஆனல் கவுண்டரிடம் பேசிய பேச்சும் வீணுகி விட்டதே? எத்தனையோ அழகிய கற்பனை மாளிகைகள் கட்டி மகிழ்ச்சி யடைந்து கொண்டிருந்தேன். தங்கத்துக்கு ஒரு தங்கமான கணவன் வருவான் ஊரே பார்த்து அதிசயிக்கும். ஆனல் அதிசயப் படுகிறவர்களே 'பார்க்கப் போனல் இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? தங்கத்துக்கு தகுதியான கணவன் இந்த உலகில் ஏது?" என்றெல்லாம் சொல்வார்கள்.

அன்று காலையில் கவுண்டரிடம் கேட்டதற்குப் பிறகு இன்னும் வேறு வேறு திக்கில் என் சிந்தனைகள் சென்று கொண்டே இருந்தது.

அங்கொன்றும் இங்கொன்றுமா கக் கலைந்திருந்த மேகங்கள் ஒன்று கூடிக் கொண்டே வந்தன. மழைக் காற்று லேசாக அடிக்கத் தொடங் கியது. இன்னும் சற்று நேரத்தில் பெரு மழை கொட்டும் என்பதற்கு அறிகுறி தெரிந்தது. மின்னல்கள் சுழிக்கவும் தொடங்கி விட்டது. வீட்டிற்குப் போக எழுந்தேன். பார்வதியும் பேசிக் கொண்டுதான் கூட வந்தாள். ஆனல் என்ன பேசிக் கொண்டிருந்தாள் என்ப தொன்றும் எனக்குத் தெரியாது!

எதிர் பார்த்தபடி இரவில் பெரு மழை கொட்டத் தொடங்கி விட் டது. வெள்ளம் சோ வென இரை ச்சலிட்டுச் சுழன்ருேடிக் கொண் டிருப்பது என்னவோ ஒரு சோக கீதத்துக்குச் சுருதி கூட்டுவது போல் இருந்தது.

மழையோடு கலந்த பேரிடியின் முழக்கமும் காதைத் தொளைக்க ஆரம்பித்தது. ஏன் இந்த இடிகள்! இன்றைக்கு இயற்கைக்கு இத் தனை சீற்றம் ஏனே?

ஆம். இயற்கைத் தேவிக்கே கொடுமையைப் பொறுக்க முடிய வில்லை. வெள்ளத்தில் எல்லாமே முழுகி ஆழ்ந்து உருத் தெரியாமல்ப் போகப் போகிறது. பசும் பந்தல் —தோட்டம், காடு—கவுண்டர்— தங்கம்—சே. சே. என்ன கொடூ ரக் கற்பனை இது! ஆனல்...ஆனல் ...கல்யாணம் நடைபெருது! இது மட்டும் நிச்சயம். வருகிறவர்கள் யாரும் சரியான சமயத்தில் வந்து சேரமுடியாது. முகூர்த்தம் எப்படி யும் தடைப்பட்டே போகும். ஏற் பாடுகள் எல்லாம் இந்த வெள்ளக் காட்டில் எப்படி ஒழுங்காக நடை பெறும்? இதைத் தடுக்கத் தான் இந்த மழையும் இடியுமோ? யார் கண்டார்கள்?

கண் கூசும்படியான மின்னல் வெட்டியது. தங்கக் கொடிகள் வான வீதியில் புரண்டன. அட டா! வானம் வெடித்ததைப் போ ன்ற அந்தப் பேரிடி! ஐயோ! இவ் வளவு பக்கத்தில் கேட்கிறதே! எங் கே விழுந்ததோ?

காலையில் எழுந்து கவுண்டர் தோட்டத்துப் பக்கம் புறப்பட் டேன். அன்று கொஞ்சம் 'தெம்பு' வந்த மாதிரி இருந்தது. முதல் நாள் ஏற்பட்ட தாங்கல் பறந்தோடிவிட் டது. ஒருவிதத்தில் கலியாணம் தடைப் பட்டது சற்று ஆறுதலா யிருந்தது.

ஆனல் கலியாணம் தடைபட்டுப் போயும் கவுண்டருடைய முகத்தில் புன்னகை தாண்டவ மாடுவதை யும், அவர் வீட்டைச்சுற்றி மலர் ந்த முகத்தோடு பலர் கூடியிருப்ப தைப் பார்க்கவும் எனக்கு ஆச்சரி யமாயிருந்தது. சங்கதியைக் கேட் டவுடன், "ஐயா, கவுண்டரே, முதலில் இது பூலோகம் தான என் பதைச் சொல்லுங்கள். இந்திர லோகம் சந்திர லோகம் அல்லவே" என்று என்னை நானே தெளிவு படுத்திக் கொண்டேன்.

இரவு கிடு கிடுக் கும்படி இடித்த பெருத்த இடி எங்கோ பக்கத்தில் பனை மரத்தில் விழுந்திருக்கிறது. அந்தப் பேரிடியைக் கேட்டுத் தங்கம் கலங்கிப் போய்விட்டாள். அவள் கலக்கம் எல்லோரையுமே ஆனந்தத்தில் ஆழ்த்துவதாகி விட் டது. நடந்தது இதுதான். பயத்தால் அடைத்துப் போயிருந்த வாய் மீண் டும் பயத்தினலே பேசிவிட்டது! 'அம்மா' என்று அவளையும் மீறிக் கத்தி விட்டாள். அப்புறம் தங்கம் பேசத் தொடங்கிவிட்டாள். பிறகு விடியும் மட்டும் தங்கத்தை சும்மா விடவில்லை. இப்போதும் ஊர்ப் பெண்கள் அவள் வாயைக் கிளறிக் கொண்டு இருந்தார்கள்.

இந்தக் காட்சிகளைக் கண்டு அப்படியே மெய்மறந்து நின்றேன். உண்மையில் சொல்லப் போனல் என் வாய்தான் அடைத்துப் போய் விட்டது! இனி, தங்கத்தின் வாழ்க் கை? தங்கமேதான்!

‘தேடாத கண்ணெல்லாம் தேடுமே’

கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் வசந்தத்தை மனமார வாழ்த்துகிறார்கள். ‘செந்தமிழைப் பாடாத வாயும், தேடாத கண்களும் தேடும்’ என்பதிலேயே உள்ளம் குளிர்ந்து விடுகிறது.

தமிழ் நாட்டின் இரு கண்களான டி. கே. சிதம்பரநாத முதலியார், சர். ஆர். கே. சண்முகம் செட்டியார், ஆகிய இருவரும், நம்முடைய கலை வளம் இன்னது, என்பதைத் தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். ‘தமிழர்களைக் கண்ணும் பொத்தி வைத்து விளையாடி விட்ட’ பண்பாட்டை டி. கே. சி. நமக்கு எடுத்துச் சொல்லும் போதே பண்பாடு நம்மை வந்து அடைந்து விடுகிறது!

‘நெஞ்சை அள்ளும் சிலப்பதிகார’த்தை ஆர். கே. எஸ். அவர்கள் நெஞ்சை அள்ளும் விதத்தில் தொடர்ந்து எழுதி வருகிறார்கள்.

தமிழுக்கே புதிதான வான் நூல் ஆராய்ச்சியில் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகாய மளவும் நம் எண்ணத்தைத் தூண்டும் ராஜாஜியின் இந்த அருமையான கட்டுரைகள் தொடர்ந்து வரும் என்பது மகிழ்ச்சிக் குரிய விஷயமாகும்.

சுவாமி சுத்தானந்த பாரதியாரின் நடை வேகத்தைத் தனியாக எடுத்துச் சொல்ல வேண்டியதில்லைதான். வசந்த வனத்தில் சுவாமிகள் சிந்தனைகளை உலவவிடத் தொடங்கியிருப்பது பாக்கியம்தான்.

தேகத்தைப் பற்றி, என், உடல்த் தத்துவத்தைப் பற்றியே எழுதுவதற்கு டாக்டர் திருமூர்த்தியைவிட வேறு சிறப்பான ஒருவரைக் காண்பது அரிது.

தமிழ்ச் சோலையில் தேக்கித் திளைத்து, தாம் பெற்ற இன்பத்தைப் பிறருக்கு உதவும் திரு. மு. அருணாசலம் இலக்கியக் கட்டுரை ஒன்று எழுதியிருக்கிறார்.

‘அழியாத அழகு’ என்னும் அழியாக் கதையை திரு. தூரன் அவர்கள் படம் பிடித்துக் காட்டுகிறார். கற்பனையும் கருத் தழகும் இயற்கையாகவே அமைந்திருப்பது தூரன் அவர்களுடைய தனிச்சிறப்பு.

திரு. ஆர். ஷண்முக சுந்தரத்தின் சொந்த நாவல், சிறுகதை, கட்டுரைகள் முதலானவை தமிழ் இலக்கியத்திற்கே புதிதானது. இந்த இதழில் வெளியாகி யிருக்கும் சிறுகதை அதற்கு அத்தாட்சி.

திரு. கோதண்டராமன் அவர்கள் கலை அழகு ததும்பும் நாடகம் ஒன்றை வெற்றிகரமாக வரைந்திருக்கிறார். விசாலமான மன ஓட்டம் இந்த நாடகத்தில் அப்படியே பதிந்திருக்கிறது.

இளம் சித்திரக்காரர்களான நந்தி, கண்ணன், இன்னும் தேர்ந்த திரு. ஆர். டி. கிருஷ்ணமூர்த்தி இவர்களுடைய படங்கள் மலர்ந்திருக்கிறது. பிரபல சித்திரக்காரர் சாந்தாராம் முகப்புப் படத்தைத் தீட்டியிருக்கிறார். வனப்பு மிக்க நவ நவ வர்ணச் சித்திரங்கள் ஒவ்வொரு மாதமும் வசந்தத்தை அழகு படுத்திக்கொண்டே இருக்கும்.

ஆசிரியர்

விளம்பர தாரர்களுக்கு

விளம்பரங்களுக்கான

பிளாக்குகளையும்,

விஷயங்களையும்,

ஒரு வாரத்திற்கு முன்பே

விளம்பரதாரர்கள் அனுப்பி

வைத்து விட வேணுமாய்க்

கேட்டுக் கொள்கிறோம்.

THE VASANTHA DYING WORKS.

181. Oppanakara Street
Coimbatore.

Phone No. 155. **Estd., 1921.**

Proprietor
C. M. Subramanya Chettiar
CONTRACTOR
To
THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.

For all kinds of dying border yarn and tie yarn etc., undertakes any variety of colour dying at reasonably cheap rates for dying all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's Underwear Sport Shirts etc.

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP"
COIMBATORE.

The
ROYAL HINDU RESTAURANT COIMBATORE

புது விலாசம்

வசந்தம்

காரியாலயம்

4/12 A. திருச்சி ரோடு

கோயமுத்தூர்.

டெலிபோன் : 100. தந்தி: "தாஸ்கௌட்."

N. தாசேகவுண்டர் & கோ.

உங்கள் தேவைகளுக்கானவற்றிற்கு எங்களை விசாரியுங்கள்!

மருந்து வகைகள்,

வைத்தியக் கருவிகள்,

நூதன சாமான்கள்,

எனமல் கண்ணாடி சாமான் தினுசுகள்

முதலியவைகளுக்கும்;

ஏஜெண்டுகள்:- அண்டர்வுட் டைப்ரைட்டர், பேவர் லூபா மெரிடினு, ஒமெகா, டிஸ்ஸாட் வாட்சுகளுக்கும் மற்றவகை கடியாரங்களுக்கும்;

பிரசித்தி பெற்ற இடம்

உயர்ந்த ரக சோடா கலர் தினுசுகள் தயாரிக்கிறோம்.

N. Dasai Gownder & Co.,

CHEMISTS & DRUGGISTS,

Avanashi Road, Coimbatore.

FANINK

பான் இங்க்

1. அந்நிய நாட்டுச் சரக்குகளுக்கு எவ் விதத்திலும் தாழ்வில்லாதது.

2. நிறம் மங்காதது. உத்திரவாத முள் ளது.

3. பௌண்டன் பேனுக்களுக்கும் இதர பேனுக்களுக்கும் உபயோகமாகிறது.

4. மற்ற மைகளைக் காட்டிலும் விலை சகாயமானது.

5. நீங்கள் கொடுக்கும் பணம் உங்கள் நாட்டையே சேருகிறது.

ஆலயம் இங்க் பாக்ட்ரியார் தயாரிப்பு.

பூரண விநியோகம்:—

ஜெயலெட்சுமி டிரேடிங் கம்பெனி,

அவனுசி ரோடு P. B. 49. கோயமுத்தூர்.

எங்கள் டூரிங் டாக்கீஸுகள் தென்னாடெங்கும்

குதூகலம் அளிக்கின்றன.

கோவை நகரின் மத்தியில்
நவீன வசதிகள் நிறைந்த

சினிமா தியேட்டர்கள் **3** சினிமா தியேட்டர்கள்

ஸ்தாபிதம் 1914.

வெரைட்டி ஹால்

ஹிந்தி படங்கள்

ஸ்தாபிதம் 1935.



பேலஸ் இங்கிலீஷ் படங்கள்

ஸ்தாபிதம் 1925.



எடிசன்ஸ் தமிழ்ப்படங்கள்

மாலை நேரங்களை மகிழ்வுடன் கழிக்க.

பிரபல படங்களின் விவரம் அனுதினம்

வரும் நோட்டீசுகளில் காணுங்கள்.

"சூழாமற் றானே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு"

என்றதால், குடும்பப் பாதுகாப்பிற்காக ஒவ்வொருவரும் இன்சூர் செய்யவேண்டியது குடும்பத்தார்களுக்கு வள்ளுவர் வகுத்த

முறையாகும்



அன்று

நாவுக்கரசு யானையைக்கண்டு

இன்று

நாம்

யுத்தத்தைக் கண்டு

நீங்கள்

"அஞ்சுவதியா தொன்றுமில்லை;
அஞ்சவருவது மில்லை"

விரோதியால் ஏற்படும் சேதத்திற்கு முழு உரிமை அளிக்கும்.

இந்தியா லைப் பெனிபிட் அசூரன்ஸ் சொசை டியில் இன்சூர் செய்திருப்பின்:

"இல்லக விளக்கது இருள் கெடுப்பது"

மனைவிமக்கள் வாடாமே செம்பொனைத் தந்தருளும்,

சேர்மென்

திவான்பகதூர், C. S. இரத்தினசபாபதி முதலியார் Avl., C.B.E.

மற்றும் எல்லா விவரங்களுக்கும் வெறைட்டி ஹால் ரோட்டிலுள்ள தலைமை ஆபீசுக்கு நேரில் ஒரு முறை வந்து விவரம் தெரிந்து கொள்ளலாம்.

Enquiries Solicited for

your requirements in :--

SANITARY FITTINGS

ELECTRICAL GOODS

MILL STORES

AND

TOMCO PRODUCTS.

K. B. Rajagopal

Raja Street

COIMBATORE.

APR
உத்தரவாதநல்லெண்ணெய்
ஸ்டோர்ஸ்
புதுமார்க்கெட் ✣ கோயமுத்தூர்

நமக்கு இரும்புத் தசைகளும், உருக்கு நரம்புகளும் வேண்டும் என்று வீர முழக்கம் செய்தார் சுவாமி விவேகானந்தர். அந்தக் காரியத்தைச் சாதிக்க வல்லது A. P. R. நல்லெண்ணெய் என்பதில் சந்தேகமே கிடையாது என்று அநேக பெரியார்கள் மனப் பூர்வமாகப் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள்! கலப்பும் கசப்பும், கழுறு மற்றது. மணமுள்ள அதிசுத்தமான புது நல்லெண்ணெயை உபயோகித்து வலிவும் வனப்பும் அடைந்தவர்கள் தொகை கணக்கில் அடங்காது!

ஸ்ரீ பழனி ஆண்டவர் டிரேட் மார்க்கையும் நன்கு கவனித்து வாங்குங்கள். வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்

வசந்தம் சந்தா விவரம்

ஒரு வருஷத்துக்கு ரூ	9	0	0
தனிப் பிரதி விலை அணா	0	12	0

நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்து விட்டால் பிரதி தமிழ் மாதம் முதல் தேதிகளில் 'வசந்தம்' உங்களைத் தேடி வந்து விடும். விளம்பர விவரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்,

வசந்தம் காரியாலயம்

4/12 A. திருச்சி ரோடு

கோயமுத்தூர்

199784

Printed at the Vasanta Mills Press, and Published by A. Krishna swamy, at 4/12, A. Trichy road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam.

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

வசந்தா மில்ஸ்

(லிமிடெட்.)

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

நூற்றல்:

20 நெ. முதல் **44** நெ. வரை, ஒத்தை, முருக்கு, காரம், சலவை நூல் தயாரிக்கிறோம்.

1934-ஹு கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சி பத்திரம் பெற்றிருக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

மல் சர்டிங்

லாங்கிளாத் சதர்

வேஷ்டிகள் டவல்

தயாரிக்கிறோம்

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

Regd. No. M. 4519 VASANTHAM

...aper printed at P. S. G. C. I. I. Press, Peela...